

வித்தியா தீபம்
විද්‍යා දීප
③ ④
கல்வியல் கல்லூரி
வவுனியா
අධ්‍යාපන විද්‍යා පීඨය
වවුනියාව

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60.142

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Birds eye view of Our College

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வவுனியா கல்வியியற் கல்லூரி

### நான்காம் ஆண்டு

# நிறைவு விழா மலர்

## 18-10-1997

**வவுனியா கல்வியியற் கல்லூரி,**
பூந்தோட்டம்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வி. கே. கோல்ட் ஹவுஸ்

123/3, துளமாடி, செட்டியார் தெரு,
கொழும்பு – 11.
தொலைபேசி: 392940

வளர்க
வித்தியா தீபம்

# වී. කේ. ගෝල්ඩ් හවුස්

123/3, හෙට්ටි වීදිය,
කොළඹ – 11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# සිව්වස් සැමරුම නිමිත්තෙන් රිචර්ඩ් පතිරණ මහතාගෙන් සුබ පැතුම් පණිවුඩයක්

වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨයේ සිව්වස් සැමරුම නිමිත්තෙන් එළි දක්වන "විද්‍යා දීප" සඟරාවට සුබ පැතුම් පණිවුඩයක් නිකුත් කරන්නට ලද අවස්ථාව සතුටට කරුණකි.

ඔබ විද්‍යා පීඨය සිව්වස් සැමරුම පවත්වන්නේ, ගුරු අධ්‍යාපනය පිළිබඳව අප සුවිශේෂ අවධානයකින් කටයුතු කරමින් සිටින යුගයකය. නව ගුරු අධ්‍යාපන සංවර්ධන ව්‍යාපෘතියක් යටතේ, අධ්‍යාපනයේ ප්‍රගතිය සඳහා අවශ්‍ය මූලික සම්පත ගුරුවරයාය. යන මතයේ පිහිටා ගුරු අධ්‍යාපනයට ප්‍රමුඛස්ථානයක් දීමට අවශ්‍ය පියවර දැනටමත් ගනු ලැබ ඇත.

ගුරු අධ්‍යාපනයේ සෑම අංශයක්ම වත්මන් අවශ්‍යතාවයන්ට ගැළපෙන පරිදි නවීකරණය කිරීමත්, ඉදිරියේදී වෘත්තිය පුහුණුව ලත් ගුරුවරුන් පමණක් පාසල්වලට පත් කිරීමත් අපගේ අරමුණු අතරවේ. අලුතෙන් තවත් විද්‍යා පීඨ පහක් ඇති කරනු ලැබේ.

විද්‍යා පීඨ මඟින් බිහි කරන නවක ගුරුභවතුන් නව සියවසට ඔබින අධ්‍යාපනයක් සිසු දරුවනට ලබා දීම සඳහා හැකියාව ඇති පිරිසක් වනු ඇත. යනු අපගේ දැඩි බලාපොරොත්තුවයි. සිව්වස් සැමරුම සඳහා එක්වන වවුනියා විද්‍යා පීඨයේ ගුරු සිසු සැමගේ අනාගතයට සුබ පතන අතරම, ගුරු වෘත්තියට එළඹෙන්නට සූදානම් වන ඔබ සැම, ගුණයෙන් මෙන්ම, නැණයෙන් ද හෙබි තරුණ පිරිසක් වේවායි සුබ පතමි.

රිචර්ඩ් පතිරණ
ගාලු දිස්ත්‍රික් පාර්ලිමේන්තු මන්ත්‍රී,
අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍ය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி வாழ்க்கை பூராவும் யாவர்க்கும் எவ்வித தேவைகளுக்கும் உதவும் வங்கியாகும்.

**சேமிப்புக் கணக்குகள் :** சிறார்க்கு, மாணவர்கட்கு, வனிதையர்க்கு, வயது வந்தோருக்கு, இப்படிப் பலவகை (தனித்தனி அம்சங்களுடன் பெருந்தொகை பரிசுப் பணங்கள், பரிசில்கள் - மாதாந்தம், கால்வருடம், வருடாந்தம் வழங்குகிறது. மிகப்பல ஊக்குவிப்புகளுடன் மிகச் சிறந்த சேமிப்பு கணக்கு வசதிகளுண்டு)

**வைப்புக் கணக்கு :** 7 நாள் வைப்பு, நிலையான வைப்பு (கடன் வசதிகளுடன் சேமிப்பு சான்றிதழ்கள், வைப்புச் சான்றிதழ்கள்.

**நடைமுறைக்கணக்குகள்:** நானாவித தேவைகளுக்கும் (சிறந்த கணக்கு நடைமுறைப் படுத்துவோருக்கு சேவைத்தரகு இல்லை- மேலதிகப் பற்று வசதிகளும் உண்டு)

**வெளிநாட்டு நாணய வைப்புக் கணக்குகள் :** வெளிநாட்டில் வதிபவர்கட்கும், உள்நாட்டில் வதிபவர்கட்கும் வசதிகள் உண்டு.

**கடன் வசதிகள் :** விவசாயம், மீன்பிடி, கால்நடை வளர்ப்பு, பால் பண்ணை, கோழி வளர்ப்பு, வீடு கட்டல், கொள்வனவு செய்தல், (ஆசிரியர்கட்கும் சௌக்கிய தேவைப் பகுதி ஊழியர்கட்கும் குறைந்த வட்டி விகிதத்தில்) கைத்தொழில், வியாபாரம், தனிப்பட்ட வைத்திய சேவை, வாகனக் கொள்வனவு, வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெறுவோருக்கும் மேலும் பல கடன் வசதிகட்கும்.

மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள கிளைமுகாமையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**மக்கள் வங்கி,**
**பிரதேச தலைமைக் காரியாலயம்,**
**(வன்னி),**
**வவுனியா.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK


தி/ஸ்ரீ கணேச அச்சகம். தொலைபேசி : 026-22617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# අධ්‍යාපන විද්‍යාපීඨ කොමසාරිස් තුමාගෙන්...

වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨයේ සිව්වන සංවත්සරය නිමිත්තෙන් එළි දක්වන විද්‍යාදීප වාර්ෂික සංග්‍රහයට පණිවිඩයක් නිකුත් කරන්නට ලැබීම ගැන සතුටු වෙමි.

නව ලොකයෙන් එල්ලවෙන අභියෝගයනට මුහුණදිය හැකි තර්කානුකූල හා නිර්මානශීලි චින්තනයකින් හෙබි සමබර පෞරුෂයකින් යුත් කාර්‍ය්‍ය ශූර ආදර්ශවත් ගුරු පරපුරක් බිහි කිරීම කාලීන අවශ්‍යතාවයකි. වර්තමාන පරපුරටත්, අනාගත පරපුරටත් මාර්ගෝපදේශකත්වය දිය හැකි ගුරුවරයා රටට, දැයට සම්පතකි. වෙනස්වෙන ලොකයට නොබියව . නොසැලී ඉදිරියට යා හැකි ගුරු පරපුරක් බිහි කිරීමෙහිලා අධ්‍යාපන විද්‍යා පීය තුළින් කෙරෙන සේවය අති විශාලය.

අධ්‍යාපන විද්‍යාපීය සංකල්පය මුදුන්පත් කර ගැනීමෙහිලා වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨය ගතවූ සිව් වසර තුළ ඇප කැප වී කල සේවය ප්‍රකාශ කෙරෙන එක් සංඥවක් ලෙස මෙම සඟරාව හැඳින්විය හැකිය. විද්‍යා පීඨ පරමාර්ථ ඉටුකර ගතිමින් ඉදිරියට යන අභිමානවත් ආයතනයක් බවට වවුනියා අධ්‍යාපන විද්‍යාපීය පත් වේවායි ප්‍රාර්ථනා කරමි.

මෙම සඟරාව පළ කිරීමෙහිලා උපදෙස් දෙමින් මඟ පෙන්වීම් කල පීඨාධිපති තුමාටත්, ඇප කැප වූ සංස්කාරක මණ්ඩලයටත් මාගේ ප්‍රශංසාව හිමිවේ.

**නිහාල් හේරත්.**
අධ්‍යාපන විද්‍යා පීඨ,
ප්‍රධාන කොමසාරිස්.
අධ්‍යාපන හා උසස් අධ්‍යාපන අමාත්‍යංශය.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments From:*

# SEYLANBANKING

V

REDEFINING
BANKING
IN SRI LANKA

SEYLAN
BANK LIMITED
THE BANK WITH A HEART

SEYLAN BANK
THE BANK WITH A HEART

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வவுனியா கல்வியியற் கல்லூரி
## பீடாதிபதி
## அவர்கள் அளிக்கும்
# ஆசிச் செய்தி

வவுனியா கல்வியியற் கல்லூரி அமைக்கப்பட்டு அகவை நான்கு நிறைவுறும் இவ் வேளையில் இக்கல்லூரியின் இரண்டாவது மலராக வெளிவரும் **"வித்தியா தீபத்திற்கு"** ஆசியுரை அளிப்பதில் அகமகிழ்வு அடைகின்றேன்.

வவுனியா கல்வியியற் கல்லூரி பல்வேறு இடைஞ்சல்களுக்கு இடையிலும் சிலரது போட்டி பொறாமைகளுக்கு மத்தியிலும், யுத்த காலச் சூழற் சிக்கலிலும் தலை நிமிர்ந்து தனிநடை போடுகின்றளவிற்கு வளர்ச்சிகண்டு வருகின்றது. தமிழ், சிங்கள, முஸ்லிம் ஆசிரிய மாணவர்கள், விரிவுரையாளர்கள் - ஊழியர்கள் - கூட்டுக் கலவையில் ஒன்றுபட்ட உழைப்பில் இந்நாட்டு மக்களுக்கு இன ஒற்றுமையின் ஓர் எடுத்துக் காட்டாக இக்கல்லூரியின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

கடந்த ஓராண்டு காலமாக (15-06-1997 - 15 -8-1997) இடம்பெயர் மக்களுக்கும் இடம் கொடுத்து கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளைக் கொண்டிழுத்துச் செல்ல வேண்டிய நிலையிலிருந்தோம். இன்று அவர்கள் எமது கட்டிடத் தொகுதிகளைவிட்டு வெளியேறிய போதும், எமது கல்லூரி வளவின் அக்கம் பக்கங்களில் கொட்டில்கள் அமைத்து நெருக்கமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவை அவர்களுக்கு அவலம் அளிப்பது மட்டுமன்றி, ஏதோ ஒரு விதத்தில் எமது கல்விசார் நடவடிக்கைகளுக்கும் குந்தகமாகவே இருக்குமென்பது வெள்ளிடைமலை.

எமது கல்லூரியின் முதல் வெளியீடாக 97 ஆசிரிய மாணவர்கள் பூரண பயிற்சி பெற்று, நாட்டின் நாலா பக்கங்களிலும் ஆசிரியர்களாகப் பதவி ஏற்றுள்ளமை குறித்து நாம் பெரிதும் உள உவகை உறுகின்றோம்.

இவ்வாண்டு (1997) வழமைக்கு மாறாக நாம் 240 ஆசிரிய மாணவர்களை அதிகளவாக இக்கல்லூரிக்கு அனுமதித்துள்ளோம். வெறும் பெயருக்கன்றி உண்மையிலேயே உயர் ஆசிரியர்களை உருவாக்கும் கலைக்கூடமாக இக்கல்லூரி மிளிர வேண்டும். இதற்கு ஏதுவாக இடையறா முயற்சியும் கடின உழைப்பும் எமது ஆசிரிய மாணவர்களுக்கு அவசியமாகும். இன்னும் இவர்களை வழிநடத்துகின்ற விரிவுரை ஆசான்கள் இதற்கமைவாகத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ளுதல் சாலச் சிறந்தது. மனிதத் தன்மை வளர்வதற்கு வேண்டிய அன்பு, அகங்காரமின்மை, அடக்கமுடைமை, பொறுமை, பொறாமையின்மை பொறுப்புணர்வுடைமை, உழைப்பு, உண்மை, உயர்வுள்ளும் தன்மை, எம் ஆசான்கள் அனைவரிடத்தும் ஆட்கொள்ள வேண்டும். தன்னல நோக்கு சற்றுத் தளர்ந்து, பொது நலப் போக்கு பொலிவுற வேண்டும். இவ்வொழுங்கு ஒழுக்க அடிப்படையிற்றான் கல்லூரியின் அறுவடை அபரிதமாக அமையும்.

இக்கால கட்டத்தில் இம்மலர் வெளிவருவது குறித்துப் பாராட்டுதல் வேண்டும். இம்மலருக்கு ஆக்கங்கள் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகள், இதிலுள்ள பயனுள்ள பகுதிகளைப் படித்துப் பலரும் பயன்பெறவேண்டும். இம்மலர் சிறப்புற அமைவதற்கு அயரது உழைத்த அனைவருக்கும், குறிப்பாக விரிவுரையாளர் திரு. ரி. எம். தேவேந்திரன், உப பீடாதிதியும் விரிவுரை இணைப்பாளருமான திரு. கே. பேர்ணாட் ஆகியோருக்கும் எனது உளமார்ந்த நன்றிகளும், பாராட்டுதல்களும். இம்மலர் இனிவரும் ஆண்டுகளிலும் தொடர்ந்து மணம்பரப்ப இறைவனின் ஆசியும் அருளும் கிடைப்பதாக.

நன்றி

**செ. அழகரெத்தினம்**
பீடாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# පීඨාධිපති තුමාගෙන්....

වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨය සිව්වන සංවත්සරය සමරණ මේ අවස්ථාවේ විද්‍යාදිප දෙවන කලාපයට පණිවුඩයක් කීමට අවස්ථාවක් ලැබීම භාග්‍යයක් කොට සලකමි. අනාගත අභියෝගයනට මුහුණ දීමට අවශ්‍ය ශක්තිය ධෛර්‍යය සමඟ ගුරු කුසලතා ප්‍රගුණ කර ගන්නට ඉඩ කඩ ලබාදීමේ අභිලාශයෙන් පිහිටුවා තිබෙන මෙම විද්‍යා පීඨය උතුරු. දකුණු සම්බන්ධකරණ සම්පත් මධ්‍යස්ථානයකි.

සිංහල. දෙමළ හා මුස්ලිම් යන විවිධ ජාතීන් හා සංස්කෘතීන් එකම වහලක් යටට වී ජාති. ආගම්. භේද වලින් තොරව සාමයෙන්. සමඟියෙන් . හා සහෝදරත්වයෙන් සිටිම. ගුරු පුහුණුව ලබන මානවක මානවිකාවන් මෙන්ම සේවය කරන කථිකාචාර්ය මණ්ඩලයයත්. අධ්‍යයන කාර්ය මණ්ඩලයක් මුළු රටටම දෙන ආදර්ශයකි.

විද්‍යා පීඨයෙහි පුහුණුව ලැබූ ප්‍රථම කණ්ඩායම මෙමවර්ෂයේ ගුරු පත්වීම් ලැබ දිවයින පුරා විසිරී අප කීර්තිනාමය සමඟ විඳුණැන පැතිරී වීමේ වාසනාව ලබා ඇත. ඒ වගකීමෙන් හා කැපවී මෙන් සේවය කල කථිකාචාර්ය මණ්ඩලය ලැබූ මහඟු ප්‍රතිඵලයකි. ඒ නිසා ගුරු පුහුණුව ලබා දීමේ අවස්ථා වැඩි කිරීමේ අවශ්‍යතාවය මත මෙමවර්ෂයේ අභ්‍යාසලාභින් 240ක් ඇතුලත් කර ගැනීමට අපේක්ෂිතය.

පසුගිය වර්ෂයක පමණ කාලය තුළ විදයා පීඨයෙහි ගොඩනැගිලි වලින් අඩකටත් වැඩි ප්‍රමාණයක් සරණාගත කඳවුරක් සඳහා යොදා ගෙන තිබූ බැවින්. අධ්‍යාපන කටයුතු කරගෙක යාමට තරමක් බාධා පැවතුනත් දැන් ඔවුන් විද්‍යා පීඨ භූමියෙහිම කොටසක සැදූ තාවකාලික ගොඩනැගිල වල පදිංචි කරවීම නිසා යතෝක්ත බාධක තරමක් මඟ හැරී අධ්‍යාපන කටයුතු කරගෙන යාමට සුදුසු පසුබිමක් යලිත් උදා වී ඇත.

ලේඛන කලාවට ඇල්මක් දක්වන සියළු දෙනාටම සිය කුසලතා දියුණු කර ගන්නට අවස්ථා සළසා දෙමින් මෙවැනි සඟරාවක් එළි දැක්වීමෙහි ඇප කැප වී කටයුතු කළ සම්බන්ධිකරන කථිකාචාර්ය හා උප පීඨාධිපති (අධ්‍යාපන) කේ. බර්නාඩ් හා සංස්කාරක මණ්ඩලයේ ටී. එම්. දේවේන්දන් මයා ඇතුළු අනෙකුත් සියළු දෙනාටත් මාගේ හෘදයාංගම ස්තුතිය පිරිනමමි. මීටත් වඩා දැනුමින් පෝෂණය වූ සඟරා නව නවත් බිහි කිරීමේ අවස්ථා උදා වේවායි ප්‍රාර්ථනා කරමි.

එස්. අලගරත්නම්,
පීඨාධිපති.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அதிபர் / மாவட்ட செயலாளர்
# க. கணேஷ் அவர்களின்
# ஆசிச் செய்தி

வவுனியா கல்வியியல் கல்லூரி தனது நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் "**வித்தியாதீபம்**" சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு மகிழ்ச்சியும், மனநிறைவுமடைகின்றேன்.

கல்வியறிவில் கருக்கொண்டவர்களை உருவாக்குவதில் கல்வியியல் கல்லூரிரிகளின் பணி மிக மேலானது.

எமது எதிர்கால சந்ததியினரை சிறந்தவர்களாகவும், உயர்ந்தவர்களாகவும் உருவாக்கும் மிகப்பாரிய பொறுப்பு ஆசிரியர்களினதாகும். எனவே இவர்களை உருவாக்கும் கல்வியியல் கல்லூரிகளின் பொறுப்பு மிகக்காத்திரமானது.

கல்வி எந்தச் சமூகத்துக்கும் அவசியமானது. இன்றைய கால பொதுசன தொடர்புகளுக்கு கல்வி அறிவு மிகமிக அவசியமானது.

எமது பிராந்தியத்தில், சமகாலத்தில் நிகழும் பிரச்சினைகளால் கல்வித் துறையானது பின்தள்ளப்பட்டுள்ளது என்பது கவலைக்குரியதொரு விடயமாகும். இத்தகைய பின்னடைவுகளைச் சீர்செய்வதில், கல்வியியல் கல்லூரிகளிலிருந்து வெளியேறும் ஆசிரியர்களுக்கும் பாரிய பங்குண்டு என்பதனை மறந்துவிடலாகாது.

துயரமான, துக்கமான, அதேவேளை இக்கட்டான காலகட்டத்தில் தனது நான்காம் ஆண்டு நிறைவை முன்னிட்டு "**வித்தியாதீபம்**" என்றொரு சஞ்சிகை வெளியிடப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இச்சஞ்சிகை சமகால ஆய்வுகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் தரமான ஆக்கங்களுடன் வெளிவரும் என நம்புகின்றேன்.

உயர்ந்த தரத்திலும், சிறந்த முறையிலும் "**வித்தியாதீபம்**" ஒளிவிட்டு பிரகாசிக்க வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**க. கணேஷ்**
அரச அதிபர்/மாவட்ட செயலாளர்,
வவுனியா.

**15-09-1997**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வித்தியா தீபத்திற்கு

எமது நல்லாசிகள்

# "கூட்டுறவே நாட்டுயர்வு"

# வவுனியா பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ප්‍රේමරත්න සුමතිපාල මහතාගෙන් විද්‍යා පීඨ සඟරාවට

## සුභ පැතුම් !

වවුනියාව අධ්‍යාපන විද්‍යාපීඨයේ වාර්ෂික සංග්‍රහයට පණිවුඩයක් එවීමට ලැබීම ගැන සතුටුවෙමි.

ඉතා සීමිත පහසුකම් මැද යුද්ධයේ පීඩනයටද මැදිවී අධ්‍යාපනයේ යෙදෙන සිසුන්ටත් එම අනගි කාර්යයට උරදෙන ගුරු මණ්ඩලයටත් මගේ ප්‍රසාදය හිමිකරනු කැමැත්තෙමි.

ශ්‍රී ලංකාවේ අනිකුත් විද්‍යා පීඨ සමඟ සංසන්දනය කැරෙන විට වවුනියාව වැනි සීමිත පහසුකම් වලින් හෙබි නගරයක විද්‍යාපීඨයක් සතුටුදායක තත්ත්වයෙන් පවත්වාගෙන යාමම ප්‍රශංසා කටයුතු කරුණකි. විශේෂයෙන් මෙහි සිටින සිසු සිසුවියන්ගේ බහුතරය අප ප්‍රදේශයේ අයවලුන් වීම අධ්‍යාපනය විෂයයෙහි ලා කැරෙන මහඟු යුතුකමක්ද වේ.

අතිගරු ජනාධිපතිනිය විසින්ද පෙන්වා දී ඇති පරිදි මේ රටේ විශිෂ්ඨ දරු පරපුරක් බිහි කිරීම සඳහා මෙම විද්‍යාපීඨ යෙන් බිහිවන සිසුන් කැපවන බවට මට සැකයක් නැත. ඔබේ වාර්ෂික සංග්‍රහය එළි දැක්වෙන මේ මොහොතේ ඔබ සැමට මගේ සුභාෂිංශන පිරිනමමි.

ප්‍රේමරත්න සුමතිපාල,
වන්නි දිස්ත්‍රික් පාර්ලිමේන්තු මන්ත්‍රී
පළාත් සභා හා පළාත් පාලන.
වැඩ බලන අමාත්‍ය.

1997 සැප්. 17 දින.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்
## ச. சண்முகநாதன் அவர்களின்

# ஆசிச் செய்தி

ஈழத்திரு நாட்டின் வட திசையில் அமைந்துள்ள, வன்னி மாநகரின் ஒளி விளக்காய் விளங்கும் உயர் கல்வி ஸ்தாபனமான, பூந்தோட்டம் கல்வியிற் கல்லூரியின், பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவ ஆசிரியர்கள், கல்லூரியின் உத்தியோகத்தர்கள் ஆகியோரின், அரும் பெரும் முயற்சியின் பயனாக, நான்காண்டு நிறைவையொட்டி வெளியிடப் போகும், "**வித்தியா தீபம்**" என்ற கல்லூரியின் சஞ்சிகைக்கு இம்முறையும் ஆசிச் செய்தி வழங்கக் கிடைத்த இவ் வரிய சந்தர்ப்பத்திற்காக எனது நன்றியைத் தெரிவிப்பதோடு,

இக்கல்வியியற் கல்லூரியானது மென் மேலும், இவ் "**வித்தியா தீப**"த்தைப் போன்று அரிய பல சஞ்சிகைகளை வெளியிடுவது மாத்திரமன்றி, இந்த வன்னி மண்ணிற்கு "**வித்தியா தீப**"த்தில், ஏற்படும் சுடர் ஒளிமூலம், அறியாமையினாலும், முற்போக்கு சிந்தனை அற்ற வாழ்விலும், அல்லலுறும் எம் மக்களின் வாழ்வு, வளம் பெற வேண்டுமென வாழ்த்துவதுடன்,

அடுத்துவரும் வருடங்களிலும் "**வித்தியா தீபம்**" மீளவும் ஒளிபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ச. சண்முகநாதன்** பா/உ
வன்னி மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்

## வை. பாலச்சந்திரன் அவர்களின்

# ஆசிச் செய்தி


ஈழத்திரு நாட்டின் வன்னி
மாநிலத்தின், மையத்தில் அமையப் பெற்ற,
வவுனியா மாநகரிலே, இயங்கும் கல்வியியற் கல்லூரி
யின், பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவ ஆசிரியர்
கள், மற்றும், இதர உத்தியோகத்தர்கள் அனைவரதும்
பெரு முயற்சியினால் 4வது தடவையாகவும் ஒளி வீசப் போகும்,
உன்னத வெளியீடான "**வித்தியா தீபம்**" என்ற கல்லூரி மலருக்கு,
இம்முறையும் வாழ்த்துக் கூற எனக்குக் கிடைத்த அரிய சந்தர்ப்பத்
திற்கு நன்றி கூறும், இவ்வேளையில்,

இக் கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவ ஆசிரியர்களின் அரும் பெரும் சேவையின் மூலம், எம் மக்கள் மத்தியில் ஒரு விழிப் புணர்ச்சியை ஏற்படுத்தி எம் வன்னியின் மைந்தர்களான, எம் சிறார்களும் இவ் உன்னத கல்வியியற் கல்லூரியில், கால் பதித்து, தங்களது உயர் கல்வி மூலம் எமது சமூகத்திற்கும், எமது நாட்டிற்கும் அரும் சேவை செய்ய இந்த மலர் உதவட்டும் என்றும்,

இம் மலரைப் போன்று, இன்னும் மலரப் போகும்
காலங்களிலும், இவ் "**வித்தியா தீப**"த்தைப் போன்று,
மேலும் "**வித்தியா தீபங்கள்**" தனது ஒளிச் சுடரை இம்
மண்ணிற்குத் தர வேண்டுமென வாழ்த்துகிறேன்.

**வை. பாலச்சந்திரன்**
வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வவுனியா நகரபிதா

**ஜீ. ரீ. லிங்கநாதன்**

அவர்களின்

# ஆசிச் செய்தி

வன்னி மாநகரில் கல்வித் துறையில் ஓர் வளர்ச்சியை ஏற் படுத்து முகமாக ஸ்தாபிக்கப்பட்டு, நான்காண்டு காலத்திற்குள் மிகச் சிறப்பான கல்விச் சேவையினை வழங்கி வரும் கல்வியியல் கல்லூரி, தனது நான்காம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி வெளிவிடும் **"வித்தியா தீபம்"** என்ற சஞ்சிகைக்கு எனது வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

வட மாகாணத்தின் ஒரே ஒரு கல்வியியல் கல்லூரி என்ற வகை யில் இக் கல்லூரியானது, கல்வியியல் சார்பான இன்னோரன்ன துறை சார் மாணவர்களுக்கு தனது அளப்பரிய சேவையினை வழங்கி எமது சந்ததியினருக்கு புதியதோர் கல்வி உலகினைப் படைத்து வருகின்றமை வரவேற்கத் தக்கதாகும்.

பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவப் பெருமணிகள் ஆகியோ ரது அரும் பெரும் முயற்சிகளால் வெளிவரவுள்ள இவ் **"வித்தியா தீபம்"** கல்வி உலகில் சுடர் விட்டு மேன் மேலும் எதிர் காலத்தில் பிரகாசமாக ஒளிபரப்ப வேண்டுமென்று மனதார வாழ்த்துகின்றேன்.

**ஜீ. ரீ. லிங்கநாதன்**
நகரபிதா, நகரசபை,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதிக் கல்விப் பணிப்பாளர்,

கல்வி உயர்கல்வி அமைச்சு

திருமதி. பு. இராமகிருஷ்ணா

அவர்களின்

# ஆசிச் செய்தி

வவுனியா கல்வியியற் கல்லூரியின் நான்காவது ஆண்டு நிறைவையொட்டி வெளிவரும் **"வித்தியா தீபம்"** மலருக்கு ஆசிச்செய்தி அளிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

1993ல் இக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட காலம் தொட்டு இதன் வளர்ச்சியில் அக்கரையுள்ள ஓர் அதிகாரியாகக் கடமையாற்றி வருகின்றேன்.

நாளைய தலைமுறையினரை நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் உரு வாக்கும் தலையாய கடமை கொண்ட ஆசிரிய சமூகத்திற்குப் பயிற்சி வழங்கும் கல்விக் கல்லூரிகளில், அதன் பயிற்சி ஆசிரியர்களது நிலைப்பாடும் பங்களிப்பும் மிகப் பொறுப்பு வாய்ந்ததும் முக்கியமானதுமாகும். உரிய பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதோடு, உகந்தமுறையில் ஒழுக்க சீலர்களாகத் திகழ வேண்டியதும் அவசியமாகும். இவர்களை வழிநடத்திப் பயிற்றுவிக்கும் ஆசான்களும் விடய ஞான முள்ளவர்களாகவும், தியாகவுணர்வு மிக்கவர்களாகவும் அமைந்திருப்பதும் இன்றி யமையாததாகும். விரிவுரையாளர் பயிற்சி ஆசிரியர்கள் உறவும், தொடர்பும், ஒற்றுமை யும் கல்விக் கல்லூரிகளை உன்னத நிலைக்கு உயர்த்த உதவியாக இருக்கும்.

இக் கல்விக் கல்லூரியில் **"வித்தியா தீபம்"** வெளிவருவது வரவேற்கத் தக்கதாகும். இதை வெளியிடுவதில் முன்னின்று முயற்சிக்கும் கல்லூரியின் பீடாதிபதி, விரிவுரையாளர்கள், மாணவர்கள் எல்லோருக்கும் எனது இதய பூர்வமான வாழ்த்துக்களும், பாராட்டுக்களும். அடுத்தடுத்த ஆண்டுகளிலும் இம்மலர் தொடர்ந்து வெளிவர எனது ஆசிகளும் உரித்தாகுக.

நன்றி

**திருமதி. பு. இராமகிருஷ்ணா**
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கல்வி உயர்கல்வி அமைச்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
சி. புலேந்திரன் அவர்களின்

# ஆசிச் செய்தி

"ஒவ்வொரு கணமும் உருகிக்கொண்டிருக்கும் ஒரு பனிக்கட்டி போன்ற மனித வாழ்வில் அது உருகி முடிப்பதற்கு முன்பு பிறருக்குச் சேவை செய்ய நேரத்தை ஒதுக்குதல் மனித வாழ்வின் மகத்தான பண்பாக வேண்டும்" என்பது சான்றோர்களின் கூற்றாகும்.

ஆசிரிய சேவையில் தம்மை பிணைத்துக்கொண்ட கல்வியியல் கல்லூரி மாணவர்களின் **"வித்தியா தீபம்"** என்ற இந்த மலருக்கு ஆசிச் செய்தியை வழங்குவதில் மகிழ்வு கொள்கின்றேன்.

கல்வியின் பெறுபேறு பணிவை உண்டாக்குதலாக வேண்டும். சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை ஆகிய விழுமியங்கள் கல்வியினால் பெற்ற பணிவினால் கட்டியெழுப்பப்படுகின்றன.

மனிதன் பணிவைப்பெற்று மனித விழுமியங்களால் நிரம்பப் பெற்றவனாக வாழ்வதற்கான வழிகாட்டும் அடிப்படைத் தூண்களாக கல்வி நிறுவகங்கள் விளங்குதல் வேண்டும்.


அதி விரைவாக மாற்றமடைந்து வரும் உலகில் நிலவும் முரண்பாடுகள் பிரச்சினைகள் என்பவற்றுக்கான அடிப்படைக் காரணங்களை கண்டறிந்து அவற்றை தீர்ப்பதற்கான செயற்பாடுகளில் கல்வி நிறுவகங்கள் தம்மை இணைத்துக் கொள்வதன் ஊடாகவே மனித விழுமியங்களை கட்டியெழுப்பும் அடிப்படை தூண்களாகத் திகழமுடியும்.

மனித ஆற்றல்களை நன்நோக்கில் திசைப்படுத்தி வழிநடத்தும் பாரிய பொறுப்பினை ஏற்றுக்கொண்டுள்ள கல்விதுறை சார் நிறுவகங்களின் இத்தகைய வெளியீடுகள் அங்கத்தவர்களின் ஆற்றல்களை கோவைப்படுத்தி வெளிக்காட்டுவதுடன் சமூகத்திற்கும் நல்லதொரு செய்தியைத் தருகின்றன.

ஆசிரிய மாணவரது ஆற்றல்களை திரட்டி வெளிக்காட்டும், சமூகத்திற்கு தேவையான இத்தகைய வெளியீடுகள் வருடந்தோறும் தொடர்ந்து வெளிவர வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

**சி. புலேந்திரன்**
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்,
வவுனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பதில் உபபீடாதிபதி (கல்வி),

விரிவுரையாளர் இணைப்பாளர்

க. பேர்ணாட் அவர்களின்

# இதயத்திலிருந்து

வவுனியா கல்வியியற் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டு நான்கு ஆண்டுகள் நிறைவெய்துகின்ற இவ்வேளையில், இரண்டாவது தடவையாகவும் வெளிவருகின்ற "**வித்தியா தீபம்**" மலருக்கு வாழ்த்துக்கூறுவதில் நானும் பெருமகிழ்வடைகிறேன்.

1993ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வவுனியா கல்வியியற் கல்லூரி இன்றுவரை பல தடைகளைத்தாண்டி வன்னிமண்ணில் தலைநிமிர்ந்து நிற்கிறது. பல வசதியீனங்கள் மத்தியில் ஆரம்பமாகிய இக்கல்லூரி இன்று பூரணமாக இல்லாவிடினும் பல வசதிகளைப்பெற்று பயிற்சியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யுமளவுக்கு அயராது உழைத்த பீடாதிபதி அவர்களும், பல சிரமங்கள் மத்தியில் கடமையாற்றி வருகின்ற விரிவுரையாளர்களும், வசதியினங்களை கண்ணியமுடன் தாங்கிக் கொண்ட பயிற்சியாளர்களும் உண்மையில் பாராட்டுக்குரியவர்களே.

தமிழ், சிங்கள மொழிமூலமான ஆசிரியப்பயிற்சியாளர்கள் இங்கு பயிற்சி பெறுகின்ற போதிலும், பெருமளவிலான தமிழ்பயிற்சியாளர்கள் குறிப்பாக வடகிழக்கைச் சேர்ந்தவர்கள் இங்கு பயிற்சி பெறக்கிடைத்தமை ஒரு அரிய வாய்ப்பாகும். எதிர்காலத்தில் வடகிழக்கில் ஆசிரிய பற்றாக்குறையை நீக்குவதில் இக்கல்லூரி பெரும் பங்காற்ற முடியும்.

எமது இக்கல்லூரியிலிருந்து முதல் தொகுதிப்பயிற்சியாளர்கள் ஆசிரிய நியமனத்தைப் பெற்றுள்ளார்கள் என்பதும், இன்னும் இரண்டுதொகுதியினர் கட்டுறு பயில்வில் உள்ளனர் என்பதும் இவ்வாண்டில் அதிகளவான பயிற்சியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் குறிப்பிடக் கூடியதாகும்.

மொழிமூலமான ஆக்கங்களையும் உள்ளடக்கி இரண்டாவது தடவையாகவும் "**வித்தியா தீபம்**" வெளிவருவது நல்ல அறிகுறியாக அமைகிறது. தொடர்ந்தும் இச் சஞ்சிகை வெளிவந்து கல்லூரிக்கு ஒரு கலங்கரை விளக்காக அமைய வேண்டும் என்பதும் எனது ஆசியாகும்.

ஆசிரியர் உலகுக்கும், கல்வி உலகுக்கும் வவுனியா கல்வியியற் கல்லூரியும் அதன் **வித்தியா தீபமும்** ஒளி தந்து பெருமை சாற்றிட்டும்.

நன்றி

**க. பேர்ணாட்**
பதில் உப பீடாதிபதி (கல்வி)
விரிவுரையாளர், இணைப்பாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# උප පීඨාධිපති

## (පාලන)

වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨය වාර්ෂිකව පළ කරනු ලබන මෙම සඟරාව නිර්මාණශීලී හැඟිම් හා ලේඛන කුසලතා තිබෙන සහ ලේඛන කලාවට රුචියක් දක්වන සිසු සිසුවියනට තමන්ම අධ්‍යායන කාර්ය මණ්ඩලයේ සියළු දෙනාටම සිය හැකියාවන් වැඩි දියුණු කර ගන්නට මහත් අනුබලයකි.

මේ තුලින් ලැබෙන උපස්ථම්භනය අති ප්‍රබලය. ඒ නිසා මෙම නිරමානය එළි දැක්වීමේලා ඇප කැප වී කටයුතු කල සියළු දෙනාටම ප්‍රසංශා කළ යුතුය.

ශාස්ත්‍රිය වටිනාකමකින් යුත් ප්‍ර කා ශ නිකුත් කිරීම අධ්‍යාපන විද්‍යා පීඨ පිහිටුවීමේ එකි ·පරමාර්ථයකි. මෙම නිර්මානය එම අපේක්ෂාවවෙනහි. මල්ඵල හට ගත් අවස්ථාවකි.

ඉදිරි වර්ෂ වලදීත් මෙවැනි නිර්මාන තුලින් සිසු දරු දැරියන්ගේත්. අධ්‍යාපන කාර්‍ය්‍ය මණ්ඩලයේත් ලේඛන කුසලතා ලොවට හෙළි කිරීමේ අවස්ථා වැඩි දියුණු වේවායි ආශිර්වාද කරමි.

**ආර්. එම්. ඩබ්ලිව්. රාජකරුණා.**

B. Ed.; M. A. in Ed.

වැඩ බලන උප පීඨාධිපති(පාලන)

# நுழைவாயிலில்.....

வவுனியா கல்வியியற் கல்லூரியின் நான்காவது ஆண்டு நிறைவையொட்டி எமது இரண்டாவது மலரான **"வித்தியா தீபம்"** உங்கள் கைகளில் ஒளிபரப்பிக் கொண்டிருப்பது கண்டு பெருமிதமும், மனமகிழ்ச்சியும் அடைகின்றோம்.

தீபம் ஒளிபரப்புகின்றதென்பது உண்மை. எனினும் அத்தீபத்தின் நின்றும் வெளிவரும் ஒளியின் பிரகாசம் எந்தளவிற்கு யாவர்க்கும் முழுமையாகப் பயனளிக்கும் என்பதனை நிர்ணயிப்பது நீங்களே.

தமிழ், சிங்கள மொழி மூலமான எமது கல்வியியற் கல்லூரியில் இரு மொழியினருக்கும் ஏற்றதாக **"வித்தியா தீபம்"** என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளமை பொருத்தமானது என்பதை யாவரும் ஏற்பாரென்பதனை யாரும் மறுப்பதற்கில்லை. அத்துடன் தமிழ், சிங்கள ஆக்கங்களைத் தாங்கி வருவது இன ஒற்றுமையின் வெளிப்பாட்டுச் சின்னம் என்பதனையும் மிக பெருமிதத்துடன் நாம் கூறிக் கொள்ளலாம்.

பல்வேறு விதமான இடையூறுகள், கஸ்டங்கள் மத்தியிலும் இத் தீபம் ஏற்றப்பட வேண்டுமென முனைந்து ஊக்கமளித்த எமது பீடாதிபதி திரு. செ. அழகரெத்தினம் அவர்களுக்கு எமது நன்றிகள். மேலும் ஆசிச் செய்திகள் தந்துதவிய பெருந்தகைகளையும், ஆக்கங்கள் தந்துதவிய விரிவுரையாளர்கள், ஆசிரியப் பயிலுனர்களையும், விளம்பரங்கள் தந்துதவிய வர்த்தகர்களையும், மற்றும் பல்வேறு விதத்திலும் உதவிய அனைவரையும் நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

"நெல் மணிகளுடனும் பதருண்டு, பூரண நிலவிலும் கறையுண்டு தீபத்திலும், கருஞ்சுடருண்டு" இது யதார்த்தம் ஆயின் எமது வித்தியா தீபம்...

தீபத்தின் ஒளியில் தரம் காண விளையும் தமிழ் அறிஞர்களே, இது தமிழின் தரம் கூறும் மலர் அல்ல. கலையின் சுவைகாட்டும் இதழும் அல்ல. எம்மலர் உணர்வின் பிரதிபலிப்பென்று உணர்ந்து அவ்வுணர்வுக்கு மதிப்பளித்து ஊக்கம் தாரீர். தீபத்தின் பிரகாசம் குறையினும் யாவற்றிலும் நிறைவுகாணும் செந்தமிழன் மனப்பண்பு அதனைச்சமன் செய்யும் என்பது எமது நம்பிக்கை.

மலர்க் குழு
**"வித்தியா தீபம்" 3-4**
வவுனியா கல்வியியற் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப்பாங்கு | 01 |
| கல்லூரி | 08 |
| ජාතියේ දරුවන්ට තක්සලාව එපාවේද ? | 09 |
| නුඹයි අපෙ පියාණන් | 13 |
| 'Reading Maketh A Full Man" | 14 |
| கல்வியியற் கல்லூரிகளில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தல் | 17 |
| பயணத்தில் ஓர் உறவு | 25 |
| ஆசிரிய சேவை | 28 |
| කොළඹ යුගයේ වැඩිහිටි කවීන්ගේ ළමා පද්‍ය රචනා | 29 |
| පරවෙන මලින් පිපෙන මලට | 32 |
| Why I Like To Be A Teacher | 33 |
| இன்று இலங்கையில் ஆசிரியர் தொழில்சார் கல்வி வாய்ப்புகள் | 37 |
| ஏழ்மையில் உயர்வு | 48 |
| புது யுகம் படைக்க புறப்படு தோழா! | 51 |
| සමාජ වගකීම කරා පුද්ගලයා පුහුණු කරන්නේ කෙසේද ? | 54 |
| බුද්ධියේ නුඹ නිසා.... | 56 |
| Pity The Poor Referee | 57 |
| கல்விப் புத்தாக்கங்களின் வெற்றிக்கான முன்நிபந்தனைகள் | 66 |
| சமாதானம் | 69 |
| கண் திறந்த போது | 70 |
| ලාංකික අධ්‍යාපනය සංස්කරණය විය යුතුද ? | 72 |
| පූතකුගෙන් මවකට | 75 |
| Teacher Trairees Lists | 77 |
| அமைதித் துளி | 103 |
| நாளைய சந்ததி | 107 |
| ශිෂ්‍යයන් තුළ සමබර පෞරුෂයක් වර්ධනය කිරීම | 108 |
| නොදෙවෙනි සෙනෙහස... | 110 |
| First Day | 111 |
| வாழ்க்கையும் ஆன்மிகமும் | 112 |
| பிரிவு | 114 |
| ක්‍රීඩකයින්ගේ දක්ෂතා වර්ධනය කෙරෙහි බලපාන කරුණු | 115 |
| මවකගේ දිරිය | 117 |
| உடற்பயிற்சியும் சுகவாழ்வும் | 118 |
| தூரமான என் நண்பிக்கு | 121 |
| සිතනු මැන මොහොතක් | 122 |
| சிறுவர் பாடல் - பாலர் எமது வகுப்பறை | 123 |
| දැයට පිපුණු මල් | 124 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR PRESIDENT




**MR. S. ALAGARATNAM**

B. A.; Dip in Ed; M. A. in Ed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## OUR VICE PRESIDENT (ACADEMIC)



**Mr. K. Bernard,** B. Sc. (PFT) Hons. Dip. in. Ed.

## OUR VICE PRESIDENT (ADMIN.)



**Mr. R. M. W. Rajakaruna,** B. Ed.; M. A. in. Ed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR ACADEMIC STAFF (1997)

## PRESIDENT

**Mr. S. Alagaratnam,** B. A.; Dip. in Ed.; M. A. in Ed.

## ACTING VICE PRESIDENT (ACADEMIC) LECTURER, CO - ORDINATOR

**Mr. K. Bernard,** B. Sc. (PFT) Hons, Dip. in Ed.

## ACTING VICE PRESIDENT LECTURER (ADMINISTRATION)

**Mr. R. M. W. Rajakaruna,** B. Ed.; M. A. in Ed.

## SENIOR LECTURERS.

**Mr. S. K. Yoganathan,** B. A. (Hons), Dip. in Ed.
**Mr. W. L. D. S. G. Perera,** B. A. (Hons), Dip. in Ed., M. Ed.

## LECTURER

**Mr. T. Kamalanathan,** B. A. Dip. in Ed., M. A.

## ASSISTANT LECTURERS.


**Mr. T. Inpathevarajah,** B. A. Dip. in. Ed.
**Mr. H. A. Jayanthaperera,** Physical De. (Special) Trained.
**Mr. S. Shahabdeen,** Physical Ed. (Special) Trained.
**Mrs. S. Shanmuganathan,** Physical Ed., (Special) Trained.
**Mr. K. Sithamparanathan,** B. Sc. Dip. in Ed.
**Mr. T. M. Devendran,** Dip. in Sports & Physical Ed., (Special) Trained.
**Mr. H. Piyasena Peries,** Physical Ed., (Special) Trained.
**Mr. N. Raveendran,** B. A. Dip. in. Ed., M. A. in Ed.
**Mr. G. D. Wimalaratna,** B. A., Dip. in. Ed., M. A. in. Ed.
**Mr. K. A. Gunapala,** English Trained.
**Mrs. C. Thiyagarajah,** English Trained.
**Rev. K. Anandamoorthy,** B. A. (Hons) Dip. in Ed.
**Mr. I. G. Wipularatna,** Dip. in Dance.
**Mr. K. Sarath Victor,** Aesthetic Trained.
**Mr. C. S. Arulpiragasam,** Physical Ed., (Special )Trained.

## REGISTRAR

**Mrs. Y. Shyamasundaram,** G. C. S. (Supra Grade)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR ACADEMIC STAFF



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR NON - ACADEMIC STAFF




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் குடும்பத்திற்கு

பொன்னான வாய்ப்பு

# பொன் மனை

('ரன்கெதல்ல')

(குடும்ப சேமிப்பு)



**பொன்**
**மனை**
(குடும்ப சேமிப்பு)
குடும்பத்திற்கே முதலிடம்

**இலங்கை வங்கி**
தேசத்தின் வங்கியாளர்

திரு/ஸ்ரீ கணேச அச்சகம். ☎ 026-22617

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியற் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப்பாங்கு

செ. அழகரெத்தினம்,
B. A. Dip. in Ed; M. A. in Ed.
பீடாதிபதி,
வவுனியா கல்வியியற் கல்லூரி.

இலங்கையின் புதிய தேசிய கல்விப் புனரமைப்பு முறைமையின்கீழ் ஆசிரியர் கல்விக்கு மிக முக்கிய அழுத்தம் அளிக்கப்படவுள்ளது. எப் புதிய கல்விக்கொள்கைகளாயினும் சரி, திட்டங்களாயினும்சரி, ஆசிரிய படையினரது ஆதரவும், அர்த்த பூர்வமான பொறுப்புள்ள பங்களிப்புமில்லாது பயன்பாடுள்ள அமுலாக்கத்திற்குள்ளாக்கவியலாதென்பது அனுபவ ரீதியான உண்மையாகும். எனவேதான் ஆசிரியர் கல்வியிலும் அதனுடன் இணைந்த துறைகளிலும் கட்டாய கவனம் காட்டவேண்டியது அவசியமும் அவசரமுமாகின்றது.

தற்போதுள்ள கல்வியியற் கல்லூரிகள் பதினொன்றில் ஊவா கல்வியியற் கல்லூரி, ஹாபிற்றிகம கல்வியியற் கல்லூரி நீங்கலாக ஒன்பதும், காலி, குருணாகல, பொலநறுவை, இரத்தினபுரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் மேலதிகமாக அமைக்கப்படவிருக்கும் ஐந்து கல்வியியற் கல்லூரிகளுமாக மொத்தம் (14) பதினான்கு தேசிய கல்வியியற் கல்லூரிகள்- (National College of Education (NCOE) அமையவுள்ளன. அத்தோடு கம்பஹா, பதுளை ஆகிய இடங்களிலுள்ள தற்போதைய கல்விக் கல்லூரிகளும், அனுராதபுரத்திலுள்ள ஆசிரிய பயிற்சிக் கலாசாலையும் ஆசிரிய கல்வி நிறுவனங்களாகவும் - Teachers Institutes (T . I ); சகல மாவட்டங்களின் தேவையைப் பொறுத்து அம்மாவட்டங்களில் 84 ஆசிரியர் நிலையங்களும் Teacher Centres ( T . C) அமைக்கப்படவுள்ளன. இவை புதிதாக அமைக்கப்படவிருக்கும் ஆசிரியர் கல்விக்கான தேசிய அதிகார சபையின் National Authority on Teacher Education (NATE) கீழ் முறைப்படி இயங்கவிருக்கின்றன. தேசிய கல்வி நிறுகமும் National Institute of Education (NIE) இதன்கீழ் அமைந்து, முக்கிய இணைப்பாக கல்வி நடவடிக்கைகளையும், கலைத்திட்ட அபிவிருத்திப் பணிகளையும் ஆற்றவிருக்கின்றது. பல்கலைக் கழகங்கள், திறந்த பல்கலை கழகங்களிலுள்ள ஆசிரியர் கல்வித்துறைகளும் மேலும் இவற்றுடன் கூடுதலான செயற்பாடுகளை ஆற்றுமுகமாக இயைபாக்கப்படவுள்ளன.

## தற்போதைய தன்மை.

தற்போது தனியார் துறையின் பொறுப்பில் மிக மிகச் சிறியவளவு பொறுப்பு கல்வித் துறையில் இருந்தபோதும் கல்வியானது அரசின் முழுப்பொறுப்பிலும், கட்டுப்பாட்டிலும் அமைந்துள்ளதை மறுக்கவியலாது. ஆரம்ப, இடைநிலை, கல்லூரி மட்டத்தில் (10,000) பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பாடசாலைகளில் ஏறத்தாழ (1,90,000) ஒரு இலட்சத்து தொண்ணூறாயிரம் ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இவற்றில் (45) நாற்பத்தைந்து இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றனர். நாட்டின் வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்புச் செலவீனங்களுக்கு அடுத்ததாகப் பெருமளவு நிதி கல்வித்துறைக்கென ஒதுக்கப்படுகிறது. ஆசிரியர் தொகையில் ஏறத்தாழ (50,000) ஐம்பதினாயிரம் பேர் தொழில்பற்றிய அறிவு, பயிற்சிகள் அற்றவர்களாக - குறைந்தவர்களாகவுள்ளரென்பதும் அறியப்பட்டுள்ளது. கிராம நகர்ப்புறங்களின் பாடசாலைகளில் ஆசிரியர் நியமனங்களின் ஏற்றத்தாழ்வுகள் - மேலதிகத் தன்மைபற்றாக்குறைத்தன்மை நிலவுகின்றது. ஆசிரியர் மாணவர்களின் விகிதாசாரங்களிலும் இம் மேலதிக, பற்றாக்குறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பன தெளிவாகியுள்ளன. ஆசிரியர் பதவி உயர்வுகள் இடமாற்றங்கள் போன்றவற்றிலுள்ள ஓட்டை உடைசல்கள் பற்றிப் பிரஸ்தாபிக்க வேண்டியதில்லை. ஆசிரியர் மேற்பார்வை முறைகள் மதிப்பீட்டுத் தன்மைகள் தொழில் விருத்திசெய் திட்டங்கள் குறித்தும் குறை பாடுகள் நெடுநாள்களாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. ஒட்டு மொத்தத்தில் ஆசிரியர் கல்வி மீது இடப்படும் பெறுமதியான முதலீடு வீண் விரயத்தை வெளிப்படுத்துவதாகவும் ஆரோக்கிய மற்றதாகவும் அமைந்துள்ளதால் இதில் செலவுச் சிக்கனத்தையும் பயன்படு வினைத் திறமையையும் முகாமைப்படுத்துவது முக்கியமென்பதும் உணரப்பட்டுள்ளது. ஆகவே ஆசிரியர் கல்வி மீதும் ஆசிரியர் தொழில் அபிவிருத்தி பயிற்சிகள் மீதும் கருத்தும் கவனமும் காட்டப்படவேண்டியது அவசியமும், தரவிருத்தியும் தகுதியுயர் தன்மையும் கட்டியெழுப்பப் படவேண்டிய கடப்பாடும் தவிர்க்கமுடியாததாகியுள்ளன.

## கல்வியின் பொருத்தப்பாடின்மைத் தன்மை

இன்று இலங்கையின் கல்வியானது முறையாகத் திட்டமிடப்படாத தன்மைகளாலும் அரசியல் தலையீட்டு அவலங்களாலும் கண்மூடித்தனமான பிறநாட்டுக் கல்வி முறைப் பின்பற்றல்களாலும் நாட்டு நலனுக்கும் தேசிய விருத்தி இணைப்பு முழுமைத்தன்மைகளுக்கும் மக்கள் அபிலாசைகளுக்கும் பொருத்தமான விளைவுகளை அறுவடை செய்யத் தவறி விட்டதென்பதைப் பலரும் சுட்டிக் காட்டத் தொடங்கியுள்ளனர். கல்விமுறை கல்வி அமுலாக்கம் என்பன நாட்டின் பொருளாதார சமூக கலாசாரத் தேவைகளுக்கும் வளர்ச்சிப் போக்கிற்கும் ஏற்றவாறு பொருத்தப்பாடுறவில்லை. கல்வித் துறையில் சுதந்திரத்தின் பின்னர் கொண்டுவரப்பட்ட வெள்ளை அறிக்கைகள் ஆணைக்குழுக்களின் அறிக்கைகள், விதப்புரைகள், சீர்திருத்த ஆலோசனைகள் புதிய பாதைகள் யாவும் எதிர்பார்த்த பயன்களை விளைவுகளை ஏற்படுத்தத் தவறிவிட்டன. கல்வி முறையின் குறைபாடுகள் - குளறுதன்மைகள் ஏற்றத்தாழ்வுகள் - வீண்விரயங்கள் ஒன்றிணைந்து அவை புரையோடிய புண்போன்று காணப்படுகின்றது. வேலையின்மை - தேவையான துறைகளுக்குத் தேர்ச்சி பெற்ற ஆளணி யின்மை போன்றவற்றால் வேண்டாத பல விளைவுகள் தோன்றுதற்கும் தொடர்வதற்கும் கல்வி முறையின் பொருத்தமற்ற தன்மை காரணமாகக் காணப்படுவது அனுபவ ரீதியாக அறியப்பட்டுள்ளது. எனவே எவ்வாறாயினும் காலம் கடத்தாது கல்வி முறையில் - ஆசிரியர் கல்வித் துறையில் பொருத்தமான ஏற்புடைத்தான புனரமைப்புகள், திருத்தங்கள் - மாற்றங்கள் ஆலோசனைகள், நடவடிக்கைகள் அவசியமென்பது அரசினராலும், கல்வியியலாளர்களாலும் பொருளியல் வல்லுநர்களாலும் உணரப்பட்டு வலியுறுத்தப்பட்டுவருகின்றன.

ஆசிரிய நியமனம் பெறுதற்கு எதிர்காலத்தில் தேசிய கல்விக் கல்லூரிகள் மூலம் தொழில்சார் பயிற்சி பெற்றிருத்தல் கட்டாயம்மெனக் கூறப்படுகின்றது. எனவே தேசிய கல்வியற் கல்லூரிகளுக்கு முன்சேவைக் கல்வித் திட்டத்தின் கீழ் - பயிற்சியின் கீழ், மாணவர் கற்றலை ஊக்குவிக்கக்கூடிய பொறுப்பும், வகைகூறலுமுடைய ஆசிரியர்களை பயிற்றுவிக்கும் பாரிய பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதில் ஆசிரிய பயிலுநர்கள், ஆசிரிய பயிற்றுநர்கள் ஒருமித்து கற்றல் கற்பித்தலுக்கான நடைமுறைக் கல்விப்பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்வுகாணக்கூடிய தன்மையை ஏற்படுத்துவதாக அமையும். கல்விக் கோட்பாடுகளை யதார்த்த கற்பித்தல் சூழ்நிலைகளோடு நேரடியாக இழையோடுதற்கான சவாலை இவர்கள் எதிர்க் கொள்ளவேண்டும். இவை தேசிய கல்வி இலட்சியங்களை - இலக்குகளை அடையும் வழிகளுடன்இயைபுறுத்தப்படுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்சேவை ஆசிரியர் கல்வி

முன்சேவை ஆசிரியர் கல்விக் கோட்பாடுகள் தேசிய இலட்சியங்களை அடைவதுடன் கற்பவர் மையமாக அமைதலும் அவசியமாகும். இதில் கற்றல் செயற்பாட்டில் கற்போரின் சுறுசுறுப்பான பங்குபற்றல், கற்போருக்கும் கற்பிப்போருக்கும் இடையிலான கருத்துப் பரிமாற்றங்கள் - இடைத்தொடர்புகள், தமது கற்றலுக்கு கற்போர்தாமும் பொறுப்பாகவிருத்தல், கற்றல் முறையின் செயற்பாடுகளின் நெகிழ்ச்சித்தன்மை என்பனவும் கவனிக்கப்பட வேண்டியன - இன்னும் மனப்பாங்கு அடிப்படையில் சுயமாக நடத்தலும் பொறுப்புணர்வாக அமைதலும், வகை கூறுதலும் நல்லொழுக்க ஊக்குவிப்புக்கான முன்னோடியாகக் கல்வியை அமைத்தலும் முன்சேவை ஆசிரியர் கல்வியில் முக்கியமானவை. மாணவ ஆசிரியர்களுக்கு பல்வகையிலும் ஆசிரிய பயிலுநர்கள் (விரிவுரையாளர்கள்) எப்போதும் முன்னுதாரணமாக இருத்தலும் இயங்குதலும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதோபோன்று திறன்களைப் பெறுவதில் பொருத்தமான பயனுள்ள அறிவுறுத்தலூடாக கற்றல், கற்பித்தல் பயிற்சிகளை விருத்தி செய்து வளப்படுத்துவதாகவும் இருத்தல் வேண்டும். எனவே கற்கும் பாடப் பரப்பினுள்ளும் பாட இடையேயும் நாளாந்த செயற்பாட்டுரீதித் தொடர்புகளைக் கொண்டதாக அமைதலும் அவசியமாகிறது. முன்சேவை ஆசிரியர் கல்வி பாட ஏற்பாடுகள் அனைத்தும், கற்பவர் இலக்குகள் எல்லாம், வாழ்க்கை அனுபவங்களோடு இணைக்கப்பட்டு சமூகத் தொடர்புகளை இடையறாது பேணுவதாக இருத்தல் வேண்டும். பாடசாலையோடும் சமூகத்தோடும் இணைந்து அவற்றின் எதிர்பார்ப்புகள், தேவைகள், பிரச்சினைகள் என்பவற்றைத் தெரிந்து கொள்வதிலும் கொண்டு அவற்றின் வளங்களை பயனுறப்பயன்படுத்துவதிலும் பங்களிப்புச் செய்வதிலும் முன்சேவை ஆசிரியர்கள் முன்னுரிமை பெறுதல் வேண்டும். கோட்பாட்டுக்கும் செயற்பாட்டிற்கும் இடைவினைத்தாக்கம் இருத்தல் வேண்டும். கோட்பாடுகளை தேவைப்படும் இடத்து செயற்பாடுகளுடன் இணைக்கவும் இழையோட விடவும் முயற்சிகள் முன்னெடுக்கப் படுதல் வேண்டும்.

இன்றைய எதிர்கால உலகின் கல்வித் தொழில்நுட்பங்களை கற்றல், கற்பித்தல் உரிய கருவியாக கைக்கொள்ளும் ஆர்வமும் அக்கறையும் காட்டப்படுவதோடு முன்சேவை ஆசிரியர் கல்வி பயிலுநர்கள் தமது தொழில்சார்விருத்தி தொடர்பாக மதிப்பீடுகளையும் கையாளுதலும் தேவையாகின்றது. இதில் கற்போரால் அடைய வேண்டிய இலக்குகளை இணங்கானல், இனங்காணப்பட்ட இலக்குகளைக் நோக்கி முன்னேறிச் செல்லல், இறுதியடைவுகள் போன்றவற்றை அறிதல், தொடர்மதிப்பீடு முறைகளை பயன்படுத்தல், தேவையான பல்வேறு தரவுகளைப் பெறுதல் என்பன முக்கியம் பெற வேண்டியனவாகும்.

மேற்கூறிய கற்றல் கோட்பாடுகள் யாவும் ஒன்றுக்கொன்று தொடர்பானவையாகவும் சமமானவையாகவும் ஆசிரியபயிலுநர்களுக்கு அமைய வேண்டியன. எவ்வாறாயினும் ஆசிரிய தொழிலில் முதல் முதலில் பிரவேசிக்கும் ஆரம்ப (தொடக்கநிலை) ஆசிரியர்களுக்கு (Begining Teachers) சில அடிப்படைத் திறன் தகுதிகள் (Competencies) அத்தியாவசிய மாகின்றன. ஒருவருக்கு சில ஆரம்ப அடிப்படை அறிவு, விழுமியத் தொடர்புகள், திறன் தொகுதிகள் இருத்தல் வேண்டுமென்பதை இது குறிக்கும். இவை ஒருமித்து இணைந்து இத்திறன் தகுதிகளை உருவாக்கும்.

# ஆரம்ப ஆசிரியர் தகுதித் திறன்கள்

ஆரம்ப ஆசிரியரானவர் பாடப்பரப்பின் மையக்கருத்து, கற்பிக்கும் முறைமை, கல்வித் துறை அமைப்பு என்பவற்றை அறிந்து கொள்வதோடு மாணவருக்குப் பாடவிடயத்தை பயனுள்ள வகையில் அமையக்கூடிய கற்றல் அனுபவங்களை உருவாக்குதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவரின் தனியாள் பிரச்சினைகள் இடர்கள், போன்றவற்றைத் தெரிந்து கொள்ளும் வல்லமையும் அவர்களின் அறிவு வளர்ச்சியை புரிந்து கொள்ளும் ஆற்றலும் மாணவர் கற்றல் தன்மைச் சவாலுக்கேற்ப கற்கும் சந்தர்ப்பங்களை ஆக்கியளிக்கும் வல்லமையும் அமைதல் வேண்டும்.

கற்றலைப் பாதிக்கும் காரணிகள் தொடர்பான திறன்களும் ஆற்றல்களும் ஆரம்ப ஆசிரியரிடத்து இருத்தல் தேவை. அதாவது மாணவரின் தேவைகள் விருப்புக்களை விளங்கிக்கொள்ளல், அவர்களது ஒழுக்க விருத்திகளை தெரிந்து கொள்ளல், பாடசாலைச் சமூகங்களின் வேறுபட்ட தொடர்பாடல் பேச்சு முறைகள் கலாச்சாரம் போன்றவற்றை புரிந்து கொள்ளல், மாணவரை சமூகமயமாக்கலில் சமூகம், பாடசாலை, குடும்பம் போன்ற வற்றின் பங்பளிப்பை தெளிவாகத் தெரிந்து கொள்ளல், கூடுமானவரையில் கற்பித்தலை சமூகத்துடன் ஒன்றிணைக்கும் வல்லமை, மாணவரின் கற்றலை பாதிக்கும் காரணிகளுக்கேற்ப கற்கும் சூழலை உருவாக்கும் வல்லமை, மானிட மகத்துவத்தை மதித்தல், மாணவர் உரிமை களைக் கணித்தல் போன்ற வல்லமை, கற்றலுடன் தொடர்பான தாபனங்கள் நிறுவனங்கள் சங்கங்கள், இயக்கங்கள் போன்வற்றுடன் புரிந்துணர்வு பெற்றிருத்தல் பெற்றோரை கற்றலுடன் ஈடுபடுத்தும் வல்லமை போன்றன முக்கியமடைகின்றன.

பொருத்தமான கற்பித்தல் முறைகளைக் கையாள முயற்சிப்பதில் ஓர் ஆரம்ப ஆசிரியர் வல்லமை வாய்ந்தவராக விளங்குதல் வேண்டும். போதனா மொழியில் புலமையும் தொடர்பாடற் திறன்களை பொருத்தமுற தெரிந்து கொள்ளுதலும், தெளிவான குறிக்கோள் களுடன் பாடத்தை திட்டமிடுதலும், பொருத்தமான கற்றல், கற்பித்தல் உத்திகளை கையாளல், மதிப்பீட்டு முறைகளை கடைப்பிடித்தல் என்பவற்றில் வல்லமை பெற்றிருத்தலும் அவசியமாகின்றது. குறிப்பாக குழுவேலை, நேரடி கண்டுபிடிப்பு, எண்ணக்கருவாக்கம், சுதந்தி ரமாகக் கற்றல், செயற்திட்டம், பிரச்சினை தீர்த்தல் போன்றவற்றின் மூலம் கற்றோர் மையக் கற்பித்தல் முறைகளை ஆசிரியர் கையாளவேண்டும். இத்தோடு பயனுள்ள வினாக்கேட்டல், ஊக்குவித்து உற்சாகப்படுத்தல் (தூண்டல் துலங்கல் முறை) விருப்பமான பொருத்தமுள்ள முன்வைப்புக்கருவிகள், பொருட்கள், உபகரணங்களை முறையாக உபயோகித்து அறிமுகப் படுத்தல், மரபுரீதியான, நவீன கற்றல் கற்பித்தல் தொழிநுட்பங்களை உபயோகித்தல், பின்னூட்டல் அடிப்படையில் மாணவர் கற்றலை மெருகூட்டுதல், ஏற்புடைத்தான கற்றல் வளங்கல், பொருட்களைத் தெரிவு செய்து கொள்ளலுதல் போன்றனவற்றிலும் ஆசிரியர் வல்லமை படைத்தவராக இருத்தல் நன்று.

## மதிப்பீடு தொடர்பான திறன் தகுதிகள்

- மாணவர் மதிப்பீட்டு நோக்கத்தை விளங்கிக் கொள்ளுதல்.
- குறிக்கோள்களுக்கேற்ப எவ்வாறு மதிப்பீடு செய்ய வேண்டுமென்பதை விளங்கிக் கொள்ளல்.
- மதிப்பீட்டு கருவிகளை உருவாக்க, உபயோகிக்க செயற்பாட்டு அமுலாக்க வல்லமை பெறுதல்.
- போதனைகளை மெருகேற்றுவதற்கு வகுப்பறை பெறுபேறுகள் - பெருமளவு மதிப்பீட்டு அளவுகள் போன்றவற்றை பரீட்சித்துப் பார்க்கும் வல்லமை.
- வகுப்பறை முழுவதையும் அதே சமயம் தனியான மாணவனையும் மதிப்பீடு செய்யும் வல்லமை.
- மாணவரை தொடர் மதிப்பீடு செய்யும் வல்லமை.
- மாணவர் மதிப்பீட்டைப் பதிவு செய்தல், பரீட்சித்தல், அறிக்கைப் படுத்தல் தொடர்பான வல்லமை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மாணவர் முன்னேற்றம் குறித்து மாணவரோடும் பெற்றோருடனும் கலந்துரையாடும் திறமை.
- கற்போன் தன்னைத் தானே சுயமதிப்பீடு செய்து கொள்ளுதற்கு உற்சாகப்படுத்தும் திறமை.
- ஆலோசனை வழிகாட்டும் திறமை.

## வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பானவை.

நாளாந்த வகுப்பறை செயற்பாடுகளை முகாமைத்துவப் படுத்தும் வகையில் ஆரம்ப ஆசிரியர் ஒருவருக்கு முகாமைத்துவம் தொடர்பான திறன் தகுதிகளும் இருத்தல் வேண்டும். வகுப்பறைச் செயற்பாடுகளை திட்டமிடல் - ஒழுங்கமைத்தல் - நடைமுறைப்படுத்தல், கட்டுப் படுத்தல் தொடர்பான வல்லமை. வகுப்பறை கற்றலுக்குகந்த சூழலை உருவாக்கும் வல்லமை. பயன்பாடுடையதான நேர முகாமைத்துவம் செய்யும் ஆற்றல், வகுப்பறைக்குள்ளும் வரைய றுக்கப்பட்ட வளங்களை கையாளும் வல்லமை. கற்றலுக்கு பொருத்தமான வகையில் வகுப்பு களை குழுவாக்குதல், நெகிழ்ச்சியுள்ள நேர சூசியை கடைப்பிடித்தல் போன்றவற்றிலான அறிவும், விளக்கமும் இம்முகாமைத்துவத் திறன்களுள் கவனிக்கப்பட வேண்டியனவாகும்.

## சமூகத் தொடர்புகள்

பாடப் பரப்புகளை சமூகத்துடன் இணைப்பதன் மூலம் கற்றலை மேலும் பயனுள்ள தாக்கும் திறன்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. இதற்கு,

- பாடசாலை சகபாடிகளுடனும், பெற்றோர்களுடனும், சமூக அங்கத்தவர்களுடனும் பொருத்தமான தொடர்புகளை வளர்த்துக் கொள்ளும் வல்லமை.
- வகுப்பறைக்கு வெளியிலும் தேடுதல்களை ஊக்குவிக்கும் வல்லமை.
- மாணவருக்கும் பரீட்சயமான, கிடைக்கக்கூடிய வளங்கள் மூலம் நடைமுறை அனுபவங்களை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடும் வல்லமை.
- நோக்கமும் கருத்துமுள்ளதுமான ஈடுபாட்டினுள் பெற்றோரை ஈடுபடுத்துவதன் முக்கி யத்துவத்தை உணர்ந்து கொள்ளும் தன்மை.
- பாட உள்ளடக்கம் ஏனைய பாடங்கள் பாடங்களுக்குப் பிறம்பான புதிய அறிவை மாணவர் ஏலவே பெற்றுள்ள அறிவுடன் தொடர்படுத்தும் வல்லமை, அவசியமானது.

## மேலதிக திறன் தகுதிகள்

ஆசிரியரை பொறுத்தவரையில், அவர் எப்போதும் மாணவரிடத்தும், மாணவரது கற்றலிடத்தும் தம்மை அர்ப்பணிப்பவராக இருத்தல் இன்றியமையாதது. மாணவர்களால் கற்றக முடியுமென்பதில் நம்பிக்கை வைத்திருத்தல், மாணவரிடத்து மிக ஈடுபாடுள்ள மனப் பாங்கு கொண்டிருத்தல், கற்றலுக்கும், கற்பித்தலுக்கும் எப்போதும் வசதிகள் வழங்குதல், சுயகல்வித் தத்துவத்தை கொண்டிருத்தல், ஆசிரியர் நடத்தை - ஒழுக்காறு பற்றிய கோட் பாடுகளை அறிந்திருத்தல் - அதற்கு தம்மை தயார்படுத்தல், மாணவர் கற்றலுக்கு ஒரு முன்மாதிரியான பாத்திரமாக செயலாற்றுதல், மாற்றங்களை எதிர் கொள்ளத் தயாராக இருத்தல், மதீப்பீட்டுக் கருமங்களை முறைப்படி ஆற்றுதற்கும், அதற்கேற்ப திருத்தங்கள் மாற்றங்களை விதந்துரைப்பதற்கு செயலாற்றலும், கலைத்திட்ட வள அபிவிருத்திகளில் பங்களிப்பு நல்க ஆயத்தமாக இருத்தலும் மேலதிக எதிர்பார்ப்புகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுடன் தனது சொந்த செயலாற்றலையும் அனுபவ மூலம் பெறும் கற்றலை முறைப் படி ஆராயும் வல்லமையுடையவராகவும் விளங்குதல் வேண்டும். தனது தெரிவுகளையும், சகபாடிகள் பெற்றோர் மாணவரிடத்து ஏற்படும் பிரதி பலிப்புகளை தொடர்ச்சியாக மதிப்பிடும் வல்லமையும் தேவையாகும். தொழில்ரீதியான முன்னேற்றத்திற்கு தேவையான சந்தர்ப்பங் களை அக்கறையுடன் தேடுவதில் வல்லமை, வகுப்பறை பிரச்சினைகளை பரிசீலிப்பதற்கும் தீர்ப்பதற்கும் தேவையான ஆற்றல், நவீன கல்வி கோட்பாடுகளை ஆர்வத்துடன் பின்பற்றும் தன்மை, சுயமாகக் கற்கும் தன்மை, கல்வி போக்குகளுக்கேற்ப நடந்து கொள்ளும் ஆர்வம், மாற்றுதல்களை மதிப்பிட்டு அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வல்லமை போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

இன்னும் நமது நாட்டின் கல்வி முறைமை, அரசு, பாடசாலை, பெற்றோர், தொடர்புகள், கல்வி வரலாறும், கல்விப் போக்குகள் தொடர்பன விளக்கம் என்பனவும் தெரிந்திருத்தல் அவசியம். ஆசிரியராக நடந்து கொள்வதில் ஒருவருக்கு சட்டத்துறை தொடர்பான விளக்கம் தேசிய கல்விக் கொள்கை பற்றிய அறிவு, நாட்டின் கல்வி முறை வளர்ச்சி பற்றிய விளக்கம், பொதுப்பரீட்சைகள், கல்வி முன்னேற்றங்களில் செலுத்தும் பங்களிப்பு பற்றிய விளக்கம் என்பனபற்றியும் ஆசிரியர் கட்டாயம் அறிந்திருத்தல் அவசியம்.

## இன்றைய ஆசிரியர் தேவைகள்

புதிய கல்வி புனரமைப்புகள், ஆலோசனைகள் அறிமுகப்படுத்தவிருக்கும் இக் காலகட்டத்தில் பொதுவாக தேசிய கல்வி கல்லூரி ஆசிரிய பயிலுநர்கள்,

- தம்மை நன்கு உணர்ந்து மாணவர்களதும் சமூதாயத்தினதும் அபிலாசைகள், தேவைகள் என்பனவற்றைத் தத்துவார்த்தடிப்படையிலும் உளவியல் அணுகுமுறை யிலும் நடைமுறைச் சாத்தியத்துடன் செயற்படுத்தும் தயார் நிலைக்கு ஆயத்தமாக வேண்டும்.

- ஆசிரிய தொழிலின் அப்பழுக்கற்ற தன்மையையும், புனித போக்கினையும், பேணி மதித்து, மனித நேயத்தையும், விழுமிய மேன்மையையும் சமாதானத் தன்மையையும் நடைமுறைப்படுத்தும் பயிற்சியை பெறுவதில் முன்னின்று உழைத்தல் வேண்டும்.

- எதிர்காலத்தில் வெறும் வேதனத்திற்காக மட்டுமன்றி, பெயரளவில் ஆசிரிய கடனுக் காக மட்டுமன்றி, உள்ளார்ந்த உளத்திருப்பதியுடன் உயர் சேவை மனப்பாங்கும் அர்ப்பணிப்பும், தியாக உணர்வும் உடையோராய் தம்மை மாற்றுதற்கு முயலல் வேண்டும்.

- முறையற்ற பதவியுயர்வு முன்னேற்றம், அற்ப சொற்ப சலுகைகள் காரணமாக அரசியல் சாக்கடையுள் அகப்பட்டு சிக்கிச் சீரழியாது ஆசிரியரது சுய கௌரவத் தையும் மகத்தான மரியாதையையும் என்றும் காப்பதற்குக் கங்கணம் கட்டும் மனப்பாங்கு பெறுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21ம் நூற்றாண்டின் தேவைக்கும், எதிர்பார்ப்புக்கும், சவாலுக்கும் ஈடுகொடுக்கும் வகையில் எமது ஆசிரியர் கல்வி அமைதல் வேண்டும். அதற்கேற்றவாறு விஞ்ஞான தொழில்நுட்ப விரிவாக்கங்களுக்கமைய ஆசிரியர்கள், குறிப்பாக புதிதாக ஆசிரிய சேவையில் புகுகின்றவர்கள் தம்மை தயார் படுத்தவும் அர்ப்பணிக்கவும் ஆயத்தமாக வேண்டும். கல்வியற் கல்லூரிகளில் கடமையாற்றுகின்ற கல்வி சார் அலுவலர்களும் இவ்விடயத்தில் கவனம் காட்டுவதோடு, தேவையான பொருத்தமுறு பயிற்சிகளை - அறிவு, திறன், மனப்பாங்கு அடிப்படையில் பெற்றுக்கொள்ளுதல் அவசியமாகும். சுட்டிப்பாக கல்வித் தொழிநுட்பங்களை (Educational Technology) சரிவர புரிந்து கொள்ளவும், அவற்றைக் கற்றல் கற்பித்தல் செயல்முறையில் பயன்பட உபயோகப்படுத்தவும் - தமது ஆசிரிய பயிலுநர்களுக்கு அவற்றினை அறிமுகப்படுத்தி வகுப்பறை கற்பித்தலில் தொடர்புறுத்தவும் முயற்சிக்க வேண்டும். இன்றேல் விரிவுரையாளர்களோ அல்லது அவர்களது வழிகாட்டலுக்குட்பட்ட ஆசிரிய பயிலுநர்களோ நவயுக கல்விப் போக்கிற்கு பொருத்தமற்றவர்களாகி விடலாம். இறுதியில் சமூகத்தின் கணிப்பையும் கௌரவத்தையும் இழந்தவர்களாயும் காணப்படலாம். இத்துர்ப்பாக்கிய நிலை ஏற்படாது தம்மையும் தம்மைச் சார்தோரையும் பாதுகாத்து உன்னத சேவையாற்ற வேண்டியது தமது கடப்பாடு என்பதை கற்றல் கற்பித்தலில் ஈடுபடும் அனைத்து ஆசிரியர் குழுவினரும் உணர்ந்து கொள்ளுதல் அவசியம். தற்போதைய தன்மையை விட மேலதிகமாக, உண்மையாக, பயன்பாடுடையதாக ஆசிரிய பெருமக்கள் கடமையுணர்வும், கட்டுப்பாடும், செயலுனர்வும் பெறுவது மிக இன்றியமையாததாகும்.

**சமூகஒற்றுமை அவசியமானது. பலதரப்பட்ட சமயவாதிகளும் சமூகநிலையங்களும் தமது அனாவசியமான வேற்றுமைகளைக் குழிதோண்டிப் புதைத்து விட்டு நாட்டின் முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தில் கவனம் செலுத்துவது அவைதம் கடமையாகும். குறிப்பாகத் தமிழரும், சிங்களவரும் தமது பொதுக் கலாசாரத்தையும் பொது நலத்தையும் கவனத்திற்கொண்டு தம் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும்'**

**- விபுலானந்த அடிகள்**

"தமிழர் வழங்கும் இந்நாடு...........................

பெரியோ னெனவும் அறுமுகச் செவ்வேல் எனவும்..........

அருகன், புத்தன், அல்லா, யெகோவா என்னும்

திருப்பெயர்களைத் தாங்கி நின்றவனும் ஆகிய

ஒரு தனிக் கடவுளுக்கு எமது வணக்கம் உரித்தாகுக"

**- சுவாமி விபுலாநந்தர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கல்லூரி

ச. சண்முகரட்ணம்
ஆரம்ப நெறி

அன்னத்தினாலே அடையாளத்
திலகம் தீட்டிய வெண்மேகமே!
ஆசிரியத் தென்றல்களை இரண்டு வருடம்
அடைகாக்கும் ஆருயிர் சின்னமே!
இளம் மாணவர் சிற்பங்களை அறிவு
உளியினால் செதுக்கும் ஆற்றலை
அணிவித்த அன்பு தாஜ்மஹாலே!
விடை திரத்திய பின்பும் ஓர் வருடம்
விட்டு விலக விரும்பாது காணிக்கை
வழங்கும் கலை வாணியே!
மூன்று மாதங்களுக்கு ஓர் முறை
படிப்பை பறைசாற்றும் படிமத்தினை
பழக்கும் பைந்தமிழே!
நீ சிரச்சேதம் செய்யமுடியாத
சிரஞ்சீவியாக சிறகடிக்க வேண்டும்
அன்று தான்.
எம் உள்ளம் சந்தோச சாலரங்கள்
போல் சங்கதி கீதம் இசைக்கும்.

வண்ணக்குழம்பின்றி ஓவியமில்லை. உண்மை. எனினும் ஓவியமான பிறகு வண்ணக்குழம்பு என்னால் தான் இவை யாவும் என்று உரிமை கொண்டாடவா முடியும்.

-அறிஞர் அண்ணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ජාතියේ දරුවන්ට තක්සලාව එපාවේද?

කේ. නිහාල්

මේනකා 4 වසරේ ඉගෙන ගත යුතු ශිෂ්‍යාවකි. සිය පියා හදිසි අනතුරකට ලක්වීමෙන් පසුව ඇතිවූ අඩුලුහුඩුකම් හේතුවෙන් ඇය පාසලට ආයුබෝවන් කියුවාය. ආර්ථික ප්‍රශ්න දිනෙන් දින වැඩිවන විට මේනකාගේ මව මැද පෙරදිග බලා ගිය අතරේ කුඩා මලනුවන් බලා ගැනීමේ වගකීමත් ඇය මත පැවතිනි. සැම උදෑසනකම මලනුවන් කරපින්නා ගන්නා ඇය ඉනි වැට ලගටවිත් සුදෝ සුදෝට සැරසී පාසල් යන සිය යහළු යෙහෙලියන් දෙස බලා සිටින්නේ කඳුළු පිරි දෙනෙතිනි".

මෙවැනි නොයෙක් අපහසුතා නිසා පාසල් හැර යැම සිදුවන අවස්ථාවන්ට මෙය එක් නිදසුනක් පමණී. මෙබඳු තත්වයක් අප රටේ උද්ගත වී ඇත්තේ ඇයි ?. පසුගිය වසර කිපයක් තුළ සිට විවිධ හේතූන්මත පාසල් හැර යන පිරිස වසරකට ලක්ෂයක් පමණ වන බව අධ්‍යාපන අමාත්‍යංශයේ සංඛ්‍යා ලේඛන මඟින් අනාවරණය වී තිබේ. 1986 වසරේදී 1,15000 ක් මෙසේ අතර මඟදී පාසල් හැර ගිය අතර එය 1987 දී 1,29,418 විය. 1987 දී පාසල් හැර ගිය 8,546 ක්ම 2 වන වසරේ සිසුන් වන අතර 6 වන ශ්‍රේණියේ සිසුන් 20,278 පාසල් හැර ගොස් ඇත.

1983 දී කරන ලද පාසල් සංගණනාවයකට අනුව වසරකට ප්‍රථම ශ්‍රේණියට ළමයින් 350000 ක් ඇතුළු වුවත් ප්‍රාථමික අධ්‍යාපනය සම්පූර්ණ කරනුයේ 2,27000 ක් පමණක් බවත් ඉන් 78000 ම පාසල් හැර යන්නවුන් බවත් සොයාගෙන තිබේ. තායිලන්තයේ ප්‍රාථමික අධ්‍යාපනය ලැබිය යුතු පන්තියේ දරුවන්ගේන් 98 % ක්ම ඒ සඳහා යොමු වෙද්දී අපේ රටේ 20 % පමණ දරුවන් ඒ අවස්ථාව නොලබන්නාවුන්. ජපානය, ඇමරිකාව වැනි රටවල් පාසල් යන්නාවුන්ගෙන් 97 % ම ද්විතියික අධ්‍යාපනය අවසන් කරද්දී ශ්‍රී ලංකාවේ සැම වසරකදීම ලක්ෂයක් පමණ පිරිසක් අධ්‍යාපනය අතරමග නතර කරන්නාවුන් තත්‍යතාවක් තිබේ. 1977 පෙර පාසල් හැර යාමේ ප්‍රතිශතය 4 % වුවද එය 1989 වනවිට 4.7 % දක්වා ඉහළ ගොස් තිබේ. මෑත යුගයේදී එය සැලකිය යුතු මට්ටමකින් ඉහළ අගය පරාසයක් ගන්නා බව පාසල් හැර යන්නන්ගේ සංඛ්‍යාව අනුව නිමානය කල හැකිය.

මෙසේ අතර මඟදී පාසල් හැර යන්නන් සංඛ්‍යාව වැඩි වීම සිසුන් සෙවිය යුතු කාලීන සමාජ ප්‍රශ්ණයක් වී තිබේ. ඒ පිළිබඳව පුළුල් අවබෝධයක් වත්මන් සමාජ පද්ධතිය තුළ ඇති කිරීම අත්‍යවශ්‍ය කරුණක්ව පවතී. ලංකාව දෙස බලන කල්හි පාසල් හැරයාම කෙරේ බලපාන ප්‍රධාන බලවේග 4 ක් හඳුනාගත හැකිය. එනම්

1. දෙමාපියන්ගේ දරිද්‍රතාවය
2. සමාජීය සංස්කෘතික හේතු.
3. භූගෝලිය හේතු.
4. අධ්‍යාපන නොහැකියාව.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

මෙම සාධකයන් හා පාසල් හැර යාම අතර පවත්නා සබැඳියාව සෙවීමට කරන ලද පර්යේෂණයන් හෙළිවී ඇති කරුණු වලට අනුව 60 % ම ආර්ථික හේතුන්මතත් 32% සමාජීය හේතුන්මතත් පාසල් හැර ගිය වුන් බව පෙනීගොස් ඇත. ඉතිරි 8 % භූගෝලීය හා අධ්‍යාපනික නොහැකියාව මත පාසල් කාර ගියවුන් බව සනාථ වී තිබේ.

බෝහෝ ගම්බද ප්‍රදේශවල දරුවන්ට පාසල් උපකරණ හා ඇඳුම් පැලඳුම් ලබා දීමට ඔවුන්ගේ දෙමාපියන්ට හැකියාවක් නැත. මේ තුළින් පන්ති කාමරයේදී ළමයා ඉමහත් මානසික අස්ථාවර භාවයකට මුහුණ පායි. අඩුහඩුකම් මැද පාසලට පිවිසෙන දරුවා ගුරුවරයන්ගේ දෝෂා දර්ශණයට ලක්වීම හා දඬුවමට ලක්වීම. පාසල් යාමට අවශ්‍යය ඇඳුම් පැලඳුම් ප්‍රමාණවත් නොමැතිකම නිසා දිනපතා පාසල් යාමට නොහැකිවීම. ආර්ථක අඟහිඟකම් නිසා බෝහෝ දෙමාපියන් දරුවන් නිවසේ වැඩකටයුතු වලට හවුල්කර ගැනීම ආදී කරුණු දරුවන් පාසල් හැර යාම කෙරෙහි බලපා තිබේ.

ඇඳුම් පැලඳුම් නොමැතිකම නිසා අපිරිසිදුව ඇඳුම් අඳිනු දරුවන් කෙරේ ගුරුවරයා දක්වන්නේ පිළිකුලකි. එසේම පංතියේ සෙසු දරුවන්ද මෙවැනි ළමුන් කොන් කිරිම නිසා දරුවා තුල ඇතිවන මානසික පීඩනයේ අවසාන ප්‍රථිඵලය වී ඇත්තේ පාසල් ගමන ඉක්මනින් සමාප්ත කිරීමයි. ආර්ථික හේතුන් මත බෝහෝ ගම්බද දරුවන් සමබර ආහාර වේලක් ලබා ගැනීම දුෂ්කර වී තිබේ. මේ නිසා බෝහෝ දරුවන් මන්ද පෝෂණයෙන් පෙළේ. එමගින් දරුවා තුල යවන්නා උදාසීනත්වය නිසියාකාරව වර්ධනය නොවීම පාසල් වැඩකටයුතු වලට මානසික ස්ථාවරත්වයෙන් යුතුව සහභාගි වීම අපහස් වීම යනාදි කරුණු නිසා අධ්‍යාපනය ලැබීම කෙරේ දරුවා තුළ ධනාත්මක බලපෑමක් ඇති නොවේ. මෙහි අවසාන ප්‍රතිඵලය දරුවා පාසලින් ගිලිහී යාමයි.

අපේ රටේ අධ්‍යාපනය සකස් වී තිබෙන්නේ එක්තරා සමාජ පංතියක අවශ්‍යතාමත මිස සෑම සමාජයකටම ඔබින අයුරින් නොවන නිසා ඒ ඒ පංති අවශ්‍යමත සැකසුණු පාසල් පාඨමාලාවක් සංස්කෘතියෙන් ඈත් වූ ජීවන ක්‍රමයෙන් බැහැරවූ ඒවා වීමෙන් සිසුන් තුළ හටගන්නා මන්දෝෂසොහී බව නිසා සිසුන් විශාල වශයෙන් පාසල් හැර යන්නන්ගේ සංඛ්‍යාවට එකතු වීමට ඉඩ තිබේ.

සිසුවෙකු අධ්‍යාපනය කෙරේ නැඹුරු වීමත් හෝ ඒ මෙහිලා මූලික වගකිම කාර්ය භාරය පැවැරන්නේ ගුරුවරයාටය. එහෙත් බෝහෝ ගුරුවරුන් එය වටහා ගෙන නොතිබීම සිසු පරපුරේ අවසනාවක් වී තිබේ. ඇතැම් ගුරුවරුන් සිසුන්ගේ කුසලතා මනිනුයේ නායකත්වය හා වගකීම් පවරනුයේ දෙමාපියන් හෝ තරාතිරම වත් පොහොසත් කම අනුවයි. මේ හේතුවෙන් දුප්පත් දරුවන්ට පාසල් සමාජය කෙරෙහි ඇතිවන කළකිරීම සහ වෛරය බෝහෝ විට ඔවුන් පාසල් හැරයාම කෙරේ පෙළඹවීමට සමත් වී තිබේ.

ආර්ථිකමය හේතුන් මත ගුරුවරුන් ළමුන් කෙරේ දක්වන විශේෂ අවධානය පිළිබඳව ඇමරිකාවේ සිදුකල පර්යේෂණයකද" හෙළි වූයේ ගුරුවරයෙකුට පොහොසෙත දරුවකු කෙරෙහි අවධානය යොමු කිරීමට ගත වන්නේ තත්පර 4 ක් වුවත් දිළිඳු දරුවකු සඳහා අවධානය යොමු කිරිමට එම ගුරුවරයාට තත්පර 17 ක් වැයවූ බවයි. මින් පැහැදිලිවන කරුණු මත දිළිඳුකම නිසා ගුරුවරයාගේ අවධානයෙන් ගිලිහී යාමක් පිළි ගැනීම. නායකත්වය. වගකීම්. දැරීමේ අවස්ථා නොලැබී යාමක් නිසා බෝහෝ දරු දැරියෝ ඉක්මනින් පාසල් ගමන හමාර කරන බව පෙනී යයි.

බෝහෝ නගර බඳ ගුරුවරියන් පාසල් පැමිණෙන්නේ තමන්ගේ වත් පොහොසත් කම පෙන්වීමට හා පාළුව මකා ගැනීමට මිස වෘත්තිය මය අගය වටහා ගෙන නොවේ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

එසේම ගුරුවරුන් බඳවා ගැනීමේදී මාරුවීම ලබාදීමේදී ඇතිවන අඩු පාඩුවේදී ළමුන පාසල් හැර යාම කෙරේ බලපානු ලැබයි. නාගරික වැසියෙකු ගුරුපත්වීමක් ලබා ගම්බද ට ගියවිට ඔවුන් කෙසේ හෝ උත්සාහ දරන්නේ නගරයට ඒමට මිස අධ්‍යාපනය නිසිලෙස දරුවන්ට ලබාදීමට නොවේ. එසේම දඬුවම් හෝ දේශපාලන හේතූන් මත මාරුවීම් සිදු කිරීම නිසා කලකිරීමෙන් වෛරයෙන් පසුවන ගුරුවරුන්ද තමන්ගේ කාර්ය නිසි ලෙස ඉටු නොකරන බව සමාජ කටකථා වාර්තා වලට අනුව පැහැදිලි වන්නකි. එසේම වසරින් වසර ගුරුවරුන් මාරුකර යැවීම නිසා ළමයින්ට නිසි අධ්‍යාපනය ලබා ගැනීමට අසීරු වී තිබේ. මේහිදී වරින් වර ගුරුවරුන් පැමිණි නිසා ළමයාට ඔවුන්ගේ ගැටළු අඩුපාඩුකම් කථා කිරීමට හෝ ගුරුවරයාට ළමුන් සමග සම්බන්ධයතා ඇතිකර ගැනීමට හෝ අවකාශ නොලැබේ. මෙහි අවසන් ප්‍රථිඵලය වන්නේ පාසල තුලින් තමන්ගේ ගැටළුවලට හා අවශ්‍යතාවනට නිසි විසඳුම් නොලැබියාමෙන් ඇතිවන පසුබෑම. කළකිරීම නිසා දරුවන් පාසල් යාම ප්‍රතික්ෂේප කිරීමයි.

අධ්‍යාපන පහසුකම් බෙදීයාම විෂමතාවයද ගම්බද දරුවන්ගේ අධ්‍යාපනය කඩා කප්පල් වීමට බලපායි. ඇතැම් ගම්බද පාසල් සිසුන් අධ්‍යාපනය ලබන්නේ බිම ඉඳගෙනය අඩුම වශයෙන් ස්ථිර ගොඩනැගිල්ලක් පවා නොමැතිවය. එසේම අවශ්‍යය ප්‍රමාණයට ගුරු වරුන් නොමැති කම නිසා වසර කිපයක් එක්කොට පොදුවේ ඉගැන්වීමක් දක්නට ලැබේ. මෙහිදී සිසුන්ගේ මානසික මට්ටම හා බුද්ධි මට්ටමට ගැලපෙන අධ්‍යාපනයක් නොලැබෙන නිසා ශිෂ්‍යායෝ මහත් දුෂ්කරතා වලට මුණපාති.

ගම්බද පාසල් වල තත්වය මෙසේ වුවද නගර බද පාසල් දරුවන් අධ්‍යාපනය ලබන්නේ විදුලි පංකායට සුවිශාල ක්‍රීඩා පිට්, පිනුම් තටාක, ඇති සම්පත් වලින් අඩ්‍ය පාසල් තුලය. මෙවැනි උසස් පෙලේ විදුහලක සිසු දරුවෙකුට රුපියල් 24 ක් වැය කෙරෙද්දී ගම්බද පාසල් දරුවෙකුට වැය කෙරන්නේ රුපියල් 7 යි ශත 40 වැනි සුළු මුදලකි මේ තත්වය මත ගම්බද දරුවන්ට අධ්‍යාපනිකව ඉදිරියට යාමට ඇති අපහසුතා, බාධක නිසා පාසල් අධ්‍යාපනයේ විශාල වශයෙන් ඇද හැලේ.

අනෙක් අතට පාසල් විෂය මාලාව රටට ගැලපෙන එකක් නොවීමද ගැටළුවක් වී තිබේ. දරුවා පාසලේදී ලබන අධ්‍යාපනය සමාජ ජීවිතයට ඉවහල් නොවේ නම් ඔවුන් සමාජයේදී නොයෙක් ගැටළුවලට මුහුණපානු ලබති. අධ්‍යාපනය නිරතුරුව ජාතික ප්‍රශ්න වලට සම්බන්ධ නොව දේශානුකූලව සැකසීමෙන් සිසුන් තුල ඉගෙනීමට ලැදියාවක් ඇති කළ හැකිය. එවන් වතාවරනයක් නූතන විෂය මාලාව තුල දක්නට නොලැබීමත් අධ්‍යාප නය විභාග කේන්ද්‍රය වී තිබීමත් නිසා සිසුන් දැඩි මානසික වෙහෙසකර තත්වයක් ඇති වී තිබේ. මෙම මානසික පීඩාව දැරීමට අපොහොසත් බෝහෝ සිසුන් පාසලෙන් සමුගනිති.

අද පාසල් තුල ගුරු සිසු සබැඳිකම විශාල වශයෙන් පිරිහී තිබීම පාසල් හැර යාමට බලපාන තවත් හේතුවකි. ගුරුවරුවන් කෙරෙහි සිසුන් තුල පවත්නා විශ්වාසය යම් යම් පලුදුවීම් ඇති වී තිබේ. මෙයට බෝහෝ සෙයින් බලපා තිබෙන්නේ ඇතැම් ගුරු වරුන් තෝරාගත් විශේෂ සිසු පිරිසක් කෙරේ දක්වන ඇති නිසයි. මෙයින් ගිලිහී යන සිසුන් ගුරුවරයා කෙරේ මහත් කලකිරීමක් හා වෛරයක් ඇතිකර ගන්නා අතර ගුරුවර යාත් ඔහු උගන්වන විෂයත් පංති කාමරයත් අවසානයේ පාසලත් එපා වන තත්වයන් උද්ගත වේ. මේ නිසා ගුරුවරුන් හා සිසුන් අතර මනා සබඳතාවක් මෙන්ම විශ්වාසී බවත් නොමැති වීමද පාසල් හැර යාමේ ගැටළුවට හේතු වූ තවත් කරුණක්ව තිබේ.

විදුහල්පති වරයෙක් හා හිටපු විද්‍යා කොමසාරිස් වරයෙක් වූ බෝගොඩ ප්‍රේමරත්න මහතා දක්වන පරිදි ජාති භේදය, පංති භේදය, කුල භේදය, තුලින් හට ගන්නා ගැටළුද සිසුන් පාසල් හැරයාම කෙරේ බලපායි.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

එකම භාෂාවත්. එකම සංස්කෘතියත් ඇති අපට මිනිස් කණ්ඩායමත් විවිධ කුලභේද අනුව බෙදියාම හා පංති කාමරය තුළදී ඔවුන් උස්පහත් කොට සලකන්නේ ඇයිද යන ගැටළුවට සාධාරණ විසඳුමක් නොලැබීම නිසා බෝහෝ සිසුන් තුළ ගුරුවරයා හා සමාජය කෙරේ බද්ධ .වෛරයක් හා මානසික පීඩනයක් ඇති කෙරේ. එමගින් ඇතිවන අපහසුකාරී ස්වාභාවය අධ්‍යාපනය ලැබීමට රුකුලක් ඇති නොකරන බැවින් බෝහෝ සිසුන් පාසලේ අධ්‍යාපනයෙන් සමුගනී.

වත්මනෙහි උසස් අධ්‍යාපනයක් ලැබීමට සිසුන් ගමෙන් නගරයට සංක්‍රමණය වීමක් දක්නට ලැබේ. මෙහිද ග්‍රාමීය හා නාගරික සංස්කෘතිය අත පවත්නා පරස්පරතාවය නිසාත නාගරික සංස්කෘතියට හඩ නැගිමට ඇති අපහසුතාව (අපොහොසත් වීම) නිසාත් සිසුන් විශාල වශයෙන් මානසික ආතතිශාට ලක්වේ. එය අධ්‍යාපන නිරස කිරීමට හේතු වන්නාක් මෙන්ම පාසල් හැරයාමටද හැකි වන්නකි.

වත්මනෙහි පවත්නා පුද්ගලික පංති ක්‍රමය සාද සිසුන් වල්මත් වී තිබේ. ආර්ථික හැකියා ඇති සිසුන් පාසල් වේලාවෙන් පසු ටියුෂන් යාමත් දුප්පත් සිසුන්ට එවැනි පංති වලට යාමට නොහැකියාව නිසා විද්‍යාව සමත්වීමට අමතර විද්‍යාත්මක දැනීම නොමැතිව යයි. ඇති වී තිබෙන ආකල්පයක් හේතුකොට ගෙන බෝහෝ සිසුන් මානසිකව හා අධ්‍යාපනිකව ඇබ්බැහි වී යයි. මෙහි අවසාන ප්‍රථිඵලය වන්නේ ඔවුන් විශාල වශයෙන් අධ්‍යාපනයට අතර මගදී ආයුබෝවන් කීමයි.

ලංකාවේ පාසල් හැරයාම බහුලව දක්නට ලැබෙන්නේ පුත්තලම. ත්‍රිකුණාමලය. යන මුහුදු බඩ ප්‍රදේශවල හා බණ්ඩාරවෙල වැනි කඳුකර ප්‍රදේශවලයි.පාසල් ද්‍රව්‍ය මිල අධික වීමත් විභාග ගාස්තු. පහසුකම් ගාස්තු හා අමතර වියදම් දැරීමට නොහැකි කමත් නිසා වයස 10-12 සිට බෝහෝ දරුවන් නෙත පසට පයකින් තබා තේ දළු නෙළීමටත් පාසල අමතක කරදමා මාළු දැලට සමීප වීමටත් දෙමාපියන්ගේ හෝ වෙනත් රැකියා අවස්ථාවලට යොමුවීමටත් පටන් ගෙන තිබේ. සමහර දරුවන් ස්භාවයෙන් ඉගෙනීමට ඇති අකමැති කම නිසා අතර මගදී පාසලින් ඉවත් වී යාමක් දක්නට ලැබේ. වත්මනේ නම් දෙමාපියන් රැකියා සොයා විදේශගත වීම වැඩිවෙද්දී දරුවන් වැඩිහිටි සැලකිල්ලට විමසිල්ලට ලක් නොවීම නිසා ඉගෙනීම කඩාකප්පල් කරගන්නා බව පෙනී ගොස් ඇත.

කෙසේ වුවත් විවිධ හේතූන් මත දරුවන් පාසල් හැරයාමට පෙළඹී තිබෙන බව වත්මන් සමාජය දෙසට නෙත් යොමු කිරීමෙන් පෙනීයයි. මේ තත්වයට වගකිය යුත්තේ කව්රුන්ද ඉන් දරුවා මුදවා ගන්නේ කෙසේද යන්න පිළිබඳ විමසා බැලිය යුතු කාලය එළඹී තිබේ. ජාතියේ අනාගත පැතුම මල් වැනි සුන්දර දරුවන්ය. උදාවන හෙට දවස ඔවුන්ගේය. අනෙක් යාන්තමට කුස පමණක් පුරවා ගැනීමේ අදිටනින් ඔවුන් අධ්‍යාපනයෙන් තොරව මිනිසුන් ලෙසින් සමාජයට එක්වන්නේ නම්. උදාවන හෙට දවස තක්සලාව කව්රුන් උදෙසා යන ගැටළුවට කඩිනම් විසඳුම් සෙවිය යුතුව ඇත.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# නුඹයි අපෙ පියාණන්!

දමයන්ති විජේවර්ධන.

පියාණන් නැති අපට
පියාණන් වුණා නුඹ
අපේ දුක සැප අසල
සෙනෙහසින් උන්න නුඹ
නිමක් නැති මෙහෙවරින්
වෙහෙස වුව ගතද සිත
නුඹේ වුවනක වෙහෙස
නුදුටුවෙමි කිසි දිනක
අපේ බර කරට ගෙන
මහා මිනිසෙකු ලෙසින
වෙහෙස වුනි හැම දිනම
දුක සැපද එකසේ ගෙන
නුඹට අත්වැලවන්න
නොහැකි වුනි මට තවම
නුඹේ දිරිය සිත අසල
මම තවම නොදරුවෙකි
නුඹේ ඔය පොඩි සිතට
ජීවිතේ බර වැඩියි
නමුදු නුඹේ දිරිය සිත
තලනු බෑ කිසිවෙකුට
නුඹට ජය උරුමමයි
ජීවිතේ යම් දිනක
එදිනටයි මගේ ලොවේ
සිනා රැළි පුදින්නේ
එදින නුඹේ සිනා ළඟ
සෙනෙහසින් රැඳෙන්නට
නුඹේ අක්කණ්ඩියට
අවසරද මල්ලියේ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'READING MAKETH A FULL MAN'

**Chandani Wijewardane**
2nd Year

This famous statement was expressed by the great English Scholar Sir Francis Bacon. In his Essay on reading Bacon stresses the value of reading in the making of a man of wisdom and good character.

He says, that books are the man's best friend. What is a book? It is the product of an intellectual and full of experience. A writer is a person who surveys life and unveils the truth. He is above all, he speaks to the world, shows the truth and makes the social justice.

We who are not full of experience. Can gather experience by reading books which are the stores of knowledge. A person who reads can gather knowledge as well as experience. A book can make you intelligent. It can educate and enlighten you. It can make you full of experience. A well read man is not alone. He can lead any discussion be a prominent person in any assembly because information gatherd by wide reading supports him.

If a person is occupied in reading, he does not waste time. He does not idle. An idler's mind is a devils workshop. He turns out to be a criminal. So if you can develop the habit of reading your tim  is never wasted. It can definitely put you on the correct path.


We should always keep company with more educated persons. When there are no such persons the best companion is a book. You are never alone if you have a book with you.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**PRIMARY COURSE TAMIL - 1996 - 98**




**PRIMARY COURSE SINHALA - 1996 - 98**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PHYSICAL EDUCATION COURSE TAMIL - 1996 - 98



SCIENCE COURSE TAMIL - 1996 - 98



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியற் கல்லூரிகளில் ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தல்

திருநாவுக்கரசு. கமலநாதன்
M. A., Dip. in. Ed.

## சில குறிப்புகள்

### கல்வியற்கல்லூரிகளில் ஆய்வுக்கட்டுரை உருவாக்கலின் அவசியம்

இன்று நாடளாவிய ரீதியில் வளர்ச்சி பெற்றுவரும் கல்வியியற் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தமது பகுதித் தேவையொன்றினைப் பூர்த்தி செய்யும் பொருட்டு ஆய்வுக்கட்டுரையொன்றினைச் சமர்ப்பிக்க வேண்டியவர்களாகவுள்ளனர். அது தொடர்பாக இங்கு சிந்திக்கப்படுகிறது.

கல்வியியற் கல்லூரிகளில் ஆய்வுக்கட்டுரையொன்றினைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பல காரணிகள் நோக்கமாகக் கொள்ளப்படுகின்றன. அவற்றில் முக்கியமாக ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தல் என்ற செயற் திட்டத்தை ஒரு பயிற்சி ஆசிரியர் நிறைவேற்றுவதன் மூலம் பல பிரச்சினைகளை எதிர் கொண்டு, அவற்றில் வெற்றிகண்டு, வெற்றிகரமான ஆசிரியராகத் திகழக் கூடிய இயல்பினைப் பெற்றுக் கொள்வதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. அத்துடன் இங்கு அவர் பெறுகின்ற அனுபவம் அவரது எதிர்கால வாழ்வில் தோன்றுகின்ற பிரச்சினைகளை இனங்காணவும், துணிவுடன் எதிர் கொண்டு வெற்றி பெறவும் உதவியாக அமைகின்றது.

மேலும் குறிப்பிட்ட ஒரு செயற்திட்டத்தினை ஆற்றி முடிப்பதன்மூலம் புதிய கருத்துக் களையும் புதிய சிந்தனைகளையும் பெற்று புதிய தேடலுக்கு வழிவகுத்துக் கொள்கிறார். இங்கு அவர் பெறுகின்ற முடிவு அவருக்கு மாத்திரமல்லாமல் அவரைச் சார்ந்தோர்க்கும் மற்றும் ஏனையோர்க்கும் பயன்தரக்கூடியதாக அமைவதால் சமூக மரபுரிமை பேணப்படவும் வாய்ப்புக்கிட்டுகின்றது.

### ஆரம்பத்தில் ஒரு குறிப்பு

கல்வியியற் கல்லூரி மாணவர்கள் ஆய்வுக்கட்டுரையினை உருவாக்கும் போது பின் வரும் இரண்டு விடயங்கள் கவனத்தில் கொள்ளல் சிறப்புத்தர வல்லது.

1. ஆய்வு: தான் சார்ந்த பாடசாலையை மையப்படுத்தி அமைத்துக் கொள்ளல்

2. ஆய்வின் முடிவுகள்: அப்பாடசாலையில் அமுல் நடத்தக் கூடிய தகுதியினைக் கொண்டிருத்தல்.

இங்கு கூறப்பட்ட விடயங்களை மனதிருத்தி ஆய்வுக் கட்டுரைகளை மாணவர்கள் தயாரிக்க முன்வருதல் வேண்டும். அது அவர்கள் பணியினைப்பயனுடையதாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆய்வும் வாழ்வும்

ஒரு விடயத்தை ஆழ்ந்து நோக்கி ஆய்வு செய்யும் இயல்பு மனிதவாழ்வில் புதிய தொன்றல்ல. காட்டுமிராண்டியாக வாழ்ந்த மனிதன் முன்னேறி நாகரிக உலகில் வாழ்வது அவன் ஆற்றிய ஆய்வுகளாலேயே என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும்.

## ஆய்வு வரலாற்றில் வளர்ச்சிப் படிகள்

ஆரம்ப காலம்முதல் இன்றுவரை நடைபெற்ற, நடைபெற்று வருகின்ற ஆய்வுகளை அவதானிக்கின்ற போது அவற்றின் இயல்புகளின் அடிப்படையில் மூன்று வகையாக அடையாளம் காட்டலாம்

### (1) ஆரம்ப கால ஆய்வுகள்

மனிதன் தனது வாழ்க்கைப் பாதையில் எதிர்நோக்கிய சிக்கல் ஒன்றினை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு, அல்லது அச்சிக்கலில் இருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் பொருட்டு நடைபெற்ற ஆய்வுகள் இக்காலத்துக்கு உரியன. பெருமளவு ஒழுங்குபடுத்தப்பட்ட முறைகளைக் கொண்டதாக இக்கால ஆய்வுகள் அமைய வாய்ப்பிருக்கவில்லை.

### (2) இடைக்கால ஆய்வுகள்

மனித வரலாற்றில் அறிவு மறுமலர்ச்சி தோன்றிய காலப் பகுதியாக இக்காலகட்டம் அமைகிறது. புதியனவற்றை அறிய வேண்டும். புதிய விடயங்களைக் காண வேண்டும் என்ற அவாநிலை மனிதனிடத்துத் தோன்றி வளர்ந்த காலம் இது. எனவே அத்தகைய பண்புகளுடன் தோன்றிய ஆய்வுகள் இங்கு இடம் பெறுகின்றன. மேலும் இக்காலகட்டத்தில் தன் செயல் நிகழ்வுகள் சிலவும் ஆய்வுக்களமாகி மனித ஆய்வு உணர்வினை ஊக்கியுள்ளன. உதாரணமாக தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்ட அமெரிக்காக் கண்டம் நாடுகாண் பிரயாண ஆய்வுகளுக்கும் புதிய கடல் மார்க்க ஆய்வுகளுக்கும் வித்திட்டதை நினைவிற் கொள்ளலாம்.

### (3) தற்கால ஆய்வுகள்

மனித வளர்ச்சி உயர்மட்டத்தில் உள்ள இன்றைய காலகட்டத்தின் ஆய்வுகள் உயர் தன்மைகள் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இவ்வாய்வுகள் திட்டவட்டமான உருவமைப்புடனும் உறுதியான கோட்பாடுகளுடனும் குறிப்பிட்ட குறிக் கோளுடனும் முன்னேறிச் செல்கின்றன.

இக்கருத்துக்களை மனதிற் கொண்டு தற்காலத்தில் நாம் அமைத்துக் கொள்கின்ற ஆய்வுகள் எத்தகையனவாக அமைய வேண்டும் என்பதில் அக்கறை கொள்ள வேண்டும்.

## ஆய்வும் சிந்தனையும்

மனிதன் சிந்திக்க ஆரம்பித்த போது மனித நாகரிகங்கள் வளர ஆரம்பித்தமை வரலாறு. ஆய்வுக்கு அடிப்படையாக அமைவதும் சிந்தனையே இது எமது மூளையின் அடிப்படையான செயற்பாடாகும்.

ஆய்வினை ஆரம்பத்திலிருந்து முடிவுவரை மூளையின் தொழிற்பாடான சிந்தனையே வழிநடத்திச் செல்ல வல்லது. எனவே ஆய்வு சிறப்படைய சிந்தனை பெரிதும் வேண்டப்படுகின்ற அதே வேளையில் அந்தச்சிந்தனை விழிப்புணர்வோடும் உயிர்த்துடிப்புடனும் இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித சிந்தனை இரண்டு விதமாகத் தொழிற்படுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுவர்.

(1) உயிர்ப்பற்ற சிந்தனை

இச்சிந்தனைவகை மனிதமூளைக்கு எதுவித சிரமமும் இன்றித் தொழிற்படுகின்றது. இது பரம்பரை வாயிலாக மனிதனுக்குக் கிடைப்பதாகக் கருதுகின்றார்கள். குளிருக்குப் போர்வையைப் பயன்படுத்தலை இவ்வகைக்கு உதாரணமாகக் கூறமுடியும்.

(2) உயிர்ப்புடைய சிந்தனை

ஆய்வுத்துறையில் பெரிதும் வேண்டற்படுவது இவ்வகைச் சிந்தனையே. மனித மூளையின் உபயோகம் இங்கு கூடுதலாகத் தேவைப்படுகின்றது. பரம்பரை வாயிலாகக் கிடைத்தனவற்றைக் கூட இவ்வகைச் சிந்தனையின் உபயோகத்தால் பண்படுத்த முடியும். சிக்கல் ஒன்றினை எதிர் கொள்ளும்போது அதில் இருந்து விடுபடுவதற்கு உதவுவது இவ்வகைச் சிந்தனையே. இங்கு இச்சந்தர்ப்பங்களில் தோன்றக் கூடிய சுதந்திரமான சிந்தனைக்கும், தனித்தன்மை வாய்ந்த தீர்வுக்கும் மதிப்பு அதிகம் கிடைக்கின்றது. இங்கு சிக்கல்களுக்கு விடை காணமுயலும் போது தோன்றுகின்ற புதிய சிந்தனைகளால் உயிர்புடைத்தன்மை அதிகம் பெறப்படுவதாகக் கொள்ளப்படுகின்றது.

ஆய்வு நோக்கில் இரண்டாவது வகைச் சிந்தனைக்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. அதுவே ஆய்வினை வளப்படுத்தி, நெறிப்படுத்தி மெருகேற்றவல்லது. இந்த உயிர்புடைச்சிந்தனை பலபகுதிகளைக் கொண்டுள்ளது. அவற்றில் பின்வருவன முக்கியமானவை

அ. ஆய்ந்தறி சிந்தனை

ஆ. பிரித்தறி சிந்தனை

இ. பகுத்தறி சிந்தனை

ஈ. தருக்க பூர்வமான சிந்தனை

இவை நான்கும் ஆய்வில் இன்றியமையாதனவாகத் தொழிற்படுவன. ஆய்வாளர் இவற்றின் வழியில் சிந்தனையை நெறிப்படுத்துகின்ற போது அதன் ஆழம் பரப்பு ஆகியன விரிவடைந்து ஆய்வின் தரத்தை உயர்த்தி அதனைப்பயன்பாடு உடையதாக்கும்.

சிந்தனையில் மற்றுமோர் வகையான **கற்பனைச் சிந்தனையை** அல்லது **ஊகச் சிந்தனையை** அல்லது அதன் உயர் வடிவமான **படைப்புச் சிந்தனையை** ஆய்வில் பயன்படுத்தல் பொருத்தமுடையதொன்றல்ல.

## கருதுகோளமைத்தல்

ஆய்வுக்குப் பெரிதும் இன்றியமையாதது கருதுகோள் அமைத்தல் என்ற செயற்பாடாகும். அதற்கு முன் கூறிய கற்பனை சிந்தனை உதவக் கூடியது.

ஆய்வுப் பொருளைத் தெரிவு செய்த பின்னர் அந்த ஆய்வினை வழி நடத்திச் செல்வதற்காகக் கருதுகோள் ஒன்றினை அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படும். அச்சந்தர்ப்பத்தில் கற்பனைச் சிந்தனையின் பங்கினை நாடமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுகோள் ஒன்றினை அமைத்துக் கொண்டால் அதனடிப்படையில் ஆய்வினை இலகுவாக வழிநடாத்திச் செல்லமுடியும். ஆய்வின் முடிவில் நாம் அமைத்துக் கொண்ட கருதுகோள் சில வேளை தவறானதாக அமையலாம். சிலவேளை உண்மையென நிரூபிக்கப் படலாம். கற்பனையடிப்படையில் அமைத்துக் கொண்ட கருதுகோள் தவறானதாகவேயமையும் என்று முடிவு கொள்ளக் கூடாது. அதே வேளை அதனை வலிந்து உண்மையாக்கும் முயற்சியிலும் ஈடுபடக் கூடாது. ஆய்வொன்றினை முன்னெடுத்துச் செல்லும்போது அதற்கான ஆரம்பப் பணியினை இலகுவாக்குவதற்கு கருதுகோள் உதவும் என்பதனை கருத்தில் கொண்டு அதனை அமைப்பதில் அக்கறை கொள்ளவேண்டும்.

## ஆய்வாளரிடம் இருக்க வேண்டிய பண்புகள்

ஆய்வுப் பண்பு இயல்பாகவே மனிதரிடம் காணப்படுவதாக உளவியலாளர்கள் கருது வர். அவர்களிடம் காணப்படுகின்ற தேடலூக்கமும், சிக்கல்களுக்கு விடைகாணும் அவா நிலையும், விடயங்களைக் கூர்ந்து நோக்கும் இயல்பும் ஆய்வுப்பண்பினை ஊக்குவிப்பதாகக் கருதப்படுகின்றது. அந்தப் பண்புகளை தொடர் பயிற்சியாலும் கடும்முயற்சியாலும் வளர்த்துக் கொள்பவர்கள் சிறந்த ஆய்வாளர்களாக புகழ்வாய்ந்த விஞ்ஞானிகளாகத் திகழ்ந்துள்ளனர்.

ஆய்வாளரிடம் காணப்படவேண்டிய இந்த அடிப்படைப் பண்புகளுடன் வேறுசிலவற் றையும் இங்கு அடையாளம் காட்டமுடியும்.

| | | | |
|---|---|---|---|
| அ. | உண்மைதேடும் ஆர்வம் | ஆ. | ஆய்வுப் பொருளில் நுண்பார்வை |
| இ. | தருக்கத் திறன் | ஈ. | அறிவு நேர்மை |
| உ. | திறந்த மனம் | ஊ. | பக்கம் சாராமை |
| எ. | பொறுமைப்பண்பு | ஏ. | கடமையுணர்வு |
| ஐ. | ஆய்வுப்பற்று | ஒ. | முன்னறிவு |
| ஓ. | ஏனைய ஆய்வாளரை மதித்தல் | ஔ. | சூழலை அறிதல். |

## ஆய்வு வகைகள்

ஆய்வுகளை அவை நடைபெறும் துறைகள் அடிப்படையில் இரண்டு வகைகளுக்குள் அடக்குகிறார்கள்.

1. இயற்கையியல்
2. சமுதாயவியல்

### (1) இயற்கையியல்

இயற்கையில் தோன்றிய பொருட்கள் நிகழ்ச்சிகள் பற்றிய ஆய்வுகள் இதில் அடங்கு கின்றன. இயற்கை இயலை மேலும் இரண்டு உப இயல்களாக நோக்கி அவதானிக் கின்றார்கள்

1. இரசாயனவியல் இயல்பியல் இரண்டும் அடங்கிய பௌதிகவியல்
2. விலங்கியல் தாவரவியல் இரண்டும் அடங்கிய உயிரியல்

### (2) சமுதாயவியல்

மனிதனின் சமுதாய வாழ்க்கை பற்றிய ஆய்வு இதில் அடங்குகின்றது. மனிதன் தனது சமுதாய வாழ்வுக்காகப் பெற்ற பொருட்கள் அமைப்புக்கள் மனித உறவுகள் ஆகியன இங்கு அடங்குகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனது வாழ்வில் காலம் கண்காணாத ஒரு உறுப்பாகத் தொழிற்பட்டு அதனை வழிநடத்துகின்றது. இதனடிப்படையில் ஆய்வினை மேலும் மூன்று பிரிவினுள் அவதானிக் கலாம்.

(அ) வரலாற்று ஆய்வு

இங்கு கடந்தகால நிகழ்வுகள் செய்திகள் மையப்படுத்தப்படுகின்றன. அதன்மூலம் எமக்கு நல்ல கருத்துச் செல்வம் கிடைக்கின்றது.

(ஆ) விபரிப்பு ஆய்வு

இங்கு அன்றாடம் எமது வாழ்வில் காணும் நிகழ்வுகளும் செயற்பாடுகளும் முக்கியத் துவப்படுத்தப்படுகின்றன. எமது செயல்களுக்கும் அனுபவங்களுக்கும் களமாக நிகழ்காலம் அமைந்து தொழிற்படவைக்கும் போது இவ்வகை ஆய்வுகள் தோற்றம் பெறுகின்றன.

(இ) பரிசோதனை ஆய்வு

குறிப்பிட்ட சில மாறிலிகளை கட்டுப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நிகழ்வுகளை இது விபரிக்கின்றது.

பொதுவாக ஆய்வுகள் யாவும் இவற்றில் ஒன்றின் அடிப்படையில் அல்லது மூன்றும் இணைந்த அடிப்படையில் நடத்தப்படுவதனை அறிந்து கொள்ளமுடிகின்றது.

## ஆய்வுப் பொருளைத் தெரிதல்

ஆய்வு பூரணப்படுத்தப்படுவதும் பயனுள்ளதாக அமைவதும் தெரிவு செய்யப்படும் ஆய்வுப் பொருளிலேயே தங்கியுள்ளது. ஆய்வுப் பொருளை தெரிவு செய்யும் போது எவற்றைத் தவிர்க்க வேண்டும் என்பதனை முதலில் நோக்குவோம்.

அ. சிக்கலான தலைப்பினைத் தெரிதல்.
ஆ. தொடர்பில்லாத பொருளில் ஆய்வு செய்தல்.
இ. வலுவற்ற ஆய்வுப் பொருளை தெரிதல்.
ஈ. மேற்பார்வையாளரின் தனி விருப்பத்துக்கு ஆய்வுப் பொருளைத் தெரிதல்.
உ. தெரிவு செய்யும் ஆய்வுப் பொருளில் ஆழமான அறிவு இல்லாதிருத்தல்.
ஊ. ஆய்வில் புரட்சி செய்ய வேண்டுமென்று அவாவுற்று தகுதிக்கு மீறியதைத் தெரிவு செய்தல்.
எ. தகுந்த வழிகாட்டுனர் இல்லாத துறையில் தெரிதல்.
ஏ. நடைமுறைச் சாத்தியமற்ற பொருளில் தெரிதல்.
ஐ. சகபாடிகள் ஆதரவினை மதிக்காது விடல்.

## தெரிதலின் கவனத்தை கொள்ள வேண்டியவை எவையென நோக்குவோம்.

அ. தன்விருப்புக்கு ஏற்ப தெரிதல்
ஆ. அறிஞர்கள் சகபாடிகளுடன் கலந்து தெரிதல்
இ. மேற்பார்வையாளருடன் கலந்து தெரிதல்
ஈ. ஈடுபாடுகொண்ட துறையில் தெரிதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ. பரந்த அறிவுள்ள விடயத்தில் தெரிதல்
ஊ. போதியளவு ஆய்வு நடக்காத பகுதிகளில் தெரிதல்
எ. சமுதாயத்திற்கு நன்மை தரக்கூடிய விடயங்களில் தெரிதல்
ஏ. தகவல்கள் செய்திகள் அதிகம் பெறக்கூடிய துறைகளில் தெரிதல்
ஐ. நடைமுறைப் படுத்தக் கூடிய விடயமாக தெரிதல்

## தரவு திரட்டுதல்

ஆய்வுப் பொருளைத் தெரிவு செய்து கொண்ட பின்னர், கட்டுரை எழுதுவதற்கு முன்னர், ஆய்வுக்குத் தேவையான முழு விபரங்களையும் இயன்றளவு சேகரித்துக் கொள்ளல் வேண்டும். இதன்மூலம் ஆய்வுதொடர்பான மொத்தக் காட்சியினையும் அகத்தே பெற்றுக் கொள்ளல் வேண்டும். அதன் பின்பே கட்டுரையை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.

இதை விடுத்து குறிப்பிட்ட சில தகவல்களுடன் கட்டுரையின் ஒரு பகுதியினை எழுதி முடித்துத் தொடர்ந்து மிகுதியினைத்திரட்ட முயற்சி செய்யும் போது சில வேளை பின் கிடைக்கும் தகவல்கள் முன் எழுதிய கட்டுரையின் பகுதிக்கு முரணாக அமையுமானால், எழுதியவற்றை திருத்தி எழுத வேண்டிய நிலை ஏற்படலாம். இது வேலைப்பழுவை அதிகமாக்கும். எனவேதான் வேண்டும் தகவல்கள் அனைத்தையும் பெற்றுக் கொண்ட பின்னர் கட்டுரையை எழுத ஆரம்பித்தல் வலியுறுத்தப்படுகின்றது.

## தரவு திரட்டும் முறைகள்

இதற்குப்பலமுறைகள் நடைமுறையில் உள்ளன. இலகுவாக தகவல்களைப் பெறக் கூடிய மூன்று முறைகள் இங்கு தரப்படுகின்றன.

### (1) கற்றல் முறை

நூல்கள், ஆவணங்கள், நாளிதழ்கள், ஏடுகள் ஆகியவற்றை ஆய்வுப் பொருளுடன் தொடர்புடையதாகத் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவற்றைக் கசடறக்கற்று தகவல்களைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும். கற்கும் விடயங்களை. உரியமுறையில் குறிப்பெடுத்துக் கொள்ளல் வேண்டும். கற்ற நூல், அதன் ஆசிரியர், வெளியீட்டாளர், வெளியிடப்பட்ட ஆண்டு, நூலினைப் பெற்ற இடம், ஆகியவற்றையும் தெளிவாகக் குறித்துக் கொள்ள வேண்டும். இது ஆய்வாளர் கருத்துக்களுக்கு ஆவணச் சான்றிதழ் தருவதுடன் மீண்டும் அதே நூலைப் பெற வேண்டிய சந்தர்ப்பம் வரின் வேலையை இலகுவாக்கும்.

### (2) பேட்டி முறை

அறிஞர்கள் பெரியோர்கள் முதியவர்கள் குறிப்பிட்ட துறை சார்ந்தவர்கள் ஆகியோரிடம் நேரடியாகச் சென்று தகவல் திரட்டும் முறை இது. இதற்காகச் செல்லும் போது ஆய்வுக் குறிக் கோளில் இருந்து விலகாத வகையில் பேட்டியினை திட்டமிட்டு வடிவமைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகும்.

### (3) வினா வரிசை முறை

குறிப்பிட்ட தொகையானவர்களிடம் இருந்து தகவல்களை பெறுவது பொருத்தம் உடையது என்று ஆய்வாளர் கருதுகின்ற சந்தர்ப்பங்களில் இம்முறையினைக் கையாளலாம். ஆய்வுக்குப்பொருத்தமான பயன்தரவல்ல வினாக்களை தெரிவு செய்து கொள்ள வேண்டியதும் திட்டமிட்டுக் கொள்ள வேண்டியதும் ஆய்வாளரின் முக்கிய கடமைக் கூறாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைகள் தெளிவில்லாதபோது விளக்கம் பெறுதல் இங்கு சற்றுக் கடினமாகலாம். ஆனால் பேட்டிமுறையில் இதனைத்தவிர்த்துக் கொள்ளலாம்.

அத்துடன் இவ்விரண்டு முறையிலும் வினாக்கள் வினவும் போது ஆய்வாளர் திறந்த மனதுடன் செயற்பட வேண்டும். தனது விருப்பத்துக்குச் சாதகமாக பதில் கிடைக்கக் கூடிய வகையில் வினாக்களை வினவக்கூடாது.

இவற்றில் பொருத்தமான ஒரு முறையையோ தேவைப்படின் மூன்றுமுறைகளையுமோ பயன்படுத்தித் தகவல்களைத்திரட்டிக் கொள்ளலாம்.

## ஆய்வினைத் திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும்

ஆய்வு ஒழுங்கமைக்கப்பட்டு திட்டமிடப்பட வேண்டியது அவசியமானது. அவ்வாறு திட்டமிடப்படும்போது ஆய்வாளரால் மேற்பார்வையாளரிடம் சமர்ப்பிக்கப்படக் கூடிய விடயச் சுருக்கம் அல்லது திரட்டு என்கின்ற - Synopsis - ஆய்வுப் பணிகளை இலகுவாக்கக் கூடியது. ஆய்வினைத் திட்டமிட்டுக் கொள்ளவும் ஒழுங்கமைத்துக் கொள்ளவும் பின்வரும் மாதிரியை ஆய்வாளர்கள் பின்பற்றலாம்.

### ஆய்வுத்திட்டமிடலுக்கு ஒரு மாதிரி

- ஆய்வாளர் பெயர்
- ஆய்வாளர் பயிலும் நெறி
- மேற்பார்வையாளர் பெயர்
- ஆய்வுத் தலைப்பு
- ஆய்வுப் பொருளைத் தெரிவு செய்தமைக்கான காரணம்
- தகவல் பெறும் வழிகள்
- ஆய்வின் கருது கோள்
- பயன்படுத்தும் ஆய்வு முறை
- ஆய்வுக் கட்டுரையின் உப தலைப்புகள்
  முன்னுரை, நன்றியுரை, முடிவுரை.
  உறுதியுரை என்பவற்றுடன் ஆய்வு
  விடயங்கள் அத் - 1, அத் 2......
  என்றவாறு

## முன்னுரை முடிவுரை நன்றியுரை உறுதியுரை

இவை ஆய்வுக்கட்டுரையில் இடம்பெறும் நியமம் சார்ந்த சில முக்கிய இயல்புகளாகும்.

### முன்னுரை

இங்கு ஆய்வு பற்றிய பொதுவான கண்ணோட்டம் இடம்பெறும். குறிப்பிட்ட இவ்வாய்வினை செய்வதற்குத் தூண்டியாக அமைந்த காரணிகள், ஆய்வு செய்யப்படுவதன் நோக்கம், எவ்வெவ் கோணங்களில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது, அதன் போக்கு எவ்வாறு அமைகிறது, ஆய்வின் தன்மையினது பாங்கு, ஆய்வு விபரங்களுக்கு ஏற்ப அதிகார வைப்பு முறைமை ஆகியன இங்கு தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவுரை

இங்கு ஆய்வின் பேறுகள் விளக்கமாகக் கூறப்பட வேண்டும். இவ்வாய்வு மூலம் ஆய் வாளர் பெற்ற அனுபவத்தினையும் அதன் மூலம் தோன்றிய திருப்தியுணர்வினையும் இங்கு விளக்கலாம் அத்துடன் பின்வரும் ஆய்வாளர்கள் குறிப்பிட்ட அத்துறையில் அடுத்துத் தொடர்ந்து செய்யத்தக்க ஆய்வுப் போக்கிற்கான ஆலோசனையையும் இவ்விடத்தில் வழங் கலாம்.

நன்றியுரை

ஆய்வுக் கட்டுரையில் சம்பிராதய பூர்வமாக இடம் பெறுகின்ற ஒரு அம்சம் இதுவாகும். ஆய்வுக்கட்டுரை எழுதுவதற்கு உதவியவர்கள் அனைவரையும் நினைவிற் கொண்டு நன்றி கூறுதல் இங்கு இடம்பெறுகின்றது.

உறுதியுரை

உறுதியுரை இரண்டு, ஆய்வுக்கட்டுரையின் இறுதியில் வழங்கப்பட வேண்டும்

உறுதியுரை 1

ஆய்வாளரால் வழங்கப்படுவது; ஆய்வு சுயமாக செய்யப்பட்டதாகவும் வேறெதையும் பின்பற்றியோ அன்றி பிரதி பண்ணியோ சமர்ப்பிக்கப்படவில்லை என்பதையும் ஆய்வாளர் உறுதி செய்தல்

உறுதியுரை 2

பாடசாலை அதிபரால் வழங்கப்படுவது; ஆய்வு தனது பாடசாலை சம்பந்தமானது என்றும் ஆய்வாளர் குறிப்பிட்ட பாடசாலை தொடர்பாக விபரங்களை திரட்டி ஆய்வினை உரு வாக்கினார் என்றும் அதிபர் உறுதிசெய்தல்.

## உசாத்துணை

ஆய்வுக் கட்டுரையைப் பூர்த்தி செய்வதற்கு உதவிய தரவுகளைப் பெறுவதற்கு துணை நின்ற ஆதாரங்களது பட்டியல் இங்கு குறிப்பிடப்படலாம். ஆய்வுக்கட்டுரை எழுத உதவிய நூல்கள், சஞ்சிகைகள், கட்டுரைகள், ஆவணங்கள், பேட்டி மூலம் தகவல் பெற்றிருந் தால் பேட்டி தந்தவர்கள் விபரம் போன்றன இங்கு விபரமாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

## துணை நின்றவை

1. ஆய்வியல் கோட்பாடுகளும் செயல்முறைகளும்
**டாக்டர். எஸ். என். கணேசன்**

2. கலைஞானம் 1990 - யாழ் பல்கலைக்கழகம்

3. Methodology of Research in Education
**Kulbir Singh Sidhu**

4. கல்வி வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும்
பாகம் II தேசிய கல்வி நிறுவகம், மகரகம.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணத்தில் ஓர் உறவு

**V. மோகனகுமாரி**
2ம் வருடம்
உடற்கல்விப் பிரிவு

திருமலையில் இருந்து கொழும்பை நோக்கி பயணம் செல்லும் Estern Travel இல் இருக்கையின்றி நின்றபடி பயணம் செய்கிறாள் கீதா. கலவரம் காரணமாக பாதுகாப்பைத் தேடி தனியார் வாகனத்திலேயே பயணம் செய்யும் கீதாவுக்கு துணையாக பக்கத்து வீட்டு அங்கிளும் செல்கின்றார். அவள் நீண்ட தூரம் நின்று வருவதை சகிக்காத ஒரு பயணி தனது இருக்கையை அவளுக்காக விட்டுக் கொடுக்கின்றான். அவனுக்கு தன் நன்றியை கூறி இருக்கையில் அமரும் வேளையில் பஸ் நிற்கின்றது. அதைத் தொடர்ந்து பஸ் கிளினர் "கட்டி ஒக்கம பகின்ட" என்கிறார் அனைவரும் தமது உடமைகளுடன் இறங்கிச் செல்கின்றனர். பரிசோதனை முடிந்து பஸ்சில் ஏறும்போதுதான் கீதா கவனிக்கின்றாள்.

இருக்கையை கொடுத்த பயணி இராணுவ வீரன் ஒருவருடன் கைகுலுக்கிய வண்ணம் கதைத்துக் கொண்டிருக்கிறான். ஒட்ட வெட்டிய கிராப்பும், மழிக்கப்பட்ட முகமும் அவரும் ஒரு இராணுவ வீரராக இருக்கலாம் என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. ஏறிய அவன் கீதாவின் அருகில் வந்து கதை கொடுக்கத் தொடங்குகின்றான். கீதாவுக்கு சிறு பதட்டம் ஏற்பட்டபோதிலும் பயம் தோன்றவில்லை. காரணம் அவள் குடும்பம் வசிப்பது இராணுவ பகுதியில்தான். அவனுக்கு நன்றாக தமிழ் தெரியாது. கீதாவுக்கு நன்றாக சிங்களம் வராது. இருந்தும் இருவரும் தாங்கள் கொழும்பு செல்வதற்கான காரணத்தை ஒருவருக்கொருவர் தெரிவித்துக் கொள்கின்றனர். அவன் தான் ஒரு இராணுவ வீரன் என்றும் திருக்கோணமலை கோட்டையில் கடமையாற்றுவதாகவும் தனது தந்தையின் ஆண்டுக் கிரியை செய்வதற்காக தனது ஊரான காலிக்குச் செல்வதாகவும் கூறுகின்றான். கீதா "கிளரிக்கல்" நேர்முகப் பரீட்சைக்கு செல்வதாக கூறுகின்றாள்.

பாலம்போட்டாறு செக் பொயின்டில் இளம் வயதினரை வாகனத்திலிருந்து இறக்கி சந்தேகத்தின் பேரில் வெலிக்கடைக்கு ஏற்றுவதை அக்காலப் பகுதியில் வழக்கமாக கொண்டிருந்தபடியால் கீதாவையும் அவ்விடத்தில் இறக்குகின்றனர். இதைக் கண்ட அவளுடன் பயணம் செய்த இராணுவ வீரர் கீதாவை தனக்கு தெரியுமென்றும் கொழும்புக்கு தானே அழைத்துச் செல்வதாகவும் கூறி அவளை விடுவிக்கின்றான். தன்னைக் காப்பாற்றிய அவனை கண்களிலிருந்து கண்ணீர் பெருக பார்க்கின்றாள். அவன் "நங்கி அள்டன்ன எ(ப்)பா" என்கின்றான். அதிலிருந்து அவர்களது நட்பு ஆரம்பமாகிறது. அதன் பின்பே அவனது பெயரை கேட்கிறாள். தனது பெயர் "சந்தன பிரேமரத்ன" என்று கூறுகிறான். இரு குடும்பத்தாரின் நிலைமை பற்றியும் இருவருக்கும் விளங்கக் கூடிய பாஷையில் சம்பாஷித்துக் கொண்டே கொழும்பை வந்தடைகிறார்கள்.

பஸ் கொழும்பை வந்தடையவும் காலிக்குச் செல்லும் பஸ் தயாராகவும் சரியாக இருந்தது. எனவே "சந்தன, கீதாவிடம் விடைபெற்று சென்று விடுகிறான். மறுநாள் கொழும்பில் நடந்த குண்டுவெடிப்பு காரணமாக நேர்முகப் பரீட்சை நடைபெறவில்லை. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அலுவலகத்தில் கூறுகின்றனர். மிகுந்த கவலையுடன் கீதா தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பிடம் திரும்புகிறாள். அடுத்த நாள் திருமலை செல்வதற்காக பஸ் ஸ்ராண்ட் இல் நிற்கின்றாள். எங்கு திரும்பினாலும் பாதுகாப்பு படையினரின் பலத்த சோதனை நடைபெறுகிறது. சோதனைகள் முடிந்து, பஸ் வந்து நிற்கவும் பஸ்சில் ஏறுகிறாள். பஸ் புறப்படும்வரை அன்றைய புதினத்தாளை புரட்டிக் கொண்டிருக்கின்றாள்.

பஸ் புறப்படும் வேளை காதருகில் Good Morning என்பது கேட்கவும் திடுக்கிட்டுத் திரும்பியவள் இன்ப அதிர்ச்சியடைகிறாள். அருகில் சந்தன நிற்கின்றான். கீதாவும் Good Morning சொல்கிறாள். நேர்முகப் பரீட்சை பற்றி சந்தன கேட்க கீதா நடந்ததை கூறுகிறாள். சந்தனவுடன் வந்ததால் கீதா பாதுகாப்பாக திருமலை வந்தடைகிறாள். இறங்கும் போது கீதா தனது வீட்டு விலாசத்தை கொடுத்து கட்டாயம் வீட்டுக்கு வருமாறு கூறி விடை பெறுகிறாள்.

வீட்டில் தனது பயணம் பற்றியும் சந்தன பற்றியும் கீதா கூறுகிறாள். ஓரிரு நாட்களின் பின் சந்தன அவளது வீடு தேடி வருகின்றான். வீட்டினருக்கு சந்தனவை அறிமுகம் செய்து வைக்கிறாள். தன் மனதில் சந்தனவைப் பற்றி நினைத்திருந்ததைக் கூறி தனது அண்ணன் என அழைக்க அனுமதி கேட்கிறாள். அவனும் தான் அவளைக் கண்டது முதல் தனது தங்கையாகவே அவளை நினைத்ததாக கூறுகிறார். நாளடைவில் அண்ணன் தங்கை உறவு வலுப்பெற்று வளர்கிறது. சந்தன வேறு ஊர்களுக்கு மாற்றலாகி போகும்போது கீதாவிடம் சொல்லிவிட்டு செல்வதுடன் கடிதம் மூலமாகவும் தொடர்பை வைத்திருந்தனர்.

கீதாவின் வீட்டாரும் சந்தனவை தங்களில் ஒருவனாகவே நினைத்து வீட்டில் எது நடந்தாலும் சந்தனவிடம் அபிப்பிராயம் கேட்குமளவமிற்கு வந்திருந்தனர். சந்தன தங்களது வெசாக் பண்டிகையின் போது தனது தாய், தங்கைகளை திருமலைக்கு அழைத்து வந்து கீதா வீட்டாருக்கு அறிமுகம் செய்து வைக்கிறான். கீதா வீட்டிலேயே அவர்களுக்கு விருந்து பசாரமும் நடைபெறுகிறது. அவர்களுக்கும் கீதா வீட்டினரைப் பிடித்துப் போகிறது. சந்தனவின் தங்கைகளும் கீதாவை அக்கா என்றே அழைக்கத் தொடங்கினர். இரு குடும்பங்களும் மொழியால் வேறுபட்ட போதிலும் பாசத்தால் கட்டுண்டு போகின்றனர்.

கீதாவின் வீட்டினர் கீதாவிற்கு மணமகன் தேடத் தொடங்கினர். வெளிநாட்டில் வசிக்கும் ராஜா மணமகனாக தேர்ந்தெடுக்கப்பட்டார். ராஜாவின் பெற்றோர் நிச்சயதார்த்தத்திற்கு கீதா வீட்டுக்கு வருவதாக அறிவிக்கின்றார்கள். கீதா குடும்பத்தினர் நிச்சயதார்த்தத்தின் போது சந்தனவை கீதாவின் உடன்பிறவாச் சகோதரன் என அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கின்றனர். சந்தனவின் பேச்சும், நடையும் அவர்களுக்கும் பிடித்துப் போகிறது.

இரண்டு மாதங்களின் பின் ராஜா மூன்று மாத விடுமுறையில் வெளிநாட்டில் இருந்து வருகின்றான். ராஜா வந்தவுடன் திருமணத்திற்கான ஒழுங்குகள் நடைபெறுகின்றன. இதே வேளை சந்தனவிற்கு முல்லைத்தீவிற்கு மாற்றல் கிடைக்கின்றது. திருமணம் நடப்பதற்கு ஒரு மாத இடைவெளி இருப்பதனால் எப்படியும் திருமணத்திற்கு வருவதாக வாக்கு கொடுத்து விட்டு தனது முகவரியையும் கொடுத்துவிட்டு பிரிய மனமில்லாது பிரிந்து செல்கின்றான். கீதா தனது அண்ணனை கண்ணீரோடு வழியனுப்பி வைக்கின்றாள்.

திருமணநாளும் நெருங்கிவிட்டது. சந்தன வந்து சேரவில்லை. கீதா Wedding Card அனுப்பியதற்கு பதிலும் வரவில்லை. ஒருவாறு ராஜா கீதா திருமணம் நடந்து முடிகிறது. அண்ணன் இல்லாதது கீதாவிற்கு மிகுந்த வேதனையை அளிக்கிறது. சந்தனவின் வீட்டாரும் திருமணத்தில் கலந்துகொள்ள வரவில்லை. அதே நேரம் முல்லைத்தீவில் பாரிய சமர் நடைபெறுகிறது என்பதை அறிந்த கீதாவின் மனதில் இனம்புரியாத பயம் தோன்றுகிறது. தனது அண்ணனுக்கு எதுவும் நடந்துவிடக் கூடாது என சகல தெய்வங்களையும் வேண்டுகிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தனவைப் பற்றி தனது கணவரிடமும் கூறுகிறாள். அவளது வேதனையில் ராஜா வும் பங்கு கொள்கின்றான். சந்தனவின் வீட்டுக்குப் போவதற்கு ராஜாவிடம் கீதா அனுமதி கேட்க ராஜாவும் கீதாவும் அடுத்தநாளே கொழும்பு பயணமாகின்றார்கள். பயணத்தின்போது சந்தனவுடனான உறவு எப்படி ஏற்பட்டது என்பதையும் சந்தனவின் நல்ல குணங்களையும் சொல்லிச் சொல்லியே அழத் தொடங்குகின்றாள். ராஜா அவளைத் தேற்ற பெரும்பாடு படுகின் றான். ஒருவாறு கொழும்பை வந்தடைகிறார்கள்.

சந்தனவின் வீட்டை நெருங்க நெருங்க கீதாவிடம் ஏதோ ஒரு நெருடல் அதிகரிக்கத் தொடங்குகிறது. சந்தனவின் வீட்டு வாசலில் கால் வைத்த கீதா மறு விநாடி அந்த வீடே அதிரும்படி அண்ணா என கத்தியவாறு மயங்கிச் சரிகிறாள். அங்கே சுவரில் கண்ணாடி பிரேமிற்குள்ளே புன் சிரிப்போடு இராணுவ உடையில் சந்தன காட்சி தருகின்றான். படத்திற்கு மாலை அணிவிக்கப்பட்டுள்ளது. ராஜாவிற்கு ஒருவாறு நிலைமை புரிகிறது. கீதா கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றாள். மூன்று தினங்களாகியும் கீதாவிற்கு நினைவு திரும்பவில்லை. ராஜா தன் மனைவிக்கு நினைவு திரும்பும் நேரத்திற்காக காத்துக் கொண்டிருக்கின்றான். உண்மையான உறவுகள். நிதர்சனமானவை.

முற்றும்.



"வாழும்நாள் சிலவேயாயின் அவற்றை நல்வழியில் கழிப்பதே அறிவுக்கு உகந்ததாகும். மனம், வாக்கு, காயங்களினால் இறை வனைச் சிந்தித்து வணங்கி பலன்பெற வேண்டுமென வேதம் கூறுகின்றது. எல்லா நலனுக்கும் இருப்பிடம் இறைவனே. அவனை நினைந்து, வணங்க எல்லா நலனும் வந்தெய்தும். நல்லெண்ணங்களினால் இதயம் நிறைந்திருப்பின், வாக்கி லிருந்து நல்லினிய மொழிகளே விளக்கும். செய்கைகளும் நல்லனவாகவே அமையும். ஆகவே எண்ணங்களைத் தூய்மை பெறச் செய்தல் வேண்டும்"

-விபுலாநந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய சேவை

ச. கிருஷ்ணானந்தம்
(N. S. Krishi)
2ம் வருடம்
விஞ்ஞானப் பிரிவு

ஆசிரியர் என நாம் ஆகிவிட்டோம் - இனி
அடுத்த தலைமுறை எமது கையில்
தேசிய உண(ய)ர்வே எமது நோக்கு - இந்த
தேசத்தில் நிலவும் அறியாமை போக்கு

காசிற்காக தினம் கல்வியை விற்று - நீ
கண்டது என்ன உலகினில் இன்று
தூசுபட்ட உலகினை துடைக்கும் - நல்ல
துடைப்பாய் மாறி உழைத்திடல் நன்று.

பயிற்சி பெற்ற ஆசிரியன் நீயாம் - இனி
பாங்குடன் நாளும் செய்வாய் சேவை
உயர்ச்சி வேண்டும் மாணவர் நிலையில் - அந்த
கடைமை உணர்வே உந்தனுக்குத் தேவை.

ஒற்றுமையாக நாளும் உழைத்திடல் வேண்டும் - நீ
ஓதிய கல்வி அறிவினை தூண்டும்
நற்குணம் நாளும் பேணிட வேண்டும் - என்றும்
நலமுடன் நீயும் வாழ்ந்திட வேண்டும்.

இனிமையாய் என்றும் பேசுதல் பண்பு - உன்னிடம்
இயல்பாய் வரவேண்டும் மாணவர்க்கன்பு
கனிவாய் யாவையும் கேட்டுனை அறிந்து - நிரம்ப
கற்றிட வேண்டும் மாணவர் புரிந்து

அன்பு அறிவு ஆற்றல் கருணை - இவை
எல்லாம் அறிந்த ஆசிரியனாய் விளங்கு
பண்பு பரிவு நேசம்கொண்டு - சமூகம்
போற்றும் நல்(ல) அறிவுரைகள் வழங்கு

செய்யும் சேவைகளிற் சிறந்த சேவையாம் - இந்த
ஐயம் தீர்க்கும் ஆசிரிய சேவையாம்
பொய்யும் களவு வஞ்சனை அகற்றி - மாணவர்
உய்யும் வழியில் உயர்வாய் நன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# කොළඹ යුගයේ වැඩිහිටි කවීන්ගේ ළමා පද්‍ය රචනා

කේ. ඒ. සාගරිකා හේරත්

පැරණි කවි සමය අනුගමනය කල ආනන්ද රාජකරුණා , එස්. මහින්ද හිමි. ජ්. එච්. පෙරේරා. ආදි කවිහු ළමා පද්‍ය රචනයේදී ස්වාධිනවුත් නිර්මාණාත්මකවුත් කවිත්වයක ලක්ෂණ පළකලහ. ඔවුන්ගේ ළමා පද්‍ය භාෂාව පරිහර්නය අතින්ද ස්වාධින ලක්ෂණ ප්‍රකට කරයි. ආනන්ද රාජකරුණා පැරණි කවි සම්ප්‍රදායෙන් මිදීමට තැත් කල අවස්ථා ප්‍රකට වන්නේ ඔහුගේ ළමා පද්‍ය තුළිනි. ළමා පද්‍ය රචනයේදී ස්වභාවික භාෂා විලාසයක් අනුගමනය කල අතර මට සිලිටු වදන් මාලාවක් ද යොදා ගත්තේය. එමෙන්ම සාම්ප්‍රදායික උපමා රූපක වෙනුවට නවතම උපමාරූපක යොදා ගැනීමට උනන්දු විය. කවියේ වස්තු විෂයත් ආකෘතියත් වෙනස් කළේය. ළමා මනස තුළ අව්‍යාජ අස්වාදවක් දනවන හඳ දෙස කවියා ළමා ඇසින් බලන අයුරු රසවත්ය.

"රන් පිගාන ලෙස වටකුරු
දිළිහි දිළිහි තිබෙන අයුරු
හඳහාමියේ හඳහාමියේ
කිරිත් පැණිත් දියෝ දියෝ....."

හඳපායනු දැක ප්‍රීතියට පත්වුණ ළමයා අචේතනික වස්තුවක් වූ හඳට සචේතනික බව ආරෝපණය කොට අමතයි. මෙහිදී කවියා ළමයා සිත් තුළ පහළවන හැඟිම් ස්වාභ වික ලෙස ප්‍රකාශනයට උචිත විරිතක් රිද්මයක් සහ පද මාලාවක් යොදා ගැනිම අතින් විශේෂ සමත් කමක් දක්වයි. එමෙන්ම ගඟ නම් පද්‍ය පන්ති ද සාර්ථක පද්‍ය නිර්මාණයක් ලෙස සැළකිය හැකිය.

"විකෙන් විකට කඳුමුදුනෙන් බැස්ස නුඹයි
සැදී වැඩී ගම්මානෙට ගැලුව නුඹයි
වික්කි විකිරි සුරතල් දැරියක් වාගේයි
කැකිරි සිනාවෙන් බැස ආ ගමන අගෙයි"

ගංගාව සුරතල් දැරියකගේ ස්වරූපයෙන් කඳුමුදුනේ සිට ගම්මානෙට ගලා බසින අයුරු කවියා දකියි. නුඹයි නුඹයි යන යෙදුම් වලින් සහ විකින් විකට සැදී වැඩි යන යෙදුම්වලින් ගංගාවට සජිවි බවක් ආරෝපිතය. වික්කි විකිරි සුරතල් කැකිරි සිනා වෙන් ගමන අගෙයි. යන යෙදුම් නිසා ගංගාව දැරියකගේ ළපටි බව මෙන්ම සුන්දරත්වය ද සූචනයවේ. ළමා රුචිකත්වයට උචිත පරිදි මනා ආකෘතියක් අනුව නිර්මාණය කරන ලද පද්‍ය නිර්මාණයක් ලෙස තාරකා නම් පද්‍ය පංතිය විමසා බලන විට අපට පෙනේ. ගන්නත් බෑ දෙන්නත් බෑ පුංචි රුවන් තාරකා වැනි යෙදුම් තුළින් ළමයාට තරුවල යථාස්වරූපය පවා හුමා දැක්වීමට කවියා සමත් වී තිබේ. දරුවා අහස පුරා විසිරී තිබෙන තරු දැකීමෙන් කුතුහලක් මෙන්ම ආස්වාදයක් ලබයි. එම ආස්වාදය හඳුනාගත් කවියා හැඟිම් ප්‍රකාශ කිරීමට උපයෝගි කරගත් විරිත සිත්ගන්නා සුළුය. එහි වත

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"මල් තාරකා හිනහවෙවී" පුංචි රුවන්. වැනි යෙදුම් හැඟිම්බරය. මෙහිදී සිංහල කවියේ ආකෘතිය අනුව පද බෙදීමට දරූ ප්‍රයත්නය සම්පූර්ණයෙන් සාර්ථක වූ බව විචාරක මතයයි.

හඳ ගහ තාරකා මෙන්ම කුරුල්ලෝද ළමා සිතැගි සරසන ළමා මනස සනසන දර්ශණයකි. කවියා කුරුල්ලෝ පිළිබඳ කරන නිර්මාණය තුළින් ළමා මනසේ පහළ වූ හැඟිම් ඉතා ස්වභාවික ලෙස නිරූපණය කරයි.

ගිතිකාවෝ රසයි හා කුරුල්ලන්ගෙදෝ

මෙයින් - කුරුළු ලෝකය පිළිබඳ කවියා මවන සංකල්පනා ආස්වාදනීයයි. දෘශ්‍ය ගෝචර ආකෘතියක් අනුව පද බෙදීම නැත. ගායනයෙන් රසය වඩාත් තිවුර වේ. මහින්ද හිමියන්ගේ බෝහෝ පද්‍ය නිර්මාණවල ආවේගශිලි භාව අතිශය ලක්ෂණ දක්නට ලැබේ. ආකෘතිය, වස්තු විෂය භාෂාව හා අලංකාර අතින් නව මුහුණුවරක් දක්නට ලැබේ. සඳ පාය ඇති රාත්‍රි කාළයේ සුන්දරත්වයෙන් ළමා සිත් ප්‍රබෝධමත් විය. සුමුදු ළමා හැඟිම් රාත්‍රිය නම් පද්‍ය පංතිය නිර්මාණයෙහිලා කවියා පිළිඹුනු කරන්නේ මෙසේය.

"සමන් පිච්ච මල් ඉහිරුණු
නිල් තණකොළ පිට්ටනියක්
වගෙයි අහස අන්න බලනු
කොච්චර ලස්සනද රෑට"

මෙයින් කවියාගේ කවි සංකල්පනා ආයාසයෙන් එළිසමය ආරක්ෂා කිරීමට උත්සාහ නොගෙන ඇති බව පෙනේ. එහි යොදගෙන ඇති විරිතෙහි ස්වභාවිකත්ව ඉහත පංතිය විමසීමෙන් විශද කරගත හැකිය. යොදගෙන ඇති වචන උදර බවට උචිත සියු මැලි බවින් රමණීය තත්වයක්ද එහි ගැබ් වී ඇත.

ආනන්ද රාජකරුණා විසින් තේමාකොට ගත්තා හඳ පිළිබඳව මහින්ද හිමියන්ද කවි ලියා ඇත.

"තුඹ වටකර අත්වැල් බැඳ
ඉන්නා වූ මේ තරූ කඳ
හඳහාමිගෙ දරූ පැටව්ද
උන් මොකටද මාව මදිද"

හඳ දැකිමෙන් ළමයා අත්විඳින සියුම් ආස්වාදයක් ඔහුතුළ ඇතිවන විශ්මයක් ස්වභාව සෞන්දර්ය කෙරෙහි දක්වන රුචියක් ඉහත පද්‍ය කණ්ඩය තුළින් ධවනිතවේ.

මහින්ද හිමියන්ගේ ජාතික දරූ නැලවිල්ල නම් කෘතියෙන් ජාතික හැඟිම් හා ආගමික හැඟිම් හා දනවයි.

"මුනි සිරිපා සුමන ගිරයි
රන්වැලි සෑ අනුරපුරයි
සිරි දළද මහනුවරයි
තුන් හෙලයට කිරි උතුරයි"

රෝස මල ළමා ලෝකයේ සුන්දර සුන්දර වස්තුවකි. රෝස මලේ පැහැයෙන් සුවඳින් රසවත් වූ ළමා මානසික සිතුවිලි රෝසමල නම් නිර්මාණයෙන් පිළිමුනු වේ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ගුමු ගුමු ගා මොකද කොරෝ
අහකට පල වන ඔබරෝ
රෝස මලේ ළඟට වරෝ
අපිය උරම් සොහොයුරෝ

සමනළයා ළමා සිතුත් පැතුම් ලෝකයට බෙහෙවින් සම්බන්ධය. ස්වකීය අත්දැකීම් වලට සමීප හැම උපස්ථාවයක්ම ප්‍රබල ආස්වාදයක් හා නැවුම් අත්දැකීමක් ලද හැකිය. මෙය ළමා පද්‍ය රචනා වල සාර්ථකත්වයට ඒ එක් හේතුවකි. කවියා සමනළයා තමන් වෙත කැඳවයි.

"මගෙන් උඹට වරදක් නැ ළඟට වරෙන්
එසේ කැඳවා සුහද සිතින් තොරතුරු විමසයි."

"මල්පෙති වගේ මේ අත්තටු පෙනෙන්නේ
මල් ලෝකයේ කොතනද නුඹ උපන්නේ."

එසේ විමසා මිතුදමක් ඇතිකර ගනී. සමනළයාගේ ලෝකයේ ගැන සංවාදයක් ආකාරයෙන් තොරතුරු දැනගන්නා ළමයා එය රසවත් හා නිදහස් එකක් බව තේරුම් ගනී.

තවද කොළඹ යුගයේ වැඩිහිටි ළමා පද්‍ය රචකයෙකු ලෙස මුනිදාස කුමාරතුංග හඳුන්වාදිය හැක. රෝස ගස, ලේනා, හාවගේ වග. ඔහුගේ සාර්ථක ළමා පද්‍ය නිර්මාණ වශයෙන් රසිකයින් විසින් සමාදරයෙන් පිළිගනු ලබන ඒවාය.

"ගස වතුසුදු වී පිරිසිදු
පොහොය නැතිද සිල් ගත්බදු
මහ පුදුමෙකි මලන මලෙහි
නැහැ එහි සකි සමනලයෙකි"

මේ පද්‍ය පංතිවල එන සංකල්පනා ළමා මනසේ ස්වරූපය මැනවින් විචිත්‍රණය කරයි. ළමා පද්‍ය නිර්මාණ අතින් මුනිදාස කුමාරතුංග දක්වන්නේ සුවිශේෂ කුසලතාවයකි. ඉන් පසුව ළමා පද්‍ය නිර්මාණයට බට ශ්‍රී චන්ද්‍රරත්න මානවසිංහ විශේෂ ස්ථානයක් ගනී. වෙසක් මිහිර අතුගාලේ දරු පෙම ඇයට වසඟ නොවන්නෝ කවරහුද. සිලිලරෙක හෙල් මැලි ඔහුගේ නිර්මාණයන්ය. ඔහු යොදාගෙන ඇති භාෂාව සියුමැලිවුත් ගීතවත්වුත් එකකි.

මෙසේ කොළඹ යුගයේ වැඩිහිටි කවීන් විසින් රචනා කරන ලද ළමා පද්‍ය විමසීමේදී මුල්කාලීන වැඩිහිටි නිර්මාණවලට වඩා ළමයින් උදෙසා කළ නිර්මාණවලදී සිය කවි කුසලතාවය මැනවින් පිළිඹුහු කොට ඇති බව විශද කරගත හැක. එබැවින් ඔවුන් ගේ ළමා පද්‍ය නිර්මාණ සාර්ථක හා රසවත් ළමා නිර්මාණ බවට පත්වී ඇත.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# පරවෙන මලින් පිපෙන මලට

කරුණාපාල රාජමුණි.
2 වන වසර
(සිංහල අංශය)
වවුනියා අධ්‍යාපන-
විද්‍යා පීඨය.
වවුනියා

පෙරදින හැකිලි උන්මා
තුරුණු වියට එළඹිලා
හමන තල මා සුවඳ
දස අතට පතුරලා.............

බමර මීමැසි කැල අවුත්
මාගෙ මිහිරස උරා
ගියා හැර යන්න වුත්
අඳුර මෙහි එනු බලා....................

සිතිඳු සුමුදු සුකොමළ දළ
මා ගතින් ගිලී හිලා...........
යන්න සැම හැර දමා
වේලාව එළඹිලා................

සිටිමුත් අද මෙලෙස ඔබ
තුරුළු වී හැංගිලා.......
දිනකර පහස ලැබ
සුගන්ධය පතුරුවයි
හෙට දිනක පුබුදුවා..............

ඉටු කරන්නට තිබේ යුතුකම්
ගන්න පරපුර ඉදිරිය කරා.........
මිතුරු සතුරු සැවොම ඒවි
සමහරු ගෙල සිඳන් යාවී
ඉනු මැන ඉන් බේරිලා...............

සුවඳ මුසුකර සුලගේ
එසවූ බර බිම හෙලා........
යම්ය සබඳනි! මෙම මා
මෙමට හිමි ලොව කරා.................

ඕංශි

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# WHY I LIKE TO BE A TEACHER

**A. LATHANKI**
1st Year
Science

A Greek sage once adviced his students to become either a healer or a teacher. He never thought of any other job or profession. Another chinese philosopher said that teacher is the tap - root of a Nation. All agree that teacher is the back - bone of the community. These are some of the reasons why teaching belongs to a noble profession.

A teacher is like a ladder on which all climb and go to the top while the teacher remains at the bottom all the time. Therefore I want to be a good teacher. As a teacher, I could always improve and increase my knowledge, and help my students as well to learn more and to make useful citizens. A teacher's influence on a child goes a long way to make or mar him or her. A good teacher produces good pupils of sound values, character and conduct. I like to be a teacher so that I could do my best to create a healthy community.


In the above case I like to be a teacher of science. As a teacher of scicence I could help all pupils to widen their out look and enrich their knowledge. They can be kept right up to - date with this fast - moving, immensely developing world.

Above all, those who have a deep knowledge in science would surely feel their life colourful and meaningful. And a country like ours would certainly wish to have a student who can give a helping hand in the field of science. Only a teacher of science can produce such a student.

Hence it is an opportune moment to be come a teacher - specially a science one.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## HINDU ASSOCIATION - 1996 - 1997




## CATHOLIC ASSOCIATION - 1996 - 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MUSLIM MAJILIS - 1996 - 1997




# BUDDHIST ASSOCIATION - 1996 - 1998




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## CULTURAL COMMITTEE - 1996 - 97



## TAMIL ASSOCIATION - 1996 - 1997



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று இலங்கையில் ஆசிரியர் தொழில்சார் கல்வி வாய்ப்புகள்

த. ம. தேவேந்திரன்
விரிவுரையாளர்

எதிர்கால சமுதாயத்தின் அறிவு வளர்ச்சியைப் பூர்த்தி செய்வதில் பாடசாலை முக்கிய பங்கு வகிக்கிறது. இவ் அறிவு வளர்ச்சியானது ஆசிரியர்களினாலேயே சாத்தியமாகின்றது என்பதனை யாவரும் ஏற்றுக் கொள்வர். எனவே மாணவர்களுடைய அறிவு வளர்ச்சியினை முழுமையாக நிறைவேற்ற ஆசிரிய தொழல்சார் கல்வி இன்றியமையாததாகும். சமகால தேவைக் கேற்ப பயனுடைய கல்வித் தேவை இதற்கு அவசியமாகும்.

இலங்கையிலே ஆசிரியர்களின் அடிப்படைத் தகமைகள் பல்வேறு மட்டங்களில் காணப்படுகின்றது. இவற்றிற்கமையவே அசிரியர் கல்வி நெறிகளும் திட்டமிடப்பட்டுள்ளதை நாம் காணலாம். இலங்கையில் இன்று நடைமுறையில் உள்ள ஆசிரியர்களுக்கான கல்விப் பயிற்சி இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

01. ஆசிரிய முன் சேவைப் பயிற்சி
02. ஆசிரிய சேவைக்காலப் பயிற்சி (பணியிடைப் பயிற்சி)

இப்பயிற்சிகள் யாவும் வதிவிட, வதிவிடமற்ற தொலைக்கல்வி முறைகளில் நடைமுறைப் படுத்தப்படுகின்றன. இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும். பயிற்சியானது பின்வரும் நிறுவனங்களினால் திட்டமிடப்பட்டு பயனுள்ள வகையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

(அ) கல்வி உயர் கல்வி அமைச்சு.
(ஆ) பல்கலைக் கழகங்கள்.
(இ) திறந்த பல்கலைக் கழகங்கள்.
(ஈ) தேசிய கல்வி நிறுவகம்.
(உ) அரச சார்பற்ற நிறுவனங்கள்.
(ஊ) சமய நிறுவனங்கள்.

## 01. ஆசிரிய முன் சேவைப் பயிற்சி நெறி

ஆரம்ப காலங்களில் அதாவது ஏறத்தாள பத்து ஆண்டுகளுக்கு முற்பட்ட காலங்களில் ஆசிரிய நியமனம் கிடைத்தவுடன் வகுப்பறைக்குச் சென்று கற்பிக்கும் முறை நடைமுறையில் இருந்து வந்தது.

இவ்வாறான கற்பித்தல் செயற்பாடானது நீந்தத் தெரியாதவனை நீரிலுள் தள்ளி விட்டது போன்ற செயற்பாடாக நியமனத்தைக் கொடுத்துக் கற்பிக்கச் சொன்ன நிலையாக இருந்து வந்தது. இதனால் கற்பித்தலில் வினைத்திறன் குன்றிற்று. ஆசிரியர்களும் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகினர். எனவே ஆசிரியர் ஒருவர் வகுப்பறைக்குச் செல்லுமுன்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ ஒருவகையில் கற்பித்தல் அனுபவத்தினை பெறுவதற்கான வழிவகை செய்யப்பட்டது. இதுவே ஆசிரியமுன் சேவைப்பயிற்சியாகும். இப்பயிற்சி பின்வரும் முறைகளில் அமைந்திருந்தது.

01. குறுகிய காலப் பயிற்சி
02. கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சி
03. டெலிக் பயிற்சி

## ✪ குறுகிய காலப் பயிற்சி

ஆசிரிய நியமனம் கிடைத்தவுடன் குறுகிய கால, ஆனால் மிகச் செறிவான பயிற்சி ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. கல்வி உயர்கல்வி அமைச்சின் ஆசிரியக்கல்விக்கிளைப் பிரிவின் முன்சேவைப் பயிற்சிக்கிளை இதனை நடாத்தி வருகின்றது. இப்பயிற்சியானது 21 நாட்கள், 14 நாட்கள் கொண்டதாக அமைந்தது. இப்பயிற்சி ஓர் வதிவிடப்பயிற்சியாககும். உணவு, தங்குமிட வசதி என்பன அரசினால் வழங்கப்பட்டது. காலை 5.55 மணிக்கு இப்பயிற்சி ஆரம்பமாகி இரவு 8.30 மணிக்கு முடிவடையும் வகையில் திட்டமிட்டு வெகு சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வந்தது.

இப்பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் எத்துறையினராக இருந்தாலும், எந்தெந்த கல்வித் தகமைகளைக் கொண்டிருந்தாலும் பின்வரும் பாடங்கள் அவர்களுக்குப் புகட்டப்பட்டன.

01. தொழில் சார் கல்வி
02. பொதுக் கல்வி
03. உடற் கல்வி
04. சங்கீதம்
05. நடனம்
06. சித்திரம்
07. இலக்கிய நயம் என்பனவாகும்.

இப்பாடங்களுக்குப் புறம்பாக பாடசாலை ஒன்றிலேசெயற்படுத்தப்படும் பாடப் புறச் செயற்பாடுகளான,

01. காலைக் கட்கூடங்களை நடாத்துதல்
02. சமயப் பிரார்தனை
03. கலை விழா
04. விளையாட்டு விழா
05. மொழித்தின விழா
06. சுகாதாரத் தினம்
07. பட்டி மன்றம்
08. விவாத மேடை
09. கொடி ஏற்றுதல், இறக்குதல்
10. சுற்றுலா
11. சிரமதானம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற விடையங்களிலும் அனுபவ மூலமான பயிற்சி வழங்கப்பட்டது. அத்துடன் இவற்றை ஒழுங்கமைத்தல், வழிகாட்டுதல், நெறிப்படுத்தல் போன்ற செயற்பாடுகளை அனுவத்தினூடாகப் பெறக் கூடியதாக இவர்களுக்கு இருந்ததோடு பாடசாலைகளில் நடைபெறுட சுக பயிற்சிச் செயற்திட்டத்தினை நடாத்துதல் போன்ற மேலதிகச் செயற்பாடுகள் இவர்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டன. எனவே இப்பயிற்சி சிறந்த பலனைத் தந்ததாக பலராலும் பாராட்டப்பட்டது. இருந்தும் இங்கே சில குறைபாடுகளும் இருக்கத்தான் செய்தன.

## ✪ கல்வியற் கல்லூரிகளில் பயிற்சி

இப்பயிற்சி முறையானது முன்னைய கலங்களில் இருந்து வந்த ஆசிரிய பயிற்சி முறையை விட மேலானது. இன்று இலங்கையில் இவ்வாறாக பதினொரு பயிற்சிக் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளன. கொட்டக்கலை, அட்டாளைச் சேனை, வவுனியா, மட்டக்களப்பு போன்ற இடங்களில் அமைக்கப்பட்ட கல்லூரிகள் தமிழ்மொழி மூலம் பயிற்சியையும் பஸ்துன்ரட்ட கல்வியியற் கல்லூரி, ஆங்கில மொழி மூலம் பயிற்சியையும் ஏனைய ஆறு கல்வியியற் கல்லூரிகளும் சிங்கள மொழிமூலம் பயிற்சியை அளித்து வருகின்றன.

இக் கல்லூரிகளின் விசேட நெறிகளாக கணிதம், விஞ்ஞானம், உடற்கல்வி, பௌத்த சமயம், மனையியல், விஞ்ஞானம், ஆரம்பக்கல்வி, ஆங்கிலம் போன்ற பாடங்கள் போதிக்கப்படுகின்றன.

இப்பாடநெறிகளுக்கு க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் இக் கல்லூரிகளில் சேர்க்கப்படுகின்றார்கள். இதற்கு ஒவ்வொரு பாடநெறிக்கும் வித்தியாசமான வெட்டுப் புள்ளிகள் தீர்மானிக்கப்படுகின்றதோடு விசேட துறைகளுக்கான வெவ்வேறு தகமைகளும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. 25 வயதுக்கு உட்பட்ட மேற்காட்டப்பட்ட தகமைகளையுடையோர் இப்பயிற்சி நெறிக்கு நேர்முகப் பரீட்சைமூலம் தெரிவு செய்யப்படுகின்றனர். இருப்பினும் அனுமதி முறையில் கல்லூரிகளுக்குக் கல்லூரி வேறுபாடு காணப்படுகின்றது. இவர்களது பயிற்சிக் காலம் மூன்று வருடங்களாகும். இரு வருடகாலம் வதிவிடப்பயிற்சி முறையாகவும் இறுதி வருடம் வெளிக்களப் பயிற்சி முறையாகவும் அமைகின்றது. இவர்களுக்கு வதிவிடப் பயிற்சிக் காலங்களில் 1000/= உதவிப்பணமாக வழங்கப் படுவதுடன் தங்குமிட வசதி அரசினால் வழங்கப்படுகின்றது. வெளிக்களப்பயிற்சிக் காலங்களில் 1500/= ரூபாவை உதவிப் பணமாகவும் பெற்றுக் கொள்வர்.இவர்களது பயிற்சிக் காலத்தில் கற்பிக்கப்படும் பாடங்களாவன,

01. விசேட நெறிக்கான பாடங்கள்
02. தொழில் சார் கல்வி
03. தமிழ் மொழி
04. சமயம்
05. ஆங்கிலம்
06. உடற்கல்வி
07. அழகியற் கல்வி
08. தொடர்பு மொழி
09. வாழ்க்கைத் திறன்

இவற்றிற்கு மேலதிகமாக கற்றல் பயிற்சி, கற்பித்தல் பயிற்சி என்பவற்றோடு ஒரு பாடசாலையில் நடைபெறக்கூடிய சகல செயற்பாடுகளுக்குமான பயிற்சியும் வழங்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிக்களத்தில் பயிற்சி பெறுகின்ற காலத்தில் முன்னைய இரு வருடங்களை விட இவர்கள் கற்பித்தல் பயிற்சியில் பன்மடங்கு அனுபவத்திறனை பெறுவர். பலதடவைகள் அவதானிக்கப்பட்டு வழிகாட்டப்படுகின்றனர். ஒரு முழுமையான ஆசிரியரை உருவாக்க இந்த ஆசிரியச் சேவைப் பயிற்சி முறை திட்டமிடப் பட்டுள்ளது என்பது பலரின் கருத்தாக உள்ளது. இவ்வாறாக மூன்று வருடங்களின் இறுதியில் சிறந்த முறையில் பாட நெறியினைப் பூர்த்தி செய்தவர்கள் அவர்களின் விருப்பத்திற்கமைய ஆசிரியத் தொழிலில் சேர்த்துக் கொள்ளப் படுவர். இவர்களுக்கு கற்பித்தலில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும்.

வெவ்வேறு துறைகளில் ஆசிரியப் பயிற்சியினைப் பெற்ற ஆசிரியர்கள் கற்பிக்கின்ற ஒரு பாடசாலைக்குப் புதியவர் ஒருவர் விஜயம் செய்து ஆசிரியர்களை அவதானித்தால் அங்கே கல்வியியல் கல்லூரியில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மிளிர்ந்து காணப்படுவதை அவதானிப் பார். ஏனெனில் இவர்களது நடை உடை பாவனைகளே இவர்களை மற்றைய ஆசிரியர்களி டம் இருந்து இனம் காட்டுவதாக இருக்கும். இவ்வாறு இவ் ஆசிரியப் பயிற்சி முறை சிறந்த தென பலராலும் புகழப்பட்டாலும், இப்பயிற்சி நெறி முறையிலும் குறைபாடுகள் இல்லை எனக் கூறமுடியாது. கல்வி உயர்கல்வி அமைச்சின் ஆசிரியக் கல்விப் பிரிவின் கல்வியியற் கல்லூரிகளின் கிளை இன்றிறுவனத்தை நிர்வகிக்கின்ற போதிலும் தேசிய கல்வி நிறுவகம், கல்வியற் கல்லூரிகளின் ஆலோசனைச் சபை என்பனவும் செயல்படுகின்றன.

## ✪ டெலிக் பயிற்சி

இப்பயிற்சியானது ஆங்கில ஆசிரியர்களாக தெரிவு செய்தவர்களுக்கு மட்டும் உரிய தாகும். க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் சிதியடைந்தவர்கள் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படுவர். ஆறு மாதகாலப் பயிற்சி இவர்களுக்கு வழங்கப்படும். இப்பயிற்சி யினை கல்வி உயர் கல்வி அமைச்சு நடாத்துகின்றது. இவற்றிற்கான கல்வி நிலையங்கள் பல மாவட்டக்கல்வி திணைக்களங்களினால் அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகின்றது. பின்னர் பரீட்சையினூடாக சித்தியடைந்தவர்களுக்கு ஆங்கிலப் பாட நெறிக்கான தராதரப் பத்திரமற்ற ஆசிரிய நியமனம் பாடசாலைகளில் வழங்கப்படும். இவர்களுக்கு இவ்வாறு ஆசிரிய நியமனம் பாடசாலைகளில் வழங்கப்பட்ட போதும் கூட குறுகிய கால செறிந்த ஆசிரிய முன்சேவைப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சி முறையானது ஆங்கில ஆசிரியப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையாக அமைகின்ற போதிலும் வினைத்திறன் சொற்ப அளவில் இருப்பதனை அனு பவவாயிலாக அறியக் கூடியதாக உள்ளது.

## 02. ஆசிரிய சேவைக்காலப் பயிற்சி (பணியிடைப் பயிற்சி)

இப்பயிற்சி முறை பல்வேறு தன்மைகளில் அமைந்திருக்கின்றது. அவற்றை பின்வரு மாறு நோக்குவோம்.

01. ஆசிரிய கலாசாலை உள்வாரிப் பயிற்சி.
02. ஆசிரிய ஆலோசகர்களுக்கு வழங்கப்படும் பயிற்சி.
03. ஆசிரிய ஆலோசகர்களால் நடத்தப்படும் பயிற்சி.
04. 1 எ. பி. / 1 சீ. அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவம்.
05. தேசியக் கல்வி நிறுவகத்தால் நடத்தப்படும் பயிற்சிகள்.
    - (அ) தொலைக்கல்வி ஆசிரிய சேவைப் பயிற்சி
    - (ஆ) பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட நெறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(இ) கல்விமானி பட்டக்கற்கை நெறி
(ஈ) இடைநிலை மொழி ஒன்றுக்கான ஆங்கிலத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பாட நெறி.
(உ) ஆங்கில தராதரப் பத்திர பாட நெறி.
(ஊ) தொழில் சார் சேவைக்காலப் பயிற்சிப் பாட நெறி.
(எ) தனியான தலைப்புக்களிலான குறுகிய காலப் பாட நெறி.
(ஏ) சிறிய பாடசாலை அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவப் பயிற்சி
(ஐ) பிரதி அதிபர்களையும் பிரிவுத் தலைவர்களையும் பயிற்றுவிக்கும் பாட நெறி
(ஒ) கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா பாடநெறி
(ஓ) கல்வி முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான முதுமானிப் பட்ட நெறி.

06. பல்கலைக்கழகங்கள் மூலம் நடத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட நெறி.
07. பல்கலைக் கழகங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் உயர்கல்வி வசதிகள்.
08. திறந்த பல்கலைக் கழகங்கள் மூலம் நடாத்தப்படும் கல்வி டிப்ளோமா பாட நெறி.
09. விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் விளையாட்டுத்துறை டிப்ளோமா பயிற்சி நெறி.
10. சமய நிறுவனங்களினால் நடாத்தப்படும் குறுகிய காலப் பயிற்சி நெறி.
11. அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்படும் பாட நெறிகள்.
12. வெளிநாடுகளில் பயிற்சி.

## ✪ ஆசிரிய கலாசாலைகளில் உள்வாரிப் பயிற்சி

கல்வி உயர் கல்வி அமைச்சின் ஆசிரியக் கல்விப்பிரிவு இப்பயிற்சிக்குப் பொறுப்பாக இருந்து நிருவகித்து வருகின்றது. தராதரப் பத்திரமற்ற ஆசிரியர்கள் இருவருட சம்பளத்துடனான கற்கை விடுமுறையுடன் இப்பயிற்சியை மேற் கொள்கின்றனர். இன்று இலங்கையில் 16 ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகள் நிறுவப்பட்டுள்ளன. பலாலி. கோப்பாய், மட்டக்களப்பு, அட்டாளைச்சேனை, அளுத்கம, யத்தன்சைட் ஆகிய இடங்களில் தமிழ் மொழி மூலமான கலாசாலைகள் அமையப் பெற்றுள்ளன.

இவ்வாறு அமையப் பெற்ற கலாசாலைகள் யாவும் சமவளங்களைக் கொண்டதாக அமைந்துள்ளன எனக் கருத முடியாது. கலாசாலைகளின் வளங்களுக்கு அமையவும் செல்வாக்குகளுக்கு அமையவும் இக்கலாசாலைகளில் வதிவிட வசதிகள் விரிவுரை மண்டபம், விளையாட்டு மைதானம் ஆகியனவும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இவை சில இடங்களில் 1ம் வருடத்தினர்களுக்கு மட்டும் 2ம் வருடத்தினர்களுக்கு மட்டும், விடுதி வசதி என்ற நியதிகளும் உண்டு. பின்வரும் நெறிகள் கலாசாலைகளில் போதிக்கப்படுகின்றன. இவை கூட அந்தந்த கலாசாலைகளின் வளங்களுக்கமைய ஒதுக்கப்பட்டுள்ளன. அவையாவன.

01. ஆரம்பக் கல்வி
02. விஞ்ஞானம்
03. கணிதம்
04. ஆங்கிலம்
05. தமிழ்
06. சிங்களம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. அழகியல் கல்வி
08. மனையியல்
09. சமயம்
10. சமூகக்கல்வி
11. வர்த்தகம்
12. நெசவு
13. உடற்கல்வி
14. விசேட கல்வி என்பனவாகும்.

இங்கே இவர்கள் பயிற்சி பெறுகின்ற காலத்தில் இரண்டு தடவைகள் செயன்முறைப் பயிற்சிக்காகப் பாடசாலைகளுக்கு அனுப்பப் படுகின்றனர். அவ்வப்போது இவர்களை விரிவுரையாளர்கள் அவதானித்து வழிநடத்தப்படுவர். மேலும் இவர்கள் ஒப்படைகள் ஆய்வுகள் மூலம் மென்மேலும் தமது அனுபவத்தினை வளர்த்துக் கொள்வதற்கான சந்தர்ப்பம் இங்கு வழங்கப்படுகிறது. பரீட்சைத்திணைக்களத்தினால் நடாத்தப்படும் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பயிற்றப்பட்ட ஆசிரிய சான்றிதழ் வழங்கப்படுவதுடன் இவர்களுக்குரிய இப்பயிற்சி நிறைவடையும்.

## ✪ ஆசிரிய ஆலோசகர்களுக்கு (முதன்மை ஆசிரியர்கள்) வழங்கப்படும் பயிற்சி

ஒவ்வொரு துறைகளுக்கும் ஆசிரிய ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளமை யாவரும் அறிந்ததே. இவர்களுக்கு பாடத்திட்டமாற்றங்கள் புதிய கற்பித்தல் முறைகள், அணுகுமுறைகள், நுட்பங்கள் திறன்கள் என்பன பற்றி குறுகிய கால பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படுகின்றன. இவர்கள் மாகாண ரீதியாவோ, மாவட்ட ரீதியாகவோ அழைக்கப்படுவர். இவ் வகுப்புக்களை தேசிய கல்வி நிறுவகம், கல்வி உயர்கல்வி அமைச்சு, மாகாணக்கல்வி அமைச்சு, மாவட்டக்கல்வி அமைச்சு என்பன நடாத்தி வருகின்றன. இருந்தபோதிலும் இவை முழுமையான பயனை எய்தவில்லை என்பதும் சிலரின் கருத்தாகும்.

## ✪ ஆசிரிய ஆலோசகர்களால் நடாத்தப்படும் பயிற்சி

இப் பயிற்சி முறையானது மேற்கூறிய முறையில் பயிற்சி பெற்ற ஆசிரிய ஆலோசகர்கள் தாம் பெற்ற அனுபவங்களை தத்தமது மாவட்டங்களில் உள்ள ஆசிரியர்களுக்கு பகிர்ந்தளிப்பதாகும். இது ஒரு நாள், இருநாள் அல்லது இரு நாட்களுக்கு மேற்பட்ட கால அளவுகளிலும் வழங்கப்படுவதுண்டு. இவை சில இடங்களில் வதிவிட, வதிவிடமற்ற முறையிலும் நடாத்தப்படுகின்றது. இவ்வாறு நடத்தப்படும் இப்பயிற்சியானது மாவட்டத்திற்கு மாவட்டம் வேறுபட்டதாகவே காணப்படுகின்றது. இதனால் ஆசிரியர்கள் புதிய விடயங்களை உடனுக்குடனேயே அறிந்து வகுப்பறையில் பிரயோகிக்கின்ற தன்மை இருந்தும் கூட குறைபாடுகளும் வசதியீனங்களும் இங்கே நிலவுவதனால் முழுமையான பலன் கிட்டுவதில்லை.

## ✪ 1ஏபி / 1சீ அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவப் பயிற்சி

இப்பயிற்சியானது 52 வயதுக்குக் குறைந்த 1 ஏபி / 1சீ பாடசாலை அதிபர்களுக்கானதாகும். முழுநாள் வதிவிடரீதியான இப்பயிற்சிப் பாடநெறி ஒருவார, இருவார கால அளவுகளில் நடாத்தப்படும். இப்பயிற்சிப் பாட நெறியில் தேசியக்கல்வி நிறுவகம், கல்வி உயர் கல்வி அமைச்சு, மாகாணக் கல்வி அமைச்சு என்பன இப்பயிற்சி நெறியுடன் தொடர்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டுள்ளன. பொதுவாக ஒரு பாடநெறியில் 35 - 40 அதிபர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவர்களுக்கான பாடத்திட்டத்தில் பாடசாலை முகாமைத்துவ அடிப்படைகள், பாடத்திட முகாமை, நிதிமுகாமை, அலுவலக முகாமை, திட்டமிடல் முறைகள், மேற்பார்வை போன் றவை உள்ளடக்கப் பட்டுள்ளன. இவ்வாறாக இப்பயிற்சி பெற்ற அதிபர்களினால் பாடசாலைச் செயற்பாடுகளிலே மாற்றங்கள் செய்யப்படுவதை கண்ணூடாகப் பார்க்க முடிகின்றது. எனி னும் இந்நிலை எல்லாப் பாடசாலைகளிலும் இல்லை. திட்டங்கள் பயிற்சிகள் சிறப்பாக அமைகின்ற போதிலும் நடைமுறைச் சிக்கல்கள் பல இருப்பது தவிர்க்க முடியாததாக வுள்ளது.

## ✪ தொலைக் கல்வி ஆசிரிய சேவைப் பயிற்சி

தேசிய கல்வி நிறுவகத்தின் தொலைக் கல்விப் பிரிவினால் இப்பயிற்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பிரதேச மத்திய நிலையங்கள் பலவற்றினூடாக நடைமுறைப்படுத்தும் இப்பயிற்சி நெறியானது இலங்கையின் எல்லாப் பாகங்களிலும் நடைமுறையில் இருந்து வரு கிறது. பாடசாலைகளில் எந்தவித பயிற்சியும் பெறாத ஆசிரியர்களுக்கு வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் கருமங்களுடே இப்பயிற்சியினைப் பெறும் வகையில் ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளது.

இவ்வாறு பயிற்சியினைப் பெறுபவர்களுக்கு வார இறுதியிலும் விடுமுறை நாட்களி லும் தொடர் அமர்வு, பயிற்சி அமர்வு, சிகிச்சை முறையிலான கற்றல் அமர்வு என 3 வகை யான அமர்வுகள் திட்டமிடப்பட்டுள்ளது. இவ் அமர்வுகளில் இவர்கள் தமது போதனாசிரியர் களிடம் ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் பெறுவார்கள். அத்துடன் நிறுவனத்தி னால் வழங்கப்படுகின்ற மொடியூல்களைக் கற்பர். வழங்கப்பட்ட ஒப்படைகளை எழுதி போத னாசிரியர்களை வார இறுதியில் சந்திக்கும்போது ஆலோசனைகளையும் அதற்கான வழிகாட் டல்களையும் பெற்றுக் கொள்வர். இவ் ஆசிரியப் பயிற்சி முக்கியதோர் அடைவாக பலராலும் ஏற்றுக் கொள்ளப்படுகின்ற போதிலும் இப் பயிற்சி ஆசிரியர்கள் கூறுகின்ற கருத்துக்கள் திருப்திகரமானவையாக இல்லை. இங்கேயும் கூட ஆசிரியப் பயிற்சிக் கலாசாலையில உள்ள நெறிகள் இருப்பதனை நாம் காணலாம். இவர்கள் பிரதம போதனாசிரியர்கள் பகுதி நேரப் போதனாசிரியர்கள் என்பவர்களினால் மேற்பார்வை செய்யப்பட்டு வழி நடத்தப்படுவர். ஒவ் வோர் ஆண்டிறுதியிலும் பரீட்சைத் திணைக்களத்தினால் பரீட்சைகள் நடாத்தப்படும்.

## ✪ பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட நெறி

தொலைக்கல்வி நிறுவகத்தின் ஆசிரியக் கல்விப் பிரிவின் மூலம் இது ஒழுங்கு செய்யப்படுகிறது. இன்நெறிக்கான கல்விக்காலம் 2 வருடங்களாகும். பட்டதாரிகளின் தொழில் அனுபவங்களைப் பாராது இதற்கு விண்ணப்பிக்கலாம். கலந்துரையாடல்கள் 40% மாகவும் நேரில் முறையில் 60% மாகவும் கற்கை நெறி திட்டமிடப்பட்டுள்ளது. நேரடியற்ற கற்கை மொடியூல் மூலம் இதற்குப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இதுவும் ஒரு தொலைக் கல்வி முறையேயாகும்.

## ✪ கல்வியியல் பட்டக் கற்கை நெறி

ஆசிரியக் கல்விப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கற்கை நெறி 3 வருட கால அளவினதாகும். விசேட கல்வி, ஆங்கிலக் கல்வி, அழகியற் கல்வி, தமிழ்க்கல்வி, உடற்கல்வி, மனையியல் ஆகிய துறைகள் இங்கே போதிக்கப்படுகின்றன. வார இறுதிகளிலே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கற்கை நெறி மேற்கொள்ளப்படுகிறது. ஒப்படைமுறைகள், மொடியூல் முறைகளும், இங்கு காணப்படுகின்றது. தமிழ்மொழி மூலமான நெறி தேசிய கல்வி நிறுவகத்தினை மத்திய நிலையமாகக் கொண்டும், சிங்கள மொழி மூலமானது கண்டி, குருநாகல், மாத்தளை முதலிய இடங்களை மத்திய நிலையமாகக் கொண்டும் இயங்கி வருகின்றது. இந் நெறி உண்மையிலே ஆசிரிய கல்வி மேம்பாட்டிற்கு மிகச் சிறந்ததென்பது பலருடைய கருத்தாகும். போட்டிப் பரீட்சை மூலம் 5 வருட சேவைக்காலம் முடிந்த பட்டதாரி அல்லாது ஆசிரியர்கள் இதற்குத் தெரிவு செய்யப்படுகின்றனர். தமிழ்மொழிமூலம் ஒரு பாடநெறி மட்டும் தற்போது நடைமுறையில் உள்ளது.

## ✪ இடைநிலை மொழி ஒன்றுக்கான ஆங்கிலத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பாட நெறி

ஆங்கிலக் கல்வித்துறையினரால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இப்பாட நெறியின் காலம் ஒரு வருடமாகும். ஆங்கில ஆசிரியப் பயிற்சி பெற்று 5 வருடங்களைப் பூர்த்தி செய்த 50 வயதுக்குட்பட்ட ஆசிரியர்களும் ஆங்கில மொழிமூலம் பட்டதாரிகளும் இந் நெறியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இது முழு நேரமான பயிற்சி நெறியாகும்.

## ✪ ஆங்கில தராதரப் பத்திர பாட நெறி

இப்பாட நெறிக்கு பாடசாலைகளில் 3 வருடகாலம் கற்பித்தல் அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம். இப்பாட நெறியைப் பயில்வதற்கான வயதளவு 50 வயதுக்குட்பட்டதாக இருப்பது அவசியமானது. முழுநேர அடிப்படையிலான இப்பாட நெறி 3 மாத கால அளவினைக் கொண்டதாக இருப்பதுடன் இப்பாட நெறி சமகாலத் தேவைக்கேற்ப ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளது.

## ✪ தொழில் சார் சேவைக் காலப் பயிற்சிப் பாட நெறி (ஆங்கிலம்)

இப் பயிற்சிப் பாடநெறி ஆங்கிலம் மூலமான தொழில் சார் பாட நெறியாக இருப்பதால் இதனை தேசிய கல்வி நிறுவகத்தின் ஆங்கிலப் பிரிவு ஒழுங்கு செய்து நடாத்துகின்றது. இதற்கான நிதி வளமானது கல்வியமைச்சிடமிருந்து பெறப்படுகின்றது. இவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்ட பயிற்சியின் காலம் 2 வருடங்களாகும். இவை வார இறுதியில் நடைபெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இப்பயிற்சி நெறியில் ஆசிரிய பயிற்சி என்பது ஊன்றி கவனிக்கப்படுகின்றது. சிரேஷ்டத்துவத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டு நேர்முகப் பரீட்சை மூலம் விண்ணப்பதாரிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

## ✪ தனியான தலைப்புக்களிலான குறுகிய கால பாடநெறி

பாடசாலைகளில் காலத்தின் தேவைக் கேற்ப பண்புரீதியாக் சமகாலத்தில் செல்வாக்குச் செலுத்தும் தனிப்பட்ட தலைப்புக்களைத் தெரிவு செய்து கற்பிப்பதற்கு வழி செய்வதே இதன் நோக்கமாகும். அதிபர்கள், பிரதி அதிபர்கள், பிரிவுத் தலைவர்கள், கல்வி அதிகாரிகள், ஆசிரிய கலாசாலை அதிபர்கள், பீடாதிபதிகள், இன்நிறுவனங்களின் விரிவுரையாளர்கள் போன்றோர் இப்பாட நெறிக்கு விண்ணப்பிக்க முடியும். முழுநேர வதிவிடப்பயிற்சியினைக் கொண்டமைந்த இப்பாட நெறி 3 தினங்களுக்கு நடைபெறும். பற்பல புதிய விடயங்கள் சமகாலத் தேவையினைப் பூர்த்தி செய்யும் வகையில் இப்பயிற்சி அமைவதனை இங்கு குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ✪ சிறிய பாடசாலை அதிபர்களுக்கான கல்வி முகாமைத்துவப் பயிற்சி

இம் முகாமைத்துவப் பயிற்சி நெறிக்கு ஒரு வருடத்திற்கு 6 மாவட்டங்கள் தெரிவு செய்யப்படும். ஒவ்வொரு மாவட்டங்களில் இருந்தும் இதற்கென 50 அதிபர்கள் தெரிவு செய் யப்படுகின்றனர். இதற்கு திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 10 மொடியூல்களினூடாக இப்பாட நெறியினை அதிபர்கள் பின்பற்றுகின்றனர். ஒரு வருட காலத்திற்கு தொலைக்கல்வி அடிப்படையில் இப்பாடநெறி நடாத்தப்பட்டு வருட இறுதியில் பயிற்சி நெறியினைச் சிறப்பாக முடிப்போருக்கு சான்றிதழும் வழங்கப்படுகிறது.

## ✪ பிரதி அதிபர்களையும் பிரிவுத் தலைவர்களையும் பயிற்றுவிக்கும் பாட நெறி

பிராந்திய கல்விக்காரியாலயத்தினூடாக இப்பாட நெறி நடத்தப்பட்டு வருகின்றது. இதனுடைய பயிற்சிக்காலம் 5 நாட்களாகக் கொள்ளப்படுகிறது. இந் நெறிக்கு கல்வி முகா மைத்துவ அபிவிருத்தித்துறை அதிகாரிகள் கற்றலுக்கான உதவியினை மேற்கொள்ளுகின் றனர். இங்கு செயற்பாடுகளின் தன்மைக்கேற்ப பாட நெறியின் பரப்பு தீர்மானிக்கப்படுகின்றது.

## ✪ கல்வி முகாமைத்துவம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா பாட நெறி

இந் நெறிக்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். கல்விக் காலம் ஓர் ஆண்டாகும். விண்ணப்பதாரிகள் எழுத்து மூலப் பரீட்சை, நேர்முகப் பரீட்சை மூலம் இப்பாட நெறிக்குத் தெரிவு செய்யப்படுவர். கல்வி முகாமைதிட்டமிடல், கல்விச் சட்ட முறைகள், நிதிமுகாமை, அலுவலக முகாமை என்பவற்றை உள்ளடக்கியதாக இப்பாட நெறி அமைகின்றது. சிறந்த முறையில் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங் கப்படும்.

## ✪ கல்வி முகாமைத்துவம் தொடர்பான விஞ்ஞான முதுமானிப் பட்டநெறி

பட்டப்பின் டிப்ளோமாப் பாட நெறியில் திறமை அல்லது விசேட சித்தி பெற்றோர் இப்பாட நெறியைக் கற்பதற்கு விண்ணப்பிக்க முடியும். இவை திணைக்களத்தின் ஆலோசகர் களினதும், உத்தேசித்துள்ள பல்கலைக் கழக விரிவுரையாளர்களினதும் மேற்பார்வையின் கீழ் தமது ஆராய்ச்சிப் பெறுபேறுகளை சமர்ப்பிப்பவர்களுக்காக இப்பட்டம் வழங்கப்படுகிறது.

## ✪ பல்கலைகழகங்கள் மூலமாக நடாத்தப்படும் பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பாட நெறி

பேராதனை, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய பல்கலைக்கழகங்களின் கல்விப் பீடத் தினால் இப்பயிற்சி நடாத்தப்பட்டு வருகிறது. இப்பாட நெறிக்கு பட்டதாரி ஆசிரியர்கள் போட் டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப் படுவர். இதனது கல்விக்காலம் ஒரு வருடகாலமாக உள்ளது. இங்கு மரபு முறை அறிவுக்கு மேலதிகமாககக் கற்றல் தொடர்பான செய்முறைப் பயிற்சியும் வழங்கப்படுகின்றது. எனவே இதுவும் ஒரு முழுமையான பாட நெறியாகும். இவ் வாறு கற்பித்தலை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.

தற்பொழுது கொழும்பு பல்கலைக் கழகத்தினால் கொழும்பசை சூழவுள்ள தனியார் அரசாங்கப் பாடசாலைகளில் கற்பிக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மாலை நேரப் பாடநெறி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இங்கு பதிவு செய்யப் பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதேச மத்திய நிலையங்களிலும் வார இறுதிப்பாட நெறி களை மேற் கொள்ளளுகின்றனர். இவ் டிப்ளோமாப் பாட நெறி தொலைக்கல்விப் பயிற்சி முறைக்குச் சமனானதாகக் கொள்ளப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்கலைக் கழகங்கள் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் உயர்கல்வி வசதிகள்.

பட்டப்பின் கல்வி டிப்ளோமாப் பாட நெறியில் திறமை அல்லது விசேட சித்தி பெற்றவர்கள் இந்நெறியினை மேற்கொள்ளலாம். இன்றைய நிலையில் உயர்கல்வி வசதிகளாக கொழும்பு அல்லது பேராதனைப் பல்கலைக்கழகங்களில் கல்விப் பீடத்தினால் கல்வி முதுமாணி அல்லது கல்வித் தத்துவமாணி பட்டங்களைப் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன. இது முழுநாள் நிறுவனப்பயிற்சிப் பாட நெறியாகக் கொள்ளப்படுகின்றது.

## திறந்த பல்கலைக் கழகங்கள் மூலம் நடாத்தப்படும் கல்வி டிப்ளோமா பாட நெறி

இக்கல்வி டிப்ளோமாப் பாட நெறியானது தொலைக்கல்விப் பயிற்சி முறையில் பின்பற்றப் படுகிறது. இதனைத் தபால் மூலப்பாட நெறியாகவும் கூறலாம். இப்பாட நெறிக்கென தயாரிக்கப்பட்ட மொடியூல்களை மாணவர்கள் பின்பற்றுகின்றனர். இடையிடையே நடாத்தப்படும் நேரடிப் பயிற்சி வகுப்புக்கள் மூலம் தேவையான மேலதிக அறிவும் சந்தேகங்களும் நிவர்த்தி செய்யப்படுகின்றன. இங்கு திட்டமிடப்பட்ட பயிற்சி முறைமையும் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் கற்பித்தல் முறை மேற்பார்வை செய்யப் பட்டு வழிநடத்தப்படுகின்றது.

## விளையாட்டுத்துறை அமைச்சினால் நடாத்தப்படும் விளையாட்டுத்துறை டிப்ளோமா பயிற்சிப் பாட நெறி

இப்பயிற்சி நெறியானது 9 மாத காலத்தைக் கொண்டதாகும். 5 வருட சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்த ஆசிரியர்களும், இந்நெறிக்கு விண்ணப்பிக்கலாம். எழுத்து மூலம் போட்டிப்பரீட்சையில் சித்தி அடைந்தவர்கள் செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு பின்னர் நேர்முகப்பரீட்சையின் பின் இவர்கள் இந்நெறிக்குச் சேர்த்துக் கொள்ளப்படுவர். இதற்காக 9 மாதகால சம்பளத்துடனான கற்கைவிடுமுறை வழங்கப்படும். உடற்கல்வித்துறைக்கு இது பெரும் வரப்பிரசாதமாக அமைகின்றபோதிலும் தமிழ் மொழியில் இன்றும் ஆரம்பிக்கப் படவில்லை.

## சமய நிறுவனங்களினால் நடாத்தப்படும் குறுகிய காலப் பயிற்சி நெறி.

இன்று சமயசங்கங்கள் பல மாவட்டரீதியாக சமய ஆசிரியர்களை அழைத்து கருத்தரங்குகளை மேற்கொள்ளுகின்றன. இக்கருத்தரங்குகளினால் சமய ஆசிரியர்கள் பயனடைகின்ற போதிலும் முறையான திட்டமற்ற முறையினை இங்கே காணக் கூடியதாக உள்ளது. சரியாகத் திட்டமிட்டு இப்பயிற்சி மேற் கொள்ளப்படும்போது வினைத்திறன் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசசார்பற்ற நிறுவகங்களினால் நடாத்தப்படும் பாடநெறிகள்.

இன்று இயங்கிக் கொண்டிருக்கும் நிறுவனங்களான ஜீ. ரி. சற் (G. T. Z) என்ற ஜேர்மனி நிறுவனம் சீடா, நொறாட் போன்ற நிறுவனங்கள் ஆசிரியர்களுக்கு கருத்தரங்குகள் செயலமர்வுகள் நடாத்துவதற்கு அனுசரணை நல்கி வருகின்றன. இதற்காக தேசிய கல்வி நிறுவகம், கல்வி உயர்கல்வி அமைச்சு பல்கலைக்கழகங்கள் இன்னும் பிற இடங்களிலிருந்து வள ஆலோசகர்களைப் பெற்று இப்பயிற்சி நெறியினை நடாத்துகின்றன. இது குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டும் நடை பெறுவது குறிப்பிடத்தக்கது.

## வெளிநாடுகளில் பயிற்சி

கல்வி உயர்கல்வி அமைச்சே இப்பயிற்சிக்கான செயன்முறைகளைத் திட்டமிட்டு நிர்வகிக்கின்றது. இப்பயிற்சியானது இன்று பல்துறைகளுக்கும் வியாபித்துள்ளது. இப்பயிற்சிக்காலம் துறைகளுக்கேற்பவும், தேவைகளுக்கேற்பவும் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டமானது புலமைப்பரிசில் அடிப்படையில் அமைகின்றது. சம்பளத்துடனான கற்கை, விடுமுறை, சம்பளமற்ற கற்கை விடுமுறை, அரசின் செலவு, தனிப்பட்டவரின் செலவு, நிறுவனங்களின் அனுசரணை என்ற அடிப்படையில் இவை நடைபெறுகின்றது. இதற்காக கல்வி உயர்கல்வி அதிகாரிகள் பணிப்பாளர்கள், அதிபர்கள், துறைசார் விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள் தெரிவு செய்யப்படுவர். இப்பயிற்சியின் மூலம் வெளிநாட்டில் பின்பற்றப்படும் பல ஆசிரியப் பயிற்சி முறைகள் கற்பித்தல் முறைகள் நுட்பமுறைகள் என்பவை கற்பிக்கப்படுகிறது.

'சமூக ஒற்றுமை அவசியமானது. பலதரப்பட்ட சமயவாதிகளும் சமூக நிலையங்களும் தமது அனாவசியமான வேற்றுமைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு நாட்டின் முன்னேற்றத்தின் முக்கியத்துவத்தில் கவனம் செலுத்துவது அவைதம் கடமையாகும். குறிப்பாகத் தமிழரும், சிங்களவரும் தமது பொதுக் கலாசாரத்தையும் பொது நலத்தையும் கவனத்திற் கொண்டு தம் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும்.'

–விபுலாநந்த அடிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழ்மையில் உயர்வு

சி. ஸ்ரீபாலகிருஷ்ணபிள்ளை
2ம் வருடம்
ஆரம்ப நெறி

ரேவதி எப்பொழுதுமே ம்........ம்......ம் அப்பனே சிவனே என்று பெரு மூச்சு விட்டபடி இருப்பது அவளுடைய வாழ்நாள் முழுவதும் வழக்கமாகிவிட்டதொன்று. அது அவளுடைய வழக்கம் மட்டும் அல்ல அவளுடைய தாய், தாயின் தாய் என்ற தொடரில் இருக்கின்றதோ தெரியவில்லை.

வைகறையில் துயில் எழும் பொழுது இந்த வசனமே சொல்லிக் கொண்டு எழுவாள். தனது வாழ்கையின் சோகத்தை அவளால் சொல்லமுடியாது குமுறுகின்றாள். அதனை பெரு மூச்சில் வடிக்கின்றாள். இத்தனை வேதனைகளிலும் தனது ஒரே ஒரு மகனை கவனிப்பதில் தவறவில்லை.

ரேவதி அம்மாள் தனது மகனை நல்ல ஓர் எதிர்கால சிற்பியாக்க கணமும் சிந்தித்த படி வாழ்கிறாள். மகனுக்கு வயதோ பன்னிரண்டைக் கடக்கவில்லை. சிறு பாலகன். அவனைக் கொண்டு வேலைகள் எதுவுமே செய்விக்கவும் முடியவில்லை என்று ரேவதி சிந்தித்தாள்.

தனது மகன் சேட், சூட், காஸ்மேஸ், கைமேஸ் எல்லாம் போட்டுக் கொண்டு வேலை பார்க்க வேண்டும், அவனுடைய நிழலில் தான் தங்கி இருக்க வேண்டும் என்பது அவளுடைய தாய்மைச் சிந்தனை. ஆனால் அவளின் குடும்ப வறுமையால் மகனை தொடர்ந்து கல்வி கற்பிக்க முடியவில்லை என்று கவலைப் பட்டுக் கொண்டிருக்கிறாள். ஆனாலும், ஆறாம் வகுப்பு வரை கற்பித்துக் கொண்டிருக்கின்றாள். மகன் சுரேஸ் தினமும் பாடசாலைக்குப் போய் வருகிறான்.

சுரேஸ் பாடசாலைக்குச் செல்லும் போது ஒழுங்காக உடைகள் அணிந்து போகமுடியாதுள்ளது. அவ்வளவு வறுமை. சுரேஸ் "அம்மா நான் பாடசாலைக்குப் போகமாட்டேன்" ரேவதி அம்மாள் திகைத்துவிட்டாள். ஏன் மகனே போகமாட்டன் என்கிறாயே? அம்மா! எனக்கு மற்றும் சக நண்பர்கள் போல உடைகள் அணியவோ........அதுமட்டுமல்ல அம்மா எழுதுவதற்கு பேனா, பென்சில், கொப்பிகள் எதுவும் இல்லையே! நான் எப்படி அம்மா படிக்க முடியும். ஆசிரியரும் என்னைப் பேசுவார். ஏனடா கொப்பி கொண்டு வரவில்லை என்று பேசுவார். நான் போக மாட்டேன் அம்மா!

ரேவதி அம்மாளுக்கு முன்பிருந்த பெருமுச்சு இன்னும் வேகமாக இதயம் துடித்தது போல் வேலை செய்யத் தொடங்கிவிட்டது. ஆனால் இத்தனைக்கும் ரேவதி அம்மாளுக்கு உதவி செய்யவும் யாரும் முன்வரவில்லை. ரேவதி அம்மாளின் முடிவு மகனே என் ஆசைச் செல்வமே தடைகள் அற்ற அண்ட வெளியில் தோன்றும் கதிரவனே என்வயிற்றில் ஏன்!..... பிறந்தாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுரேஸ்" நீ தொடர்ந்து படிக்க முடியாது இருக்கிறதே. இனி நீ ஒரு சிறு தொழிற்சாலையில் சேர்ந்து சிறிதளவு பணமாவது உழைத்துத்தான் நாங்கள் இருவரும் வாழ வேண்டும். என்னம்மா வேலை செய்ய முடியும். சுரேஸ், உன்னை ஓர் சுருட்டு சுற்றும் தொழிற் சாலையிலதான் சேர்க்கலாம். அந்த மனேச்சரோடும் கதைத்தேன். அவர் உன்னை நாளைய தினம் கூட்டிவரும்படி சொன்னார். சரியம்மா நான் போய் சிறுவேலை செய்தாவது பார்ப்போம்.....

"தம்பி" "சுரேஸ்" எழும்படா விடிந்து விட்டது. காலை நேரம் கதிரவன் அடிவானில் தோன்றும் வேளை ரேவதி அம்மாள் எல்லா வேலைகளையும் முடித்து சுரேசை குளிக்கச் செய்து அவனுக்கு விரும்பமான சாப்பாடு கொடுக்கிறாள்.

சுரேஸ் செல்கிறான் அம்மா..........அம்மா போயிட்டுவாறன்........என்று கண்ணீர் வடித்த முகத்துடன் செல்கிறான் அதைப் பார்த்து ரேவதியோ சுரேசுக்கு முன்னால் கண்ணீர் விடக்கூடாது என்பதற்காக அவன் சென்றபின் நின்று அழுதபடி நின்றாள்.

சுரேஸ் தொழிற்சாலைக்குப் போகின்றான் அங்கே மனேச்சர் அவனைக் கூப்பிட்டு அடே சுட்டான் நீயா இங்கு வேலை செய்ய வந்தாய். உனக்கு என்ன வேலையாட தரமுடியும்? என்று கேலிசெய்து அவனை பயமுறுத்தியபின் தொழிலாளர் வேலை செய்யும் இடத்தில் அவனை அனுப்புகின்றார் "மனேச்சர்" அங்கே சுரேசைக் கண்டவுடன் அவர்கள் எல்லோரும் அடே சுட்டன் வாடா வாடா என்று கூச்சலிட்டு அழைத்தார்கள். சுரேஸ் மனதில் நினைக்கின்றான் கடவுளே இத்தனை பெரியவர்களோடு எப்படி நான் வேலை செய்ய முடியும் என கவலைப்பட்டுக் கொண்டு செல்கின்றான்.

அங்கே சுருட்டுத்தூள் செய்யும் இடத்தில் ஒருவன் கூப்பிட்டு இருத்தினான். இருத்தி அவனுக்கு சுருட்டு சுற்றும்படி உறுத்தினார்கள். அவன் பிழைகள் விடும் போது புகையிலை காம்பினால் முதுகில் அடித்தார்கள். அவனின் அழகிய மென்மையான உடலில் தழும்புகள் ஏற்பட்டன. அதனால் அவன் அழுது அழுது தனது வேலையை செய்து கொண்டிருந்தான் வேலை முடியும் போது அவனுக்கு சிறிதளவு பணம் கொடுக்கப்பட்டது. அவன் அதனை வேண்டிக் கொண்டு வீட்டை நோக்கி மிகவும் வேகமாக நடக்கத் தொடங்கினான். இருட்டத் தொடங்கி விட்டது. பயந்து பயந்து போய்க் கொண்டிருக்கிறான்.

ரேவதி அம்மாள் சுரேசை காணவில்லையென்று பார்த்து கொண்டிருக்கிறாள். சிறிது நேரத்தின் பின் வந்து சேர்ந்துவிட்டான். அவள் சுரேசைக் கட்டிப் பிடித்து அழுது முத்தமிட்டாள். சுரேசோ விம்மி விம்மி அழத் தொடங்கினான். அம்மா நான் இனிமேல் வேலைக்குப் போகமாட்டேன். என்னுடைய முதுகில் எத்தனை அடித்தழும்புகள் இருக்கிறது என்று பாருங்கள் அம்மா. பிழைவிட்டால் புகையிலைக் காம்பால் அடித்த வேதனையால் துடிதுடித்தேன்!

மகனே! என்னடா செய்வது. வேலைக்குப் போய் நான்கு பணம் உழைத்தால் தானே சாப்பிடமுடியும். அது மட்டும் அல்ல. வசதி வாய்ப்புக் கிடைத்தால் மனேச்சர் ஒரு நேரமாக வேலையை தந்து படிக்கவும் விடுவார் என் அன்புச் செல்வமே போடா!

சரியம்மா படிக்கவும் விடுவார் என்றால் நான் போகிறேன். சுரேஸ் கவலை தோய்ந்த முகத்தோடு படிப்பையும் வேலையையும் செய்து வந்தான். சுரேஸ் பாடசாலையில் படிக்கும் போது வீண் பொழுது போக்காது திறமையுடன் கல்வியைக் கற்று வந்தான். இவ்வாறாக ஆண்டுகள் ஐந்து சென்று விட்டன. G. C. E. சாதாரணப் பரீட்சையில் திறமையான முதன் நிலை மாணவனாக சித்தியடைந்தான். இதனால் அவனுக்கு பாடசாலையில் பெருமதிப்பு வழங்கப்பட்டு அரசின் செலவில் படிக்க வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வாழ்வு ஒரு சகடக்கால் போன்றது" என்னும் முதுமொழி போல் ரேவதி அம்மாளுக்கு சந்தோஷம் பிறக்கத் தொடங்கி விட்டது. தம்பி சுரேஸ் விதி விதிதான். அதனை மாற்ற முடியாது. நீ இத்துடன் வேலையை நிறுத்திவிட்டு படிக்கப் போக வேண்டும் மகனே! நான் ஏதாவது சிறு வேலையை செய்து சாப்பிடுவேன் என்று கூறிவிட்டு பிள்ளையை படிக்க கல்லூரி ஒன்றுக்கு அனுப்பினாள்....

......சுரேஸ் படிப்பு முடித்துவிட்டு வரும்வரை நான் இப்படி சிறு வேலைகள் ஏதாவது செய்துதான் வாழ வேண்டும். பறவாய் இல்லை. கஸ்டப்பட்டதோடு தொடர்ந்தும் கஸ்டப்படுவதும் விடிவு என்றோ ஒரு நாள் கிடைக்கத்தானே வேண்டும்.

சுரேஸ் படிப்பு முடிந்து பொறியியலாளனாக வருகிறான் அம்மா!..........அம்மா நான் வந்து விட்டேன் "அம்மா" தம்பி வந்து விட்டாயா ஆவலுடன் எதிர்ப்பார்த்த ரேவதி அம்மாளுக்கு அளவில்லா மகிழ்ச்சிக்கடலில் மிதந்தாள் கண்ணீர் பொங்கி வடிந்தது.


சுரேஸ் பொறியியலாளனாக வருகிறான். வந்து வேலைக்குச் சென்று பண்பும் மதிப்பும் கௌரவமும் மிக்கவனாக தனக்கு கீழ் நூற்றுக்கணக்கில் வேலையாட்களை வைத்து வேலை செய்வித்தான். ஓர் உயர்குடும்ப நிலைக்கு அவனை இட்டுச் சென்று விட்டது. ரேவதி அம்மாளின் பெருமூச்சும் மாறிவிட்டது........ஒரு சிறந்த பொருளாதாரம் உடைய குடும்பமாக மாறி விட்டார்கள்.

எந்தவொரு பிள்ளையையும் தவறான பாதையில் விட்டுச் செல்லாது நல்வழியில் விட வேண்டியது பெற்றோர் ஆசிரியர் கடன். இலட்சியம் வெற்றி தரும்.

"மனித் இன. வீட்டைப் புதுப்பிக்கச் செய்யும் வேலையில் சமயம் ஏற்கும் பகுதி, விஞ்ஞானமேற்கும் பகுதியைவிட முக்கியத்துவத்தில் எவ்வாற்றானும் குறைந்ததன்று. தனிப்பட்ட மனிதன் ஒருவனுக்கு உடல், மனம், ஆன்மா ஆகிய மூன்றும் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் அதற்குரிய வளர்ச்சிப் பொருள் தேவையே. உணவு, உடற்பயிற்சி ஆகியவற்றால் உடல் மிடுக்காக வைக்கப்படுகிறது. விஞ்ஞானம், திறனாய்வு ஆகியவற்றால் மனம் விளக்கமுறுகின்றது. கலை, இலக்கியம், தத்துவம், மதம் ஆகியவற்றால் ஆன்மா ஒளிபெறுகிறது. மனித இனத்தின் ஆன்மா வளர்ச்சியடையத் தேவையாயின் மிகவும் இன்பமூட்டும் சக்திகளின் செயலாற்றலினாலேதான் அது நடத்தப்பட வேண்டும்......"

-தத்துவ மேதை **இராதாகிருஷ்ணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புது யுகம் படைக்கப் புறப்படு தோழா!

எஸ். விஜயகாந்தன்

போர்வைக்குள்
புதையுண்டு கிடப்பவனே!
புரண்டு புரண்டு
படுப்பவனே!
புது யுகம்
படைக்கப் புறப்படு!
நேற்றையவைகள்
இறக்கவில்லை
நெடுந்தூரம்
போகவில்லை
சாக்கடையைச்
சரித்து விட்டு
சாதனை செய்ய
வா! தோழனே!
இனியவனே!
இன்றிலிருந்து
இதயத்தைச் சூழ்ந்த
சாக்கடையை
விட்டு விட்டு
விரைவாக ஓடிவா!
உனக்காக ஒரு பாதை
உருவாகிறது
உனக்காக ஒரு
பொழுது விடிகிறது
நண்பனே!
மானிடத்தைப் பார்த்து
மதிமயங்காமல் சொல்!
என்னை எடைபோடுங்கள்
தடை போட வேண்டாம்
என்று
வேலி தாண்ட செடி
வேளை பார்க்கிறது
நீ உன்னைத் தாண்ட
வேளை காத்திருக்கு
எதிர்பார்த்திருக்கு.

நீபோட்ட பாதையில்
நடை பயில
தடை போடுகிறார்களா?
உள்ளத்தில் உரமும்
கால்களில் வீரம்
கம்பீரமும் இருக்கிறது
கவலைப்படாமல்
முன்னேறு
கையில் உள்ள
தீக்குச்சிகளை
தட்டிவிட்டார்களா?
கலங்காதே
உன்னிடம்
கதகத எனக்
கொதிக்கும்
உதயசூரியன்
உள்ளான்
ஆணியில் தொங்கும்
சட்டை போன்று
இலட்சியமில்லாத
வாழ்க்கை உனக்கு
வேண்டாம்!
காற்றில் பறக்கும்
காகிதம் போன்று
உன் கனவுகள்
பறக்க வேண்டாம்
பாபர் மசூதியும்
வேண்டாம்!
இராமர் கோயிலும்
வேண்டாம்!
நமக்கு என
நாமம் சூட்டி
அமைதி
ஆலயம் ஒன்று
அமை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காகத்தின் நிறம் கறுப்பு
ஒப்புக் கொள்கிறேன்
உள்ளத்தின் நிறம் வெள்ளை
ஒத்தாக வேண்டும்
இரண்டும் கண்ணும்
ஒரே காட்சி
அது ஒற்றுமையின் ஆட்சி
இது உலகிற்கு சாட்சி
ஆனால்
எமக்குள் எத்தனை
விரோதங்கள்!
மலரின் மகரந்தத்துக்குள்
குத்துக்கத்தியா?
கர்ப்பப் பைக்குள்
விஷப்பையா
புனிதமான மண்ணில்
போர்க்களமா?
வேண்டாம் தோழா?
வேதனைப்படுவாள் அன்னை
கணவனுக்காக
மதுரையைக்
கருக்கினாள்
அன்றைய
கண்ணகி
இன்றைய
கண்ணகிகள்
கோவலனாலேயே
எரிக்கப்படும்
பரிதாப நிலை
கண்ணகிகளால்
காக்கப்பட்ட கற்பு
இன்று
காடையர்களால்
கலைக்கப்படுகிறதே!
கவனித்தாயா தோழா?
கல்யாணச் சந்தையில்
பேரம் பேசும்
காளையாகவே
காட்சி தருகிறார்களே!
கட்டான
காளையர்கள்
கன்னிகள் எங்கே
போவது
காசுசேர்க்க
இனிய இளையனே!
படித்த வேலைக்கு
தகுதியான வேலையை
வெல்லமுடியவில்லை
வில்லில் இருந்து புறப்பட்ட
அம்புக்கு
சுதந்திரமுண்டு
இருந்தும் அதற்கு
இலக்குண்டு
உன்னை
ஒரு கூரிய
அம்பாக்கு
இலக்கை அடைவதற்கு
இதயங்களை துளைப்பதற்கல்ல!
சித்திரை மாதத்து
நதி போன்று
உன்
நம்பிக்கையும் வற்றி
விட்டதா?
யானைக்குப்பலம்
தும்பிக்கை
உனக்குப்பலம்
நம்பிக்கை
வா தோழா
நாம் படைக்கும்
புது யுகம் பற்றி
பேசுவோம்
மலைகளையே
நகரவைக்கும்
லஞ்சக்காரர் வேண்டாம்!
மனிதாபிமானத்தை
புதைகுழியில் போட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்டுக்காரர் வேண்டாம்!
இரத்தம் பார்த்து
பேயாக சிரிக்கும்
இனவெறியர் வேண்டாம்
புத்தம் புது பூமி
அமைக்கும்
புத்திரர் எமக்கு வேண்டும்
நிலவு போன்று
கருணைசெய்யும்
மனிதர் வேண்டும்
தட்டிக் கொடுத்தபின்
தருணம் பார்த்து
தட்டிவிடும் மனிதர்
வேண்டாம்
இனி உங்கள்
கணைகள்
எங்கள்
கவசத்தைத்தாக்காது
உங்கள் பருப்பு
எங்கள்
நெருப்பிலே வேகாது
சோலைக்குள் இருந்து
இடம் பெயர்ந்த தனி
மரமல்ல நாங்கள்
மூலைக்குள்
முடங்கும்
முடமுமல்ல நாங்கள்
கருத்தால் மனத்தால்
கட்டப் பட்டவர்கள் நாம்
ஒன்றாகக் கலக்கப்பட்டவர்கள்
சத்தமில்லதா
யுத்தமில்லதா
புனிதமான
புதுயுகம்
படைக்கப் புறப்படுவோம்
தோழா! அதனால்
நீயும் நானும்
நிம்மதியாகத் தூங்கலாம்

☆

துணிவு என்னும் துணையை கைப்பற்றி ஒருவழிச் சென்ற உள்ளத்திலே ஊக்கம் உண்டாகும். ஊக்கமும் நம்பிக்கையும் ஒரே தன்மைய. ஊக்கத்திலிருந்து நம்பிக்கையும், நம்பிக்கையிலிருந்து ஊக்கமும் பிறக்கின்றன.

-விபுலானந்தர்

உம்மிடம் தீவிர நம்பிக்கை இருக்குமானால் நீர் மனமுருகி தேடும் பொருள் உமக்கு கிடைக்கும்.

-இராமகிருஷ்ண பரமஹம்ஸர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සමාජ වගකීම කරා පුද්ගලයා පුහුණු කරන්නේ කෙසේද?

කථිකාචාර්ය සරත් පෙරේරා
බී. ඒ. පෞරව
අධ්‍යාපන ඩිප්ලෝමා (සම්මාන)
අධ්‍යාපනපති.

මිනිසාට සමාජයේ ජීවත්වීමට හුරුකරවීම අධ්‍යාපනයේ විශේෂ කාර්යාභාරයකි. ඇරිස් ටෝටල් ප්‍රකාශ කළ පරිදි මිනිසා සමාජ සත්වයෙකි. එසේනම් නම් සමාජය සමඟ එකට මිනිසාට ජීවත්වීමට හැකිවිය යුතුය. සමාජ බන්ධනයෙහිලා යම් යම් මූල ධර්ම ඇත. යම් යම් සමාජ කොටස් (ජාතීන්, ගෝත්‍ර, කුල) වෙනම එකට බැඳ දමා ඇති ජන කථාවන් පුරාණෝක්තීන් ආදියෙන්ද මිනිසා නැවත නැවත බැඳ තබයි. මේ අයුරින් මිනිසා ආසන්න සමාජයේ සිට විශ්ව සමාජය දක්වා බන්ධනය වී ඇත. එය අධ්‍යාපනය හරහා වඩාත් තිවු විය යුතුය. ඒ අනුව සෑම සමාජයකටම තම අධ්‍යාපනය හරහා ඒවා ඉගැන්විය යුතුය. එවිට මිනිස්සු තුළ ජාතික සමාජ බවක් අධ්‍යාපනය තුලින් ඇතිවේ. මේ ජාතික බව කිසි අයුරකිනුවක් ඉවත් කිරීමට නොහැකිය. යුනෙස්කොව මේ විවිධත්වය තුළ අනන්‍යතාවයක් හඳුනා ගත යුතු බව කියන්නේද එබැවිනි. අධ්‍යාපනයේ හරහා එන්මන් සමාජයේ මෙකී ස්වභාවය සථාපිත කොට අනාගත සමාජයට දායද කිරීමක් අපේක්ෂිතය. එහෙත් එය කෙතෙක් දුරට ඉටුවී ඇත්ද? යන්න ගවේෂණය කිරීම අනෙකකි. මෙම ප්‍රස්තුතයේ සත්‍ය තාවය පිළිබඳ සැක පහළ වන්නේ අනාගත සමාජයේදී මිනිසා හුදකලාවීමේ රෝගයෙන් බෝහෝ පෙළන බව නන් දෙසින් රූවී පිළිරුවි දෙන බැවිනි. අප කොතෙක් විශ්ව ග්‍රාමයක ජීවත්වන බව කිවත්. අප තුල තිබූ බන්ධන සබඳතී අඩු වී ගෙන යයි. මේ නිසා මිනිසා අසංගත වීමක්. ද්විතවවීමක්. කැඩී බිඳී යාමක් වී ඇත. එහෙත් සිදුවිය යුත්තේ සංගතවීමක්. ඒකීය බවක් කායික බැඳීමක් වීමය. නමුත් රූකියාව කිරීම විද්‍යාත්මක හා තාක්‍ෂණික වෙනස්වීම් අපේ රටේ පරමාර්ථයට මරු හාරක එල්ලවී ඇත. විද්‍යාව මගින් වරෙක අප හුදෙකලා කරව ගමන්ම වරෙක එක්තැන් කිරීමකුත් කෙරේ. නිදසුනක් ලෙස බුරුමයේ තිබූ ගෙවල් කීපයක් වටේ වූ අතර ඒවා මධයේ වූයේ මිදුලකි. සියල්ලෝම වී කොටන්නේ මේ මිදුල මැද ඇති වංගෙඩියෙනි. එයින් මානසික වර්ධනයක් සිදු වූ අතර වර්තමායේ ඇති මොල්වලින් ඊට ප්‍රතිවිරුද්ධ තත්වයක් ඇතිවී ඇත.

එසේනම් අතීත සබඳතා වෙනස් විධියකට නැවත ගොඩ නගා ගත යුතුය. පාසල කාලය තුළ අන්‍යොන්‍ය සබඳතා පවත්වන අයුරින් ප්‍රායෝගික කළ යුතුය. පාසල තුළ ප්‍රජාතන්ත්‍රවාදයක් ක්‍රියාත්මක විය යුතුය. මෙහිලා පාසලෙන් උගන්වන්නේ ඒකාධිපතිවා දයක් යයි චෝදනාවක් ඇත. එයින් මිදීමට ළමුන්ට කලහැකි දේ ඔවුන්ට පවරා ඔවුන් විසින් අවශ්‍යතා ඉටුකර ගත යුතුය. චීනය, සොවියට් රුසියාව වැනි රටවල මේ තත්වවය ඇත. අපේ පාසල්වල නායකත්වය භාර දෙන්නේ වසර ගණනාවක් එක් කෙනෙකුටය. නායකත්වය හැර දමා යන්නටද ආත්ම ශක්තියක් තිබිය යුතුය. ඒ නිසා අනුගාමිකයන් හා නායකයන් ලෙස සියල්ලෝම සිය භූමිකා රංගනය කළ යුතුය. පාසල්වල සමාජ වග කීම අර්ථවත් පරිදි නායකත්වය මෙන්ම අනුගාමිකත්වය පුරුදු පුහුණු කළ යුතුය. මේවා ඉගැන්විය නොහැක. සමිති, සමාගම් බාහිර ක්‍රියාකාරකම් මගින් ඒ සඳහා ඉඩ ප්‍රස්ථා සැලස්සිය යුතුය. එලෙසින් සමාජ වගකීම් දෙසට ළමුන් පුහුණු කළ යුත්තේ ක්‍රියාකාරකම් මගිනි. ඔවුන්ට ස්වාධිනව සත්‍ය ලෙස තීරණ ගැනීමට ඉඩ දෙන්න. කියා යුනෙස්කොව කියන්නේ එහෙයිනි. මේ සඳහා පාසල තුළ දේශපාලනය ක්‍රියාත්මක විය යුතුය. සාමූහික තීරණ විමර්ශනය. ඡන්ද විමසීම ඒ තුලින් පත්වීම් වැනි දේ පාසල තුළ විය යුතුය. ඉන් ඔවුන්ට කළයුතු හා නොකළ යුතු දෑ උගත හැක. ළමයාව ප්‍රජාතන්ත්‍රවාදයේ මූල ධර්ම

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කවරේද? යනු වග අසා වැඩක් නැත. ඒ වෙනුවට ලබන්නේ පාලන සමය තුළ පැවැති ප්‍රජාතන්ත්‍රවාදය වර්තමානයේ ඇමෙරිකාවේ කොතෙක් දුරට ක්‍රියාත්මක වේද? ආදි වශයෙන් ප්‍රශ්ණ කළ යුතුය. ඒ අනුව වසර පහෙන් පහට බලයට යම් කණ්ඩායමක් පත් කොට තිහඬව සිටිනු වෙනුවට ඔවුන් දුන් පොරොන්දුව ඉටුකර ගැනීමට උද්ඝෝෂණකොට අවිහිංසක ක්‍රියා මාර්ග මඟින් ඉටුකර ගැනීමට අවශ්‍ය සවිය ලබාදිය යුතුය

එතකුදු නොව අධ්‍යාපනය ආර්ථික ජීවිතයට සම්බන්ධ කළ යුතුය. සැම දෙනාටම ආර්ථික විද්‍යාව ගැන අධ්‍යාපනයක් නැත්නම් සංවර්ධනයේ කොටස් කරුවන් කර ගැනීමට අවශ්‍ය පදනම දැමිය යුතුය. ප්‍රසිද්ධව සංවර්ධනයට උරදෙන්නන් කළ යුතුය. සවිග්‍රහකව පරිභෝජනය කළ යුතුය. රවට්ටන ලොවක් තුළ නොරැවටී ජීවත්වීමට උගත යුතුය. පරිභෝජන බුද්ධියට නිගා කළ යුතුය. විෂය කරුණු උගන්වන ගමන්ම අන්තර්ගතවය කියා දිය යුතුය. අන්තර් ජාතික සාමය මෙහි අන්තර්ගත විය යුතුය. මිනිසාට සාමයෙන් ජීවත්වීමට උපකාරීවන අධ්‍යාපනයක් දිය යුතුය.

මිනිසාට මානසික සැහැල්ලු බව අවශ්‍යය. යුද්ධ හටගන්නේ මිනිස් සිත්වලය. එනිසා සාමයේ කඳවුරු බැඳිය යුත්තේ සිතෙහිය. මෙය යුනෙස්කොවේ ප්‍රඥප්තියයි. මෙය කළ හැක්කේ හුදෙකලා බවින් ඈත්කොට සාමුහික බව තුළය. මනසේ සාමය කැඩීම සිදුවන්නේ ඉමජාභංගය නිසාය. එය සමාජයට අනර්ථදායකය. අසමර්ථකාව අත් විඳින්නේ නම් ඔහුට නොහැකිය. යන හීනමානය ඇතිවේ. එවිට එවැන්නෝ අසල්වාසීන්ට, සමාජයට සතුරුකම් කරයි. එය අසල්වාසීන්ගේ සිට ජාතිකත්වය ජාත්‍යන්තර්ත්වය කරා විහිදෙයි. පංති කාමර අසාර්ථකත්වය භුක්ති විඳිනකොට අසමත් බව අත්දකින්නට ඉඩදෙන විට ගායනක අපේක්ෂා භංගත්වය හීනමානය ඇතිවේ. හීනමානයෙන් අපේක්ෂා භංගත්වයෙන් යුත් අය ජාති වාත්සල්‍යයෙන් යුත් අයයැයි සාමාන්‍යයෙන් කියනු ලැබයි. එසේනම් ඔවුන්ට අප දිය යුත්තේ සමත්බව පිළිබඳ අධ්‍යාපනයකි. මෙහිදි විෂය මාලාව පෙළ පොත් ආදිය ස්වල්පයක් තබාගෙන මෙය ඉටුකළ නොහැක.

ළමෝ පාසලේ ඉන්නේ සතුටිනි. ඔවුහු අසතුටින් ගෙදර යායුතු නැත. සන්තුෂ්ටියෙන් තැබිය යුතුය. එහෙත් වත්මන් පාසලේ චිත්‍රය කෙබඳුද ? අධ්‍යාපනය හාස්කම් කරන්නේ නම් වැඩියෙන්ම තෘප්තිමත් විය යුත්තේ උපාධිධරීන්ය. ඊට පසු අ. පො. ස. (උ. පෙ) සමතුන්ය. ඉන්පසු අ. පො. ස. (සා. පෙළ) සමතුන්ය. එහෙත් වැඩියෙන්ම අතෘප්තිමත් උපාධිධාරීහුවෙති. ඉන්පසු පිළිවෙළින් අන් අයය.

මේ අනුව යෝජනා කරන දෙයක් නම් පුද්ගලයා තුළ ඇති ශක්තීන් මතුකොට ඔහු තුළම සාමයක් ඇති කිරීම. මෙයට ඇති වටිනා පිළියම බවයි. එවිට අසල්වාසී මට්ටමේ සිට ජාතික මට්ටම දක්වා සාමය ව්‍යාප්ත වනු ඇත. සාමකාමී සමාජයක් අධ්‍යාපනයේ ඉලක්කය විය යුතුය. එහෙත් අපේ අධ්‍යාපන ගමන් මඟ සාමකාමී බවින් තොරය. කුඩා කල ලකුණු එකතු කරන අය වර්තමානයේ වැඩි වැඩියෙන් මුදල් එකතු කරති. ලකුණු වැඩියෙන් ලැබ සාමාර්ථ ලැබුවෝ අද වැඩි වැටුප් ඉල්ලති.

මේ නිසා අවිනිශ්චිතකා යුගය යන අන්වර්ථනාමයෙන් හඳුන්වන විසි එක්වන සිය වස තුළ සාමකාමී සමාජයක් වර්ධනය කරනු පිණිස ඒ සමාජයට උචිත ලෙස ළමුන් බිහි කිරීමට පංති කාමරය හැඩ ගැස්විය යුතුය.

ජාතික අධ්‍යාපන කොමිෂන් සභාව මඟින් හඳුනාගෙන ඇති අධ්‍යාපනය පිළිබඳ වූ ප්‍රමුඛත්වය දිය යුතු පුළුල් පරමාර්ථ හතර වූ

**01**. ජාතිකාභි වර්ධනය. **03**. චාරිකාභි වර්ධනය. **03**. පොදු නිපුණතා සංවර්ධනය.

**04**. සුවිශේෂ නිපුණතා (හුරුබුහුටිකම්) සංවර්ධනය.

හා ජාතික පොදු අරමුණතාවය සඵලකර ගැනීමෙන් සමාජ වගකීම් කරා වූ පුද්ගලයන් නිර්මාණය කර ගැනීමට උත්සුක වීම කාගේත් යුතුකමක් වේ. ඒ සඳහා ගුරු භූමිකාව සතු කාර්යභාරය සුළු පටු නොවනු ඇත.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# බුද්ධියේ නුඹ නිසා...

නාලිකා නිශාන්ති ඩයස්.
2 වන වසර

හඩා හඩා කල් යැවූ
දෙමාපියන් තුටු කරමින්
මව් උකුලේ සැනසුන
කාලයක්
යලිත් නම් නොමජ්වී
බුද්ධියේ නුඹ නිසා.............

පුංචි සන්දියේ වගේ
ගමේ පොඩි බඩවැටියෙ
ලන්ද දිග දුවගිය
කාලයක්
යලිත් නම් නොමජ්වී
බුද්ධියේ නුඹ නිසා.............

යහළු යෙහෙළියන් සමගින්
කෙලි පිටියෙ දිව ගොසින්
පාසලේ අකුරු කළ
කාලයක්
යලිත් නම් නොමජ්වී
බුද්ධියේ නුඹ නිසා...............

මිනිසාට සිසිල දෙන
විසල් රුක් ගොමු
සියොතුන්ගෙ ගී නාද
නොඇසෙන්න සතහට
බුද්ධියේ නුඹ නිසා............

ගිනි අව්ව පුපුරු ගහන
මලානික දේශයක්
අප තර ඉදිවෙන්නෙ
බුද්ධියේ නුඹ නිසා

රුදුරු ගිනි අව් දැලින්
වසා මුළු පොලෝ තල
විශ්වයම ජය අරන්
සිනාහඬ පැතිරෙන්නෙ
බුද්ධියේ නුඹ නිසා...............

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PITY THE POOR REFEREE

I have played in, refereed and watchd hundreds of games of soccer. People everywhere love to moan and complain about the decisions made by the referee. My experience has been that the moaners are often ignorant of the laws of soccer. A Referee shall be appointed to officiate in each game. His authority and the exercise of the powers granted to him by the laws of the Game commence as soon as he enters the field of play.

## Appearance and Equipment

The officially approved uniform should be clean, neat and smart. The image of referees in general is reflected by each individual and high dress standards must be adhered to. Ensure that you are wearing the correct uniform, if you go out looking like one of the spectatores, the players will hae the same respect for you as they do for those spectators.

For sports in which the official is expected to be a timekeeper, a wrist stop - watch as opposed to one which you must hold in your hand. Having the watch on you wrist not only frees your hands to handle the ball or anything else, but it can also be read easily at almost any time. Furthermore, if you want to make sure that you have pushed the button hard enough to start it running, you merely need to raise your wrist to your ear and listen to it without having to take your eyes off of the game. fully automatic timer is also in use. Make sure, of course, that your stopwatch has two buttons one to start and stop it and the other to return both hands to zero watches to be avoided are those with only one button. Because pushing it once starts it. Pushing it again stops it but pushing it a third time sends it back to zero. This type of watch is useless since you will have to stop and restart it several times for goals, injuries, penalty kicks, etc.

While a wrist stopwatch is recommended a finger whistle also preferable. This type of whistle sits on top of two fingers rings. They are very popular with football referees. once again, your hand is free to handle the ball, etc. more importantly, however, it forces you into the habit of carrying he whistle in your hand instead of in your mouth.

However, for basketball it is recommended that the officials carry the whistle in the mouth as long as it is tied around the neck so that it will not fall to the floor as soon as the official talks.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

If the official is also the official record / scorer than he should have a note pad with a pen and a pencil. The pencil is particularly useful when it is raining or if the note pad gets wet as a pen will not write on wet paper but a pencil will!

## Bearing

When the referee appears at a ground he should look competent. His bearing is imporant. First impressions remain and there is no reason for a refree to slouch on to a field and shamble from place to place. The referee's movements should be alert and should project an image of PROFESSINOALISM. Make the players realise that you know what you are doing.

## Punctuality

Within the guidelines set by local Associations, the referee sbould arrive at the ground in good time to inspect the field, goals, flags, lines, etc. It is most important that he arrive sufficiently early to make an early decision about starting a match if the weather conditions are inclement, when the match may have to be called off. There is nothing worse for public relations than if players suffer from the inclement weather thinking the match will be played, only to be informed by a late arriving referee that the match is off.

Presence and Reputation: the best type of official is one who by his presence causes players to avoid rule violations. The players seem to know that the official is watching and the influence of the referee is felt but he himself is unnoticed. The players need to be assured that here is a man who is fair consistent and understanding

## Offical Player - Relationship

This relationship should be based on trust and not anagonism. Some officials establish a very strict relationship at the beginning of the game. Others are firm but polite with a help full approach.

Here again it must be said that right approaches must be used to fit the occasion. Also, each individual must follow that which seems to best fit his own personality. No one method will fit all situations of all officals. The art of being oneself and being able to sense the correct approach to each situation is the secret of establishing the correct relationship.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Confidence

There are many factors which reflect the confidence of an official and which gain the confidence of the players, coaches and spectators, probably the most effective characteristic is the manner in which he carries out his duties. A movement which denotes sureness transmits a feeling on confidence to others.

Decisive action, which is not hasty but which has no element of hesitation is disirable. It leaves no question of doubt is he minds of others. It portrays positiverness which wins acceptnace.

A good voice is a great asset to an official is situations which require verbal announcement of a decision The voice properly pitched, carrying conviction, displaying firmness can no more to breed confidence and give poise than any other factor.

Some officials tend to be timid in this phase of officialing and when signals are also timid it creates a lack of confidence towards themselves.

Even if you are not sure of a decision don't be timid. If you think that someone has broken the rules, blow your whistle firmly. If you are not sure what to do in a particular situation, make the decision, stand by it, then after wards look it up or ask a senior official.

Strong actions will improve the image of an official.

## Consistency and judgement

Is the greatest virtue on official can possess. There is nothing more infermating for players than a referee who gives one decision and than in a smilar situation gives a completely different decision. A referee must be fair to both teams. you have to practice the art of officiating to become proficient just as players must practice their game skills.

## Reaction Time

He who hesitates loses control of the game. When calls are delayed or the official appears to be hesitant each time he calls, we are forced to conclude that the official either has poor judgement or has no sound foundation upon which reason for the great variation in the official's decision on similar play situations.

Officials who can't reach a reasonable standard of consistency in this aspect of officiating, should be eliminated from the sport, not put on lower grade games.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Positioning

Any official will make mistakes but a lot do not help themselves by moving into the best position to see the play. Few sports use static officials and fast games like rugby, soccer, basketball and netball require that officials continually adjust their position to see as much as possible of what is going on. Officials should be particularly aware of the 'pressure' areas where critical activity takes place is under the basket or near the goals. These areas require extra close monitoring as many of the decisions which determine the result of a game will have to be made in these areas.

It follows then that officals must be physically fit to be able to continually change positions and keep up with play. Decisions made 40 or50 metres from the scence are far more likely to be wrong than those made closer to the scene of the incident.

## After the Game

Once the final whiste has gone do no wait around looking for compliments. Try to avoid any distrubance or upset by moving quickly away from the field of play and do not stay and discuss any of your decisions because you will only provoke an argument.

Ensure that any reports that have to be made are done so quickly and in writing to the nescessary body.

To summarise, here are some do's and dont's for officials.

## Do's

Have a complete knowledge of the rules of the game. Gain experience in the practical application of the rules.

Study the game.
Study your fellow officials
Keep cheerful.
Cultivate humility and tolerance
Give credit where credit is due, use tact.
Be Co-operative, be considerate of players and coaches
Be sincere and honest, demonstrate courage.
Display speed of mind and of foot.
Be oblivious of pressures from sidelines and the stand,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Don't

Don't take your eyes off the play (too many officials are spectators).

Don't take anything for granted.

Don't explain decisions during the match (you can only lose not win).

Don't argue with players or coach.

Don't talk back to spectators or get involved (concentrate on the court).

Don't look for trouble (anticipate if and save the game).

Don't make decisions for your partner (only help when he needs help).

Don't officiate without proper equipment.

Don't hold conversations with players (this may be misunderstood).

Don't stand only on rupee.

Don't expect the game to go as you want it (that takes hard work).

Don't forget. you may be wrong!!

Don't be a destructive critic.

Don't boast or hog the game.

Don't be a trouble maker.

Don't seek the limelight.

**C. S. Arulpiragasam**
Lecturer in Physical Education.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## NETBALL TEAM



## KABBADI TEAM



| 19. | MISS. P. U. N. N. DIAS | Mahalapithanya Werhana Beddegama. |
| 20. | MR. S. P. UYANGODA | Kapila Themnapitawatta, Nawiniana North, Matara. |
| 21. | MISS. C. LIYANAPATHIRANA | Weluwa, Athudawa Palatuwa, Matara. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SOME SCENES........ IN THE COLLEGE



G. T. Z. Cordinator Mr. Muller is handing over Water Supply -Documents to our President.




The Member of parliment for wanni District Mr. S. Shanmuganathan is handing over the key of our college bus to our President.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ANNUAL INTER HOUSE SPORTS MEET



Asst. Supt. of Police is lighting the Olympic Torch



Government Agent of Vavuniya Mr. K. Ganesh is giving a Message of Blessing.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr. Thurai Thiyagarajah (R. D. E. Vavuniya) is received with full honours.



Our President is offered a warm and hearty Welcome.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



A Wonderful Display of Drill



President Addressing in the Sportsmeet before the awards Ceremony

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ND ANNIVERSARY



Government Agent of Vavuniya lighting the lamp at the ceremony.




Honoured Guests - On Stage.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Laying of Foundation Stone to the College Mosque.



Laying of Foundation Stone to the College Church

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



College Hindu Temple
'Kannaki Amman's Statue"



Opening Ceremony of the College 'Bhudhu Methura' 1996-01-27

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதித் துளி

ப. ஞானராஜ் (இளங்கோ)
1ம் வருடம்
உடற்கல்விப் பிரிவு

## அவலத்தில் தோய்ந்த அமைதி

அமைதித்துளிகளைத் தேடித்திரிகிறான் மனிதன். ஆனால் அவலத்துளிகளும் அவன் வாழ்வில் கலந்து விடுவதுண்டு. இரண்டும் ஒன்றோடொன்று இரண்டறக்கலந்து வாழ்வு என்னும் ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. நேசிக்கவும் நேசிக்கப்படவும் ஏங்குகிறது மனித இதயம். அது தான் மனித இதயத்தின் அடிப்படைத் தேவை. அந்தப் பிணைப்பிலே அமைதித்துளியை அனுபவிக்கையில் தன்னை வெறுப்பவர்களும், தான் வெறுப்பவர்களும் அவனது உணர்ச்சி நிலையினுள் புகுந்து அவலத் துளியைக் கலந்து விடுவதுண்டு. ஆனால் இரண்டும் அவனது உணர்ச்சிச் சமநிலைக்கும், வளர்ச்சிக்கும், முதிர்ச்சிக்கும் இன்றியமையாதனவாகும்.

ஒன்றித்து வாழவும் ஒருமனப்பட்டிருக்கவும் ஏங்குகிறது மனித உள்ளம். உற்சாகம் ஊட்டி உதவிக்கரம் கொடுத்து மற்றவர் தன்னை வாழ வைக்கும்போது, தானும் மற்றவரை வாழ வைக்கும்போதும் அமைதித்துளியை அனுபவிக்கிறான். ஆனால் தன் வாழ்வுக்குக் குறுக்கே நிற்பவர்களும், தான் குறுக்கே நிற்கும் சூழ்நிலைகளும் அவனது சேவை மனப் பான்மையைக் குலைத்து, அவலத்துளியை கலந்து விடுவதுண்டு. ஆனால் இரண்டும் அவனது தளராத சேவை மனப்பான்மைக்கும் மனவுறுதிக்கும் இன்றியமையாதனவாகும்.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்பது ஒவ்வொரு மனிதனின் தணியாத ஆசையாகும். தான்வாழ மற்றவர் தனக்கு அழைப்பு விடும்போது மற்றவர் வாழ தானும் அழைப்பு விடும்போது அமைதித்துளியை அனுபவிக்கிறான். ஆனால் தன்னை மாண்டுமடியச் சொல்பவர்களும், தானும் அப்படி மற்றவர்க்குச் சொல்ல வேண்டிய சூழ்நிலைகளும் அவனது இலட்சிய வாழ்வில் புகுந்து அவலத்துளியைக் கலந்து விடுவதுண்டு. ஆனால் இரண்டும் அவனது இலட்சிய வாழ்வுக்கும் அனைவரின் நல்வாழ்விற்கான அயரா உழைப்புக்கும் இன்றியமையாதனவாகும். ஆகவே அமைதித்துளிகளாலும் அவலத்துளிகளாலும் மனிதனது உணர்ச்சி நிலை, இலட்சிய வாழ்வு, சேவை மனப்பான்மை போன்றன பதப்படுகிறது. வசமான நிலைகள் கட்டுப் படா ஆசைகள், தேவைகளின் பயன்கள், வெறுப்பின் கொடூரம், தன்னம்பிக்கைத் தளர்ச்சி போன்ற உளவியல் பொருளாதார சமுதாய சரீர நிலைகளின் நடுவே அமைதி அடங்கி இருக்கின்றது. அலைமோதும் மேற்பரப்பிற்கு மனிதனின் உணர்ச்சிவசமாகும் நிலையைக் குறிப்பிடலாம். அதாவது ஆத்திரம், கோபம், வெறுப்பு, பாசம், சந்தேகம் போன்றன நடமாடும் மீனின் வர்க்கத்திற்கு மனிதனின் தீய மனநிலைகளை ஒப்பிடலாம். அகங்காரம், தற்பெருமை, ஆணவம், தன்னலம் பொறாமை, தன்னைமட்டும் நீதிமானாக்கல் போன்றன.

கற்பாறையும் சேறும் உள்ள பகுதிக்கு அவன் கொண்டிருக்கக்கூடாத உள நிலைக்கு ஒப்பிடலாம். அதாவது அவன் ஏற்க வேண்டிய சில விடயங்களை ஏற்கமறுத்து, கற்பாறையைப் போன்ற இதயக் கடினத்தோடு இருக்கலாம். அன்றேல் நல்லதையும் நாசமாக்கும் சேறாக இருக்கலாம். அன்றேல் நல்லவற்றைத் தன்னோடு தொடர்பு கொள்ளவிடாது உதறித்தள்ளும் முள்ளாக இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பியின் மேற்பரப்புக்கு எதிர்ப்பையும் சமாளிக்கக் கூடிய உளவன்மையும். இடம் பெயர்ந்து அசைய வேண்டிய இடத்தில் அதற்கும் தயாராக இருக்க வேண்டிய மனநிலைக்கு ஒப்பிடலாம். தாக்குதல்கள் ஏற்படும்போது அசைந்து வளைந்து கொடுப்பதும் முக்கியமாகும். அன்றேல் சடுதியான முறிவு தகர்வுகள் ஏற்படக்கூடும்.

## அன்றாட வாழ்வில் அமைதி நிலைகள்.

ஆண்டவனின் முன்னிலையில் வேண்டி நிற்கும்போது அமைதி எடுத்த இலட்சியம் நிறைவேறுவதில் அமைதி! முயற்சியால் கிடைத்த பணத்தில் அமைதி! பாராட்டுவதிலும் பாராட்டப்படுவதிலும் அமைதி! கிடைத்த வெகுமானத்தில் அமைதி! பெற்ற பதவியில் அமைதி! அன்பு செய்வதில் அமைதி! நேசிக்கப்படுவதில் அமைதி! கொடுப்பதில் அமைதி! பெறுவதில் அமைதி! எதிர்ப்பதில் அமைதி! விட்டுக்கொடுப்பதில் அமைதி! பொறுமையில் அமைதி! விடுதலைப் போராட்டத்தில் அமைதி! மன்னிப்பதில் அமைதி! மன்னிப்பு பெறுவதில் அமைதி! உற்ற நண்பர்களின் கூட்டத்தில் அமைதி! பெற்ற துணைவன் துணைவியின் அரவணைப்பில் அமைதி! கடமை கண்ணியம் கட்டுப்பாட்டில் அமைதி! எமது திறன் ஆற்றலில் அமைதி!....................!

## கண்ணீர்க் கடலுள் பன்னீர் புன்னகை

மனிதன் நம்பிக்கையும் கனவுகளும் நிறைந்தவன். இறந்த காலமும் எதிர்காலமும் அவனைத் தாங்கிப் பிடிக்கும் இரு கரங்கள். அழகால் ஆச்சரியப்படுபவனும், அநீதியால் குமுறி எழுபவனும், அழகையும் ஒழுங்கையும் மேம்படுத்துபவனும் மனிதனே. அமைதியும் அவலமும், சுகமும் துக்கமும், இன்பமும் துன்பமும், சாந்தமும் கோபமும், சிரிப்பும் கண்ணீரும், அன்பும் வெறுப்பும், அழைப்பும் புறக்கணிப்பும், ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து பல துளிகளாக ஊற்றெடுத்து ஆறுபோல் ஓடி, ஈற்றில் இறைவனோடு சங்கமமாவது தான் மனித வாழ்வு.

"வாழ்வு என்பது தாயின் உதரத்தில் தொடங்குவதுமல்ல: புதை குழியில் மடிவதுமல்ல. அது நித்திய வாழ்விலே ஒரு கணமாகும்." என்கிறார் ஒரு அறிஞர். மனிதனின் அன்றாட வாழ்வு பல துன்பதுயரங்கள், கவலைகள், சஞ்சலங்கள், பிரச்சனைகள் நிறைந்தன. ஆனால் அவற்றின் மத்தியிலும் மனித புத்திக்கும் சக்திக்கும் அப்பாற்பட்ட எதிர்பாராத அமைதிக் கணங்கள், சாந்த உணர்ச்சி நிலைகள், உயர்ந்த இலட்சியங்கள், தியாக சேவைச் சிந்தனைகள் அவனது உள்ளத்தைத் தொடுவதுண்டு. உள்ளத்தைத் தொட்டு ஓய்வும் அமைதியும் சாந்தமும் கொடுத்துச் செல்வதுண்டு. அத்தகைய அமைதித்துளிகள் இன்றேல் வாழ்வு நிச்சயமாக கசந்துவிடும். அவை இடைக்கிடையே மனித உள்ளத்தைத் தொட்டு நனைத்துக் கசிவாக்கி அவனது வெறுப்புணர்ச்சிகள், மந்த சிந்தனைகள், பிரச்சனைகள் போன்ற தீய சார்புகளோடு போரிட்டு புது மெருகூட்டி வாழ்வை மேலும் உறுதியளித்துச் செல்வதுண்டு. அவலத் துளிகள் இன்றேல் அமைதித்துளியை அனுபவிக்க முடியாது. அமைதித்துளிகள் மனித உள்ளத்தில் ஊற்றெடுக்க இன்றியமையாதனவாய் இருப்பன நோய், சாவு, பிரிவு, வறுமை, தனிமை போன்ற அவலத்துளிகளாகும். மனித உதடுகளில் தவழும் புன்சிரிப்பில் எவ்வளவு ஆழம் இருக்கிறதோ, அதிலும் பார்க்க கவலையில் சொட்டும் கண்ணீரில் அதிக ஆழம் உண்டு.

அமைதியின்றி முற்றாகவே அல்லற்படும் மானிடம் எவனும் இவ்வுலகில் இல்லை. ஆனால் அந்த அமைதியைக் கண்டுபிடியாத மானிடர் கோடான கோடி ஆழ்கடலின் நடுவே குமுறியெழும் அலைகள் நடுவிலும், திமிங்கலம் போன்ற பெரிய மீனின் வர்க்கத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாட்டத்தின் இடையிலும், சேறும் முள்ளும் கல்லும் நிறைந்த நீரமுக்கத்தின் மத்தியிலும், அழுக்கு நிறைந்த சிற்பியினுள்ளே முத்து அமைதியாக உறங்கிக் கிடக்கிறது. மனித உள்ளத்தின் அமைதியும் இதே போன்றதுதான்.

## உண்மை அமைதியின் அடித்தளம்

தன்னறிவும் தூய கருத்துமே உண்மை அமைதிக்கு அடித்தளமாகும். தன்னறிவு என்பது ஒருவன் முதலில் தன்னையும், தன்வரையறைகளையும், சூழ்நிலையையும் ஏற்றுக் கொள்வதில் தங்கியுள்ளது. ஒருவன் தன்னை ஏற்றுக் கொள்ளாத நிலையில் தான் மனமடிவும் மனக் குழப்பமும், உளவியல் பிரச்சனைகளும் ஏற்படுகின்றன. இயற்கை வாழ்வில் இருந்து பிரிந்து செயற்கை வாழ்வின் போலி வேடங்களைத் தரிக்கும் நிலை உருவாகுவதும் ஒருவன் தான் தன்னை ஏற்க மறுப்பதினாற்றான்.

ஒருவன் தன்னிடமிருந்து தானே பிரிந்து தப்பியோடி போலி வேடங்களை அணிந்து கொள்ளக்கூடாது. அமைதியற்ற சூழ்நிலைகளிற்கூட அமைதியைக் காணும் ஒரு புகலிடமாக ஒருவனது உள்ளம் மாறவேண்டுமே தவிர தப்பியோடும் சிறைச்சாலையாக அது அமையக் கூடாது. ஆகவே மனிதன் தன்னை பல்வேறு போலிவேடங்களிலிருந்து விடுதலையாக்க வேண்டும். அறிவு வளர்ந்து கொண்டு போகும்போது கூட அந்த அறிவு நிலைக்கான போலி வேடங்களை மனிதன் அணிந்து கொள்வதுண்டு.

அடுத்து மனிதனின் வாழ்வில் தேவைப்படுவது தூயகருத்தாகும். அது அவனது சிந்தனை, சொல், செயல்களிற் பிரதிபலிக்க வேண்டும். பல்வேறு தீய சார்புகள், மனநிலைகள், நோக்கங்கள், வாழ்வைப்பற்றிய தூய கண்ணோட்டத்தை மங்க வைக்கின்றன. தெளிவாக சிந்திக்க முடியாமல், பிறரோடு இனிமையாகப் பழகவும் முடியாத ஒரு கடினமான நிலை உருவாகி வருவதுண்டு. அத்தகைய சூழ்நிலையில் மனிதன் தனது சிந்தனை, சொல், செயல், போன்றவற்றில் தூய்மையையும் கனிவையும் இனிமையையும் புகுத்தக் கடமைப்பட்டுள்ளான்.

## அறிவெல்லாம் கடந்த இறையமைதி

மானிட உள்ளத்தில் அமைதிக்கு கடவுளின் பங்கென்ன? எத்தகைய அமைதியை கடவுள் மனித உள்ளத்துக்கு அளிக்கிறார்? மானிட உள்ளத்து அமைதிக்கு கடவுள் தேவை தானா? என்று வினவாத உள்ளம் இவ்வுலகில் இல்லை. சுருங்கச் சொன்னால் இறைபராமரிப்பிலும் இறைசித்தத்திலும், இறைபிரசன்னத்திலும் மனித அறிவுக்கு அப்பாற்பட்ட அமைதியை அனுபவியாத உள்ளங்கள் இல்லை. என்றே சொல்லலாம். சில வேளையில் ஒரு உள்ளம் அனுபவிக்கும் அமைதி இறைவனிடமிருந்து வருகிறது என்று அந்த உள்ளம் உணராமலிருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியான ஒரு இயற்கைக் காட்சியின் நடுவே நின்று கொண்டிருக்கும் போது அந்த அமைதியை அனுபவிக்கலாம். தூய்மையான சிந்தனைகள் உள்ளத்தில் தவழ்ந்து கொண்டிருக்கும்போது அதை அனுபவிக்காலம். தேவையற்ற கலக்கங்கள், சஞ்சலங்கள், கலக்கங்கள் இல்லாத மனநிலையோடு இருக்கும்போது அதை அனுபவிக்கலாம். இவையெல்லாம் இறையமைதியின் சாயல்கள். எமது அன்றாட வாழ்வில் எவ்வளவோ அடிக்கடி எமது உள்ளத்தை இறைவன்பால் உயர்த்த முயற்சிக்கிறோமோ அவ்வளவிற்கு இந்த இறையமைதியின் சாயல்கள் எம் உள்ளத்தை தொட்டுச் செல்லும். அன்பிற்கும் அமைதிக்கும் சமாதானத்துக்கும் ஊற்றாகிய கடவுளின் அமைதியில் மனித ஆவி பங்கு கொள்ளும் ஒரு நிலையை எவரும் அறிந்து கொள்ளலாம். உலக பந்த பாசங்களால், சுகபோகங்களால் நிறைவுபெறாது ஏங்கித் தவிக்கின்றன மனித உள்ளங்கள். அந்த ஏக்கத்தினதும் தவிப்பினதும் அழுக்கத்திலே மனித ஆவி உறவைத் தேடி அலைகிறது. அந்த ஆவியின் பயணத்தில் ஆழமானதொரு சக்தியை மனித ஆவி சந்திக்கவே செய்யும். அந்த சந்திப்பில் சங்கமமாவதுதான் இறையமைதி என்பதாகும்.

அமைதியை அறிவில் தேடினேன் : ஈற்றில் நான்
கண்டது தெளிவற்ற மயக்கம்
அமைதியை உல்லாசத்தில் தேடினேன் : ஈற்றில் நான்
கண்டது களைப்பும் சோர்வும்
அமைதியை சம்பாத்தியத்தில் தேடினேன் : ஈற்றில் நான்
கண்டது ஏக்கமும் பயமும்
அமைதியை உடலின்பத்தில் தேடினேன் : ஈற்றில் நான்
கண்டது வெறுமையும் நிலையாமையும்

அப்படியானால் அமைதியை நான் எங்கே தேடப் போகிறேன்............? இறைவனில் தான்......

மனிதனுக்கு மன அமைதியை தருவது தான் மதத்தின் அடிப்படை இலட்சியமாகும்.

-விவேகானந்தர்

மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

-விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய சந்ததி

செ. சுவர்ணா. லோகு
2ம் வருடம்
உடற்கல்விப் பிரிவு

உள்ளத்தில் ஒன்றும் உதட்டினில் ஒன்றும்
உரைப்பவரல்லர் நாங்கள் - நிதம்
நல்லதை எண்ணி நல்லதைச் செய்யும்
நாளைய சந்ததி நாங்கள்

நடந்ததை எண்ணி நாளுமே நெஞ்சு
நடுங்குவோரல்லர் நாங்கள் - நாளை
நடப்பதை எண்ணி நல்வழி செல்லும்
நாளைய சந்ததி நாங்கள்

அடுத்தவர் சொத்தில் ஆசைகள் வைத்து
அபகரிப்போரல்லர் நாங்கள் - வாடும்
நடுத்தெரு ஏழை நலம்பெறச் செய்யும்
நாளைய சந்ததி நாங்கள்

சுயநலத்தோடு சுகமுடன் வாழும்
சுகபோகியரல்லர் - நாங்கள்
அந்நியர் படும் துயர் நிவர்த்தி செய்கின்ற
நாளைய சந்ததி நாங்கள்

கூட்டினில் வாழும் குருவிகளுக்கும்
கல்லெறிவோரல்லர் நாங்கள் - தாய்
நாட்டுயர்வுக்காய் நடைபோடுகின்ற
நாளைய சந்ததி நாங்கள்.

---

மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரணத் தன்மையை வெளிப்படுத்துவதுதான் கல்வியாகும்.

-விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ශිෂ්‍යයන් තුළ සමබර පෞරුෂයක් වර්ධනය කිරීම

රේණුක නිලන්ත රත්නායක.
2 වන වසර

සෑම පුද්ගලයකු සතුවම ඔහුටම ආවේණික වූ සුවිශේෂ පෞරුෂයක් ඇත. පොදුබව තුළ සුවිශේෂත්වයක් තිබීම නිසා සෑම පුද්ගලයකුම තවත් පුද්ගලයෙකුගෙන් වෙනස් වේ. මෙම තත්වයට හේතු කාරක වන්නේ සෑම පුද්ගලයකුගේම වර්ධනයට බල පාන විවිධ හේතු සාධකවල ඇති වෙනස්කම් නිසාය. දරුවෙක් හදවඩා ගැනීමේහි යෙදෙන දෙමව්පියන්ගේත් වැඩිහිටියන්ගේත් ප්‍රධාන කාර්යභාරය වන්නේ ඒ ඒ පුද්ගලයා තුළ තිබෙන පෞරුෂ ලක්ෂණ හඳුනාගෙන ඒවා වැඩි දියුණු කරලීමට කටයුතු යෙදීමයි

දරුවකු හදවඩා ගැනීමේදී සෑමවිටම අප උත්සාහ දැරිය යුත්තේ සමබර පෞරුෂයකින් යුක්ත දරුවෙකු හදවඩා ගැනීමටයි. කායික, මානසික, සමාජමය හා චිත්තවේගික යන සෑම අංශයකම සමතුලිතතාවයක් ඇතිකර ලීමට කටයුතු යෙදිය යුතුවේ. මින් එක් අංශයක හෝ ඌන වර්ධනයක් සිදුවේ නම් සමබර පෞරුෂ වර්ධනයට ඉන් හානියක් සිදුවේ. දරුවා තුළ සමබර පෞරුෂයක් වර්ධනය වී ඇත්නම් ඔහුගේ පැවැත්ම ශක්තිමත් වේ. සෑම අංශයකම සමාන ක්‍රියාකාරීත්වයක් සිදුවේ. මේ නිසා අධ්‍යාපන කාර්යයන්හිත් සමාජ සම්බන්ධතා පැවැත්වීමෙහිත් අනාගතයේදී සමබර ජීවිතයක් ගෙනයාමටත් රුකුලක් ලැබේ.

කායික සමබරතාවය වර්ධනය කිරීම පුද්ගල පෞරුෂ වර්ධනයේදී ප්‍රබලම සාධකයකි. ඒ ඒ වයසේදී සාමාන්‍ය මට්ටමේ දරුවකු තුළ තිබිය යුතු උස බර යන සෑම අංශයක්ම ගැනම සැලකිලිමත්වීම ගුරුවරයාගේ වගකීමකි. කායික ඉන්ද්‍රිය පද්ධතියේ දුබලතා ඇතිවුවොත් කායික සමබරතාවය නොරුකේ. එබැවින් ගුරුවරයා මේ පිළිබඳව වඩාත් උනන්දු විය යුතුය.

බුද්ධිමය සමබරතාවය ද පෞරුෂ වර්ධනයේදී වැදගත් සාධකයක් වේ. මොළයේ පිහිටීම, මධ්‍ය ස්නායු පද්ධතියේ මනා ක්‍රියාකාරීත්වය යන මේ සියල්ල බුද්ධි සංවර්ධනයට කායික අංශයෙන් ලැබෙන සහාය වේ. පන්ති කාමරයක් තුළ විවිධ බුද්ධි මට්ටම්වලට අදාල සිසුන් සිටිය හැක. එවැනි සිසුන් පිළිබඳ හොඳින් අවබෝධ කොටගෙන ශිෂ්‍යයාට පළපුරුදු දන්නා දෙයින් ඉගැන්වීම ආරම්භ කළ යුතුය. එසේම සෑම ශිෂ්‍යයෙකුටම යම් කිසි ප්‍රමාණයක උත්සාහයක් දැරීමට ද අභියෝග බාර ගැනීමටද ඉඩ තිබිය යුතුය. එනිසා ගුරුවරයා බුද්ධි දක්ෂතාවයට බුද්ධි මට්ටමට අනුව ශිෂ්‍යයාට අභියෝග ඉදිරිපත් කිරීමට ද අවශ්‍ය වේ.

පංතිකාමරයේ සිටින සෑම ශිෂ්‍යයෙකුම චිත්තවේගී සමබරතාව ඇතිවූ වැඩෙන්නට මග සැළසීම ද ගුරුවරයා උත්සාහ ගත යුතුවේ. දුක, කෝපය, තරහා, ශෝකය, වෛරය ක්‍රෝධය, බිය යන මේ සෑම අහිතකර සාධකයක්ම පෞරුෂ දුබල කරන මනස අක්‍රිය කරන අසමබර කරන සාධකයන්ය. මේ අහිතකර චිත්තවේගික වර්ධනය වන අවස්ථා අඩුකරලීමටත් හිතකර චිත්තවේග තත්වයන් වර්ධනය වන අවස්ථා වැඩිකරලීමටත්

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ඉගෙනුම් ඉගැන්වීම් ක්‍රියාවලිය සංවිධානය කළ යුතුවේ. චිත්තවේග පාලනයට උචිත අන්දමට ජය පරාජය බුක්ති විඳීමට අවස්ථා ලබාදීම අන් අයගේ ජයග්‍රහණයකදී සතුටු වීමට අවස්ථාව දීම තමාට පරාජයක් ඇති වූ විට මැදහත් සිතින් එය ඉවසීමට පුරුදු වීම යන ගුණාංග වර්ධනය කිරීමට ඉගෙනුම් ඉගැන්වීම් ක්‍රියාවලිය සංවිධානය කළ යුත්වේ.

සමබර පෞරුෂයක් වර්ධනය කිරීමේදී චිත්තවේගික සමබරතාවය ඉතා වැදගත්ය එවිට අනාගතයේ කවර ගැටළුවක් බාධවක් අපහසුතාවයක් ඇතිවුවද එයට සමබර මනසකින් ඔරොත්තු දීමේ හැකියාවක් ශිෂ්‍යයා තුළ වැඩේ. සාර්ථක ජීවිතයක් ගෙවිය හැක්කේ චිත්තවේග සංවර්ධනය ඇතිකරගත් පුද්ගලයකුටය. ඉක්මනින් නොකිපෙයි. හදිසි තීරණ නොගනියි. හැඟීම්වලින් ක්‍රියා නොකරයි. ගැටළු අවස්ථාවන්ට මුහුණ දුන් කල්හි නොසැලෙයි. මේ නිසා ජීවන ගමනේදී කවර දුක් කම්කටොළු බාධක පැමිණියද එයට සාර්ථකව මුහුණ දී ජීවිත ගමන තෘප්තිමත්ව නිම කරයි.

සමාජ සංවර්ධනයේ සමබරතාවය නංවාලීමද සමබර පෞරුෂයක් වර්ධනය කිරීමේදී ඉතා වැදගත්ය. සමාජශීලිබව සමාජයට කැමති වීම. ආත්මාර්ථකාමිබව අඩුබව පරාර්ථකාමිබව වැඩිවීම. සමාජ කාර්යනට ඉදිරිපත්වීම. සමාජයට උදව්කරන අයෙකු වීම. යන ලක්ෂණ සමාජ සංවර්ධනය ඇති සමබර පෞරුෂයක් ලක්ෂණ වේ. එවන් සමාජශීලි සංවර්ධනයක් ඇති පෞරුෂයක් ගොඩනැගීමට ගුරුවරයා උත්සාහ ගතයුතුය.

සාර්ථක සමාජ ජීවිතයක් ගත කිරීමට විෂය ප්‍රවීනත්වය අවශ්‍යම නොවේ. ඒ සඳහා සමාජ කුසලතා ද තිබිය යුතුය. ඇතැම්විට ඉහලින් සමත්ව ප්‍රවීණත්වය දැක්වූ සිසුන් ද සමාජ සම්බන්ධතාවලදී අසාර්ථක විය හැකිය. එනිසා සමාජ කුසලතා වර්ධනය කර ගැනීමට විෂය ක්‍රියාකාරකම්වලදී මෙන්ම විෂය සමගාමී ක්‍රියාකාරකම්වලදී ද අවස්ථා මතුකරදීම ඉතාමනට අවශ්‍යය.

සෑම ශිෂ්‍යයෙකුටම යහපත් සමාජ ජීවිතයක් ගෙවීමට සමබර ජීවිතයක් ගෙවීමට මං සළසාදීම ගුරුවරයාගේ කාර්‍යය භාරයයි. මේ නිසා ශිෂ්‍යයන් තුළ සැඟවී ඇති දක්ෂතා මතුකොට ඔපදමා සතුටින් තම පාසල් කාලය ගෙවීමටත් අනාගතයේදී සාර්ථක සමාජ ජීවිතයක් ගත කිරීමටත් උචිත ලෙස සමබර පෞරුෂයක් වර්ධනය කරලීමට සෑම ගුරුවරයකුම උත්සාහ ගැනීම ඉතාම අවශ්‍යවේ. තම වෘත්තිය කාර්යභාරය සාර්ථකව ඉටුකළේ යයි ගුරුවරයාට තෘප්තිමත් විය හැක්කේ එවිටයි.

ආශ්‍රිත ග්‍රන්ථ

- කොළඹ විශ්ව විද්‍යාලයේ දයා රෝහණ අතුකෝරල මහතාගේ ලිපි.
- දුරස්ථ අධ්‍යාපන ආයතනයේ මොඩියුල.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# නොදෙවෙනි සෙනෙහස...

ප්‍රභාත් තුෂාර හපුගොඩ.
2 වන වසර
සිංහල අධ්‍යාපන අංශය.

නෙක ලෙසින් තරු කැළක්
අහසෙ සැරි සැරුවාට
නෙත නිවන හිත නිවන
සුමුදු සඳ විය හැකිද........?
එයින් එක තරුවකට

රුවට දිලෙමින් අවට
නෙක උයන් සැරසුවට
සියපතක් වී නිබඳ
මධ ගොහොරු සරසන්න
හැකිවේද...............?
එයින් එක කුසුමකට

නියං සම එළඹී සඳ
ගස් කොලන් වියලි කර
මුළු දියම සිඳුවාට
නිබඳ එක ලෙස හඩන
මහ සයුර සිඳලන්න
හැකිවේද...............?
එයින් එක තියගකට

බොළඳ බස් තෙපළමින්
තුරුණු සිත රවටමින්
ළඟින් සිටියද නිබඳ
දුකේදී එකට හිඳ
සැපේදී තුටු වන්න
අම්මාට හැර මෙලොව
හැකිවේද................?
කිසිවෙකුට

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FIRST DAY

P. RAJITHA
1st Year
Science

WHEN we were born in the earth - First
we cried for our breathing
but our mothers happy
to shake off their sterile curse

WHEN we realised our parents - First
we felt happiness with their love

WHEN we understood the God's power - First
we felt devotional feeling

WHEN we showed the natural - First
we felt glamorous mood with rejocing

WHEN we got the result of our exam - First
we felt happiness and woe
happiness for the result
woe for the future

WHEN we reached here - First
we felt lonly
to leave our relation

IN THAT NEW PLACE

Every one seeked for familier face
But no one could not see - then
Every faces had full of anxiously
To know each of the crowd

AT THAT MOMENT

Three of them whose standed near
Turned their faces to look each other
Their lips pestil bloomed with smile
A Friendship born between them

IT IS KEEPING ON
IT WILL BE KEEPING ON (With God Help)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையும் ஆன்மீகமும்

பாமினி பாலசுந்தரம்
1ம் வருடம்
விஞ்ஞானம்

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்ற பொன்மொழிக்கிணங்க இவ்வுலகத்தில் பெறுதற்கரிய பிறவியான மானிடப்பிறவியை எடுத்த நாம் அன்றுதொட்டு இன்றுவரை வாழ்க்கையில் பலவகையான பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்து வருகிறோம். இப்பிரச்சனைகள் காரணமாக மனித வாழ்க்கை சலனப்பட்டாலும் இவ்வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்த ஆன்மீகம் காரணமாக அவன் உறுதியோடும் நம்பிக்கையோடும் தனது வாழ்க்கைச் சக்கரத்தை நகர்த்துகிறான்.

மனிதன் தன்வாழ்க்கையைச் செம்மைப்படுத்த "மதம்" என்ற வாழ்க்கை நெறியைப் பின்பற்றுகிறான். அதாவது வாழ்க்கையை சமனிலையில் நோக்கும் மனத் திண்மையை இந்துமதம் அளிக்கிறது. கடவுள் இருக்கிறாரா இல்லையா என்ற விவாதம் மனிதனுக்கு வினவத்தெரித்த காலந்தொட்டு நடைபெற்றுவருகிற ஒன்று. இந்த விவாதத்திற்கு முடிவிருக்க வேண்டிய நியாயம் இல்லை. ஏன் அவசியமும் இல்லை. பயனில்லாத எதையும் மனித சமுதாயம் நீடித்துப் போற்றி வந்தது கிடையாது. காலகாலமாக மக்கள் இறைவனிடம் அன்பு செலுத்தியும், ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டும் வந்திருக்கிறார்கள் என்கின்ற ஒன்றே. கடவுள் தேவையை மனித சமுதாயம் ஏற்றுக் கொண்டுவிட்டது என்பதற்குப் போதுமான சான்றாகும்.

வாழ்க்கையில் நம்பிக்கை இழந்தவர்கள் ஆண்டவனிடம் நம்பிக்கை வைக்கும்போது புதிய பலம் பெறுகிறார்கள். அந்தப்பலமே வாழ்வதற்கான புதிய காரணத்தை அவர்களுக்கு உண்டாக்கிவிடுகிறது. ஆகவேதான் நம்முடைய மகான்களும், மகாத்மாக்களும் தெய்வ நம்பிக்கையை வாழ்க்கையில் அடித்தளமாக்கினார்கள். கடவுளை நம்பாவிட்டால் வாழ்க்கை இல்லை. ஆகவேதான் நம்முடைய முன்னோர்கள் "நம்பினோர் கெடுவதில்லை இது நான்கு மறைத் தீர்ப்பு" என்று கூறினர். ஆண்டவனிடம் நம்பிக்கை வைக்கும் மனிதன் சோர்வை நீக்குகிறான். வாழ்க்கையைத் துணிவோடு நோக்கும் மனத்திண்மையைப் பெறுகிறான். நம்பிக்கையில் சலனம் ஏற்பட்டால் மனம் பலவீனம் அடைகிறது. பலவீனமான மனிதன் எதனையும் சாதிக்க முடியாது. கடவுளிடத்தில் நம்பிக்கை கொள்ள வழிபாடும் பிரார்த்தனையும் அவசியம். தெய்வ நம்பிக்கையாலும், பிரார்த்தனையாலும் சமுதாயச் செயல்திறம் (Social Efficiency) மிகுதியாகிறது என்பது உண்மை. தெய்வ நம்பிக்கை உடையவர்கள் வாழ்க்கையைப் பாரமாக் கருதுவதில்லை. எந்தப் பாரத்தையும் ஆண்டவன் என்கின்ற சுமைதாங்கியின் மீது இறக்கி வைத்து விட்டு அவர்கள் நிம்மதியாக இருப்பர். நம்பிக்கைதான் மனித இனத்தின் ஊன்றுகோல்.

பிரார்த்தனை என்பது ஒரு ஆன்மீக அனுபவம். அனுபவ இன்பத்தை வார்த்தைகளால் மட்டும் உணர்த்திவிட முடியாது. இறைவனது நினைவோடு மனம் ஒன்றிக் கலக்கின்றபோது தெளிவற்ற நெஞ்சமும் தெளிவு பெறுகிறது. சலனமடைந்த உணர்ச்சிகள் நிலைபெறுகின்றன. மனப் போராட்டங்கள் அமைதி பட்டுச் சாந்தி கிடைக்கிறது. சாந்தி இல்லாத உள்ளத்தால் எதையும் சரியாக நிர்ணயிக்க முடியாது. இறைவனைத் தொழும்போது மனம் ஒருமைப்படுகிறது. மனம் ஒருமைப்பட்டுவிட்டால் செயல்வலிமை பெற்றதாகிவிடுகிறது. ஆண்டவனிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமைப்பட்ட மனத்தில் இருந்து அழுக்குகள் நீங்கிவிடுகின்றன. தூய உள்ளத்தோடு அன்றாடக் கடமைகள் தொடங்குபவன் நேரிய வாழ்க்கையில் நிலைக்களன் ஆகிறான். இறைவன் நம்மோடு இருக்கிறான் என்கிற எண்ணமே நமக்குப் பலமாக இருப்பதோடு குற்றங்களில் இருந்து நம்மைப் பாதுகாக்கும் அரணாகவும் அமைகிறது.

சராசரி மனிதன் தனது லௌகீக வாழ்க்கையில் உணர்ச்சிகளை அனுசரித்து வாழ வேண்டியவனே என்பதனை நமது இந்துமதம் உணர்ந்திருந்தது. ஆனால் இந்த உணர்ச்சிகள் இழிந்த நிலையில் செயல்படாமல் உன்னத நிலையை எட்டிப் பிடித்து உயர்ந்த வாழ்க்கைக்கு அடித்தளமாக அமைய வேண்டுமென இந்துமதம் வலியுறுத்துகிறது. அறிவின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட உணர்ச்சியினையும், உணர்ச்சிகளை உயர்ந்த நிலைக்கு கொண்டு செலுத்துகின்ற அறிவினையும் ஆன்மீக வாழ்வில் இரு கண்களாக மதித்து இந்துமதம் போற்றியது. பகுத்தறியும் திறத்தால் மகத்தான இயற்கையின் ரகசியங்களைக் கண்டறிந்த விஞ்ஞானிகள் கூட அந்த உண்மைகள் இறைவனின் பேராற்றலை விளக்குவதாக எண்ணி வியப்பில் மூழ்கி இருக்கிறார்கள். அணுத்தத்துவத்தைக் கண்ட மாபெரும் விஞ்ஞானி ஐன்ஸ்டைன் கூட இறைவனின் பேராற்றலை வியந்து பாராட்டினாரே தவிர மகத்தான அந்த விஞ்ஞான உண்மையைக் கண்டு தெளிந்த பிறகு அவர் நாஸ்திகராக மாறிவிடவில்லை.

மேலும் தவறு புரிகின்றபோது இடித்துரைக்கும் தன்மை படைத்தது மனச்சாட்சி உணர்ச்சி வழி தவறு நிகழ்ந்துவிடுகின்றபோது பண்பட்ட மனச்சாட்சி. தண்டிக்கும் நீதிபதியாகவும் செயற்படத் தயங்குவதில்லை. இன்னும் ஆழமாகச் சிந்தித்தால் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இறைவனின் குரலாக இருந்து மனச்சாட்சி ஒலிக்கிறது. மனிதனின் புறச்செயல்களை மட்டும்தான் சட்டத்தால் ஒழுங்குபடுத்த முடியும். அகச்சலனத்தை மனச் சாட்சியே ஒழுங்குபடுத்துகிறது. மனச்சாட்சிக்குப் பயன்படும் மனிதன் நியாயத்தின் பக்கம் நிற்கிறான். தீமையின் வலிமைக்கும், கவர்ச்சிக்கும் ஆட்படும் மனிதன், தன்னுடைய மனச்சாட்சியை முடமாக்குவதோடு அதன் விளைவாகச் சமுதாய ஒழுக்கத்திற்கும் ஊறு தேடுகிறான். தனி மனித செயல்களுக்கு வேலியாக அமையும் மனச்சாட்சி சமுதாய தர்மத்திற்கும் பாதுகாப்பாக அமைகிறது. எனவே தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்தும் இந்து மதத்தில் மனச்சாட்சி தெய்வக்குரலாக மதிக்கப்படுவதில் வியப்பில்லை.

நல்லதைச் செய்கின்றவன் இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்பதும், தீமையைச் செய்கின்றவன் அல்லல்களுக்கு ஆளாக வேண்டும். என்பதும் இயற்கையின் ஏற்பாடு. மல்லிகைத் தோட்டம் போட விரும்புகிறவன் கள்ளியைக் கொண்டுவந்து விதைக்கக் கூடாது. நட்டது தான் முளைக்கும். போட்டதைத்தான் எடுக்க முடியும்.

“தெய்வீக வாழ்க்கை வாழ்வது மோட்சம்
அதற்கு மாறாக வாழ்வது நரகம்”

இதுவே எமது இந்துமதம் உணர்த்தும் உண்மை. மோட்சம், நரகம் என்பதெல்லாம் வெறும் மனநிலைகளே.

ஆன்மீக வாழ்க்கையில் “தியானம்” முக்கிய இடம் பெறுகிறது. உலகியல் சிந்தனைகள் காரணமாக மனம் சலனமடைகிறது. அந்த மனத்தினைத் தியானத்தின் மூலம் ஒரு நிலைப்படுத்தி இறைவனை மட்டுமே சிந்தையில் கொள்ளச் செய்யலாம். அத்தகைய ஓர் அதீதமான வல்லமையைப் பெற்று விட்ட மனிதனை உலகியல் இன்ப துன்பங்கள் எந்தவிதமான பாதிப்பிற்கும் உள்ளாக்குவதில்லை. அமைதிகரமான, சலனமற்ற ஒருமுகப்பட்ட மனத்தைப் பெற்றவன் இன்பத்தையும், துன்பத்தையும் ஒரே நோக்கோடு காண்கிறான். இவ்வாறு தன் மன வலிமையால் பெரும் வல்லவனாக ஆகிவிடும் மனிதனால் சாதிக்க முடியாதசெயல் எதுவுமே இல்லை எனலாம்.

எனவே வாழ்க்கையை விட்டு ஒதுங்காமல் வாழ்க்கையின் சுகத்தை அனுபவித்துக் கொண்டே வாழ்க்கையின் குறிக்கோளை அடையும் மார்க்கத்தை எமது ஆன்மீக வாழ்க்கை உணர்த்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவு

**V. மோகனகுமாரி**
2ம் வருடம்
உடற்கல்விப் பிரிவு

கல்லூரி வளாகத்திலே
கண்டேன் பல மதிமுகம்
நண்பியே!
காணவில்லை அதில்
உந்தன் திருமுகம்!
காணவேண்டும் என்று
காத்திருந்தேன் பலநாளாய்
காணும் நாள் எப்போ வரும்!
பள்ளிப் பருவம் முதல்
பருவ மங்கையராய் நாம்
பார்ப்பவர் கண்ணிலெல்லாம்
சேர்ந்தே இருந்தோமே!
கல்லூரி வாழ்க்கைக்கும்
ஒன்றாகவே அடி வைத்தோமே
விதி இங்கு விளையாடிடவே
விக்கித்து நிற்கின்றேன் நான்!
நட்பு என்ற சொல்லுக்கு
பிரிவு என்ற பொருளுண்டு
என்று நான் அறிந்தது
நண்பியே,
உன் பிரிவால் தானே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ක්‍රීඩකයින්ගේ දක්ෂතා වර්ධනය කෙරෙහි බලපාන කරුණු

එච්. පියසේන පීරිස්.
වවුනියා අධ්‍යාපන විද්‍යා පීඨයේ.
ශාරීරික අධ්‍යාපනය පිළිබඳ කථිකාචාර්ය.

පොළවෙන් ලැබෙන වටිනා මැණික් ගලක්. දක්ෂ මැණික් කපන්නෙකුට හමුවූ විට පාය කපා ඔපදමා වටිනාකම වැඩි කළ හැක. එසේම ක්‍රීඩා හැකියාවන් උරුමකරගෙන උපදින පුද්ගලයෙකු දක්ෂ ක්‍රීඩකයෙකු කළ හැක්කේ දක්ෂ පුහුණුකරුවෙකුටය. එය කෙසේද? යත් දක්ෂ කේක් සාදන්නෙකු අවශ්‍ය අමුද්‍රව්‍ය හා තාපය නිසියාකාරව ලබාදී හොඳ කේක් ගෙඩියක් සාදනවා මෙන් ප්‍රවීන පුහුණුකරුවා ක්‍රීඩකයාගේ ශාරීරික හා මානසික අවශ්‍යතා නිසි පරිදි සපයමින් ඔහුගේ දක්ෂතා දියුණු කරයි. මේ සඳහා උපකාරී වන කරුණු රාශියක් ඇත.

ඔලිම්පික් සහ ලෝක වාර්තා බිඳෙමින් පවතින මෙවන් යුගයක ක්‍රීඩා කුසලතා වැඩිවීමට ක්‍රීඩා වෛද්‍ය විද්‍යාවෙන් ඉටුවූ සේවය අති විශාලය. බැලූ බැල්මට පුද්ගලයෙකු නිරෝගී ලෙස පෙනුනද ඔහු ක්‍රීඩා කිරීමට සුදුසුද යන්න සොයා ගැනීමට වෛද්‍ය පරීක්ෂණයකට භාජනය කළ යුතුය. මෙම මගින් ක්‍රීඩා කිරීමේදී හෘදය වස්තුවට හා පෙනහළු වලට ඇතිවන දැඩි පීඩනයට මුහුණ දිය හැකිද යන්න දැනගත හැක. එමෙන්ම ක්‍රීඩා කිරීමේදී සිදුවන අනතුරු සඳහාද ප්‍රථිකාර කළ හැක.

ක්‍රීඩකයින්ගේ ශාරීරික හැකියාවන් දියුණු කිරීමට මෙන්ම ඔවුන් සුදුසු ක්‍රීඩාවලට යොමු කිරීමටද ක්‍රීඩා වෛද්‍ය විද්‍යාවෙන් ලැබෙන පිටුවහල ඉමහත්ය. පුද්ගලයෙකුගේ පේශි තන්තු පරීක්ෂා කිරීමෙන් ඔහු පුහුණු කළ යුත්තේ කෙටි දුර ධාවනයටද, දිග දුර ධාවනයටද කියා කල් ඇතිව තීරණය කළ හැක. ලොව සෑම කෙනෙක්ම ශරීරයේ ව්‍යුහය අනුව එනඩොමෝෆි. මෙසොමෝෆි. එක්ටොමෝෆි යනුවෙන් කොටස් 3 කට බෙදිය හැක මෙම ශරීර ව්‍යුහයන් හඳුනාගෙන ඔවුනට සුදුසු කුමන ක්‍රීඩාවද යන්න තීරණය කර ඒ අනුව පුහුණු වීමෙන් වැඩි දක්ෂතාවයන් ලබා දිය හැක. එසේම ක්‍රීඩකයෙකුගේ කායික යෝග්‍යතාවයන්ගෙ දියුණුව ක්‍රීඩා දක්ෂතා කෙරෙහි බෙහෙවින් බලපානු ඇත. එම යෝග්‍යතාවයන් වන ශක්තිය. වේගය. දැරීමේ හැකියාව. නම්‍යතාවය. උලැඟිතාවය. ක්ෂණික බලය. ප්‍රතික්‍රියා වේගය. ස්නායු පේශී සමායෝජනය. සමබරතාවය. පරීක්ෂා කර බලා ඒවා දියුණු කළ හැක. එමෙන්ම දක්ෂ ක්‍රීඩකයෙකු වීමට මනා පෝෂණයක් තිබීම ඉතාම වැදගත්ය. හොඳ ක්‍රීඩකයෙකු වෙන්නම නම් හොඳ ආහාර පාන ඇති මුළුතැන් ගෙයක් සහිත නිවසක් දායද කොට උපදින්න යයි කියමනක් ඇත. මෙයින් ක්‍රීඩාව සඳහා පෝෂණයේ වැදගත්කම කියවේ.

තාක්ෂණික අතින් අද ලොව විශාල දියුණුවක් ලබා ඇත. මෙම දියුණුව ක්‍රීඩා කුසලතා වර්ධනයටද යොදාගෙන ඇත. කොම්පියුටරයට මෙහිදී . හිමිවන්නේ ප්‍රධාන ස්ථානයකි. ක්‍රීඩකයාගේ හෘදයේ. පෙනහළුවල. ක්‍රියාකාරීත්වය තරඟ වලදී පෙන්වූ දක්ෂතාවය. යනාදිය පිළිබඳව දැන ගැනීමටත් එම දක්ෂතා දියුණු කර ගැනීමට අවශ්‍ය කරුනුත වැඩ සටහන් සකස් කළ යුතු ආකාරය පිළිබඳවත් වටිනා උපදෙස් මෙම තාක්ෂණික මොලයෙන් ලබාගත හැක. තවද තරඟ විනිශ්චයේදී නියම දක්ෂයා කොම්පියුටරය ආධාරයෙන් තීරණය කළ හැක. ශාරීරික යෝග්‍යතාවයන් වර්ධනය කරගත හැකි උපකර්ණ වැඩි දක්ෂතා පෙන්වීමට හැකි පාවහන් කෘතිම ධාවන පථ පහසුකම් ඇති

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ක්‍රීඩාගාර යනාදිය අද බිහි වී ඇත. තවද සුළඟින් ඇතිවන බාධාවන්ගෙන් වැලකී ධාවන වේගය වැඩි කල හැකි. ක්‍රීඩා ඇඳුම් නිපදවා ඇත. දිගු හිස කෙස් ඇති අයට වඩා කෙටි හිසකෙස් ඇති අයට වේගයෙන දිවිය හැක. මේ නිසා ධාවන වේගය වැඩි කල හැකි හිස් වැසුම් පවා නිපදවීමට තාක්ෂණයේ පිහිටා ලැබී ඇත. ක්‍රීඩා මනෝ විද්‍යාව මගින්ද ක්‍රීඩකයින්ගේ දක්ෂතාවය වැඩි කිරීමට ඉමහත් සේවයක් ඉටුවේ. කය හා මනස කාසියක දෙපැත්ත මෙන් එකිනෙකාට බැඳී පවතී. සමහර ක්‍රීඩකයින ක්‍රීඩා පුහුණු කටයුතු වලදී කායික වශයෙන් ඉතා උසස් ලෙස පුහුණුවද මානසික වශයෙන් පුහුණුවක් නොලැබූ නිසා තරගවලදී පරාජයට පත් වී ඇත. ගෙදර දොර ප්‍රශ්න. ආර්ථික ප්‍රශ්න යනාදිය හේතු කොට ගෙන ක්‍රීඩකයාගේ මානසික තත්වය දුර්වල විය හැක. එබැවින් පුහුණුකරුවා ක්‍රීඩකයාගේ මානසික ස්වභාවය ගැන දැන ගත යුතුය. ක්‍රීඩා පිළිබඳව මානසික පුහුණුවේදී ආත්ම විශ්වාසය පිළිබඳ පුහුණුව ඉතාම වැදගත්ය. තමා පුහුණුවන ඉසව්වෙන් ජයග්‍රහණය කරන බව ක්‍රීඩකයා විසින් දැඩිසේ විශ්වාස කල යුතුයි. ලෝක ප්‍රකට බොක්සිං ශූර මොහොමඩ් අලි මම කවදා හෝ ලෝක බොක්සිං ශූරයා වනවා යයි කීවේය. ඇමෙරිකාවේ කළු ජාතික ක්‍රීඩකයෙකු වන බොබ් බිමන් ඔලිම්පික් දුර පැනීමේ ඉසව්ව ආරම්භ කරමින් හොඳයි බලමු සුද්දනේ මේ කොල්ලගේ හපන්කම් කියා දුර පැන්නේය මෙහිදී ඔහුගේ ප්‍රබල චිත්තවේගය නිසා අඩි 29 අඟල් 2 ½ ක් දුර පැන්නේය. මිනිසා පරිසරයේ නිර්මානයකි. පරිසරයට අනුව ජීවත් වන ජීවීන් දිගු කලක් ජීවත්වන බව චාල්ස් ඩාවින්ගේ පරිනාමවාදයෙන් ප්‍රකාශවේ. එමෙන්ම ක්‍රීඩා කුසලතාවයන් දියුණුකර ගැනීමේදී ස්වභාවික පරිසරයේදී පුහුණු කටයුතු කිරීමෙන් වැඩි දක්ෂතාවයක් ලබා ගත හැක. මෙම ස්වභාවික පරිසරය විද්‍යාව තුලින් ඇතිකල නොහැක. දක්ෂ ක්‍රීඩකයෙකු ඔක්සිජන් වායුව විශාල පරිමාවක් ලබා ගනිමින් ශක්තිය උපදවා ගනී. ඔක්සිජන් අඩු වූ විට ශරීරය තුල ලැක්ටික් අම්ලය ඇතිවී අපහසුතා ඇති කරයි. කර්මාන්ත ශාලා ගහන නාගරික පරිසරයේ ඇති ඔක්සිජන් වායුව ඉතා අල්පය එසේම රථ වාහන වලින් පිටවන කාබන් මොනොක් සයිඩ් වැනි වායුවක් ඇත. මෙම කාබන් මොනොක් සයිඩ් වායුව නිසා පෙනහළු තුලින් අවශෝෂණය කරන ඔක්සිජන් පරිමාව අඩු කරයි. නමුත් තුරුලතා වලින් ගහන පරිසරයක එම ශාක ප්‍රභාසංස්ලේෂණය මගින් පිටකරන ඔක්සිජන් ප්‍රමාණය ඉතා විශාල බැවින් එවැනි පරිසරයක ක්‍රීඩා පුහුණුවීමේ කටයුතු වලට ඉතා යෝග්‍යය. තවද නාගරික පරිසරයේ අධික ශබ්දය හේතුවෙන් ක්‍රීඩා හැකියාවන් දුර්වල කරයි. ස්වාභාවික පරිසරයේ අධික ශබ්දය නැත. එමෙනම කුරුල්ලන්ගේ මිහිරි නාදයන් නිසා මානසික තත්වයක් ඇති වී එයද දස්කම් දියුණුවට හේතුවේ. මීට අමතරව ක්‍රීඩකයා මහ පොළොව හා සම්බන්ධ විය යුතයි. විශේෂයෙන් තණ තිල්ලේ කාන්දම් බලයක් හෙවත් ජීවයක් තිකුත් වන නිසා මහ පොළොව හා සම්බන්ධ වී ක්‍රියාකාරකම් කිරීමෙන් එම ජීවය ශරීරයට ඇතුළු වේ.

මෙම කාන්දම් බලය නිසා ක්‍රීඩකයාගේ හැකියාවන් වර්ධනය වන බව සොයාගෙන ඇත. ක්‍රීඩා පුහුණුවේදී හැම විටම පාවහන් පැළඳ සිටීම නිසා මෙම ජීවය ශරීරයට ඇතුළුවීම වලකී. එබැවින් නිරාභර්ණය වූ දෙපාවලටත් සැහැල්ලු ඇඳුම් ඇඳ පොළොවේ වැතිර සිටීමෙනුත් මෙම ජීවය ශරීර ගතවේ. බුදුන් වහන්සේ පවා ස්වභාව ධර්මය හා ජීවත්වීමේ වැදගත්කම දේශනාකර ඇත. උන් වහන්සේ ධර්ම දේශනා සඳහාද බොහෝ විට යොදගෙන ඇත්තේය රුක් සෙවනයන්ය. මේ න්‍යාය දත් කරාටේ හා කුන්පු ක්‍රීඩා පුහුණුකරුවන් පාවහන් රහිතව සැහැල්ලු ඇඳුමින් ක්‍රීඩා පුහුණුවන අතර බිම වැතිර භාවනා කිරීමක්ද කරනු ලැබේ. ස්වාභාවික දිය ඇලිවලද මෙම කාන්දම් බලය ඇති නිසා ඔවුන් එම ජලය පානයට හා ස්නානයටද හුරුවී ඇත. එමෙන්ම සොබාදහමෙන් ලැබෙන අළුත් ආහාර පාන යනාදියටද හුරුවී ඇත.

මේ කරුණු අනුව ක්‍රීඩකයින්ගේ දක්ෂතා වර්ධනය කෙරෙහි ක්‍රීඩා වෛද්‍ය විද්‍යාව තාක්ෂණය ක්‍රීඩා මනෝ විද්‍යාව මනා පෝෂණය සහ පරිසරයේ බලපෑම් හේතු වී ඇති බව පැවසිය හැක.

□□

# මවකගේ දිරිය

ආර්. ඒ. සුජීව ප්‍රියන්ත කුමාරතුංග.
2 වන වසර
අධ්‍යාපන විද්‍යා පීඨය.
වවුනියාව.

සැවුලන්ගෙ යාමයේදී
පැදකුණු කොට ගසක් මට
පුංචි පගේ යුද්ධයක්ය
අම්ම අපේ................
දන්නවාද මල්ලියේ

ලේඩියාගේ තුඩින් විකා
වෙට්වූ දිගේ ගලා එන්නේ
කුසගිණි අපෙ නිවාලන්න
සමීර දියයි............
දන්නවාද මල්ලියේ

මේඝ වලා මෝදු වෙලා
මහ ජල කඳ ඇද හැලුනොත්
හෙට දවසක් අද දවසක්
වෙනවා දෙවියනේ !
එපා දෙවියනේ !

දිය ගලමින් ඇග ගැහි ගැහි
පනම් අටක් සොයා ගෙනත්
අපෙ බඩ කට පුරවාලයි
නාඩ ඉදින්................
මගේ පුංචි මල්ලියේ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்பயிற்சியும் சுகவாழ்வும்

ஆக்கம்
**அ. சான்ஸ் மிராண்டா**
2ஆம் ஆண்டு, உடற்கல்வி நெறி.

சுகநிலை என்பது உலக சுகாதார ஸ்தாபனத்தின் வரை விலக்கணத்திற்கிணங்க உடல், உள, சமூக நன்நிலையில் நோய்கள், அங்க உடற்குறைபாடுகள் அற்ற பூரண நிலையே ஆகும். மேலும் நாளாந்த வாழ்க்கையில் தன்னைப் பொருந்தி வாழ்வதற்கு ஏற்ற தன்மையை கொண்டவராக இருக்க வேண்டும். வேறொருவர் உதவியின்றி தனது முழுக் கடமைகளையும் ஆற்றும் தகைமை பெற்றிருப்பது சாலச் சிறந்தது. சுருங்கக் கூறின் ஒருவர் வெளிப்படையான வெளிப்படையற்ற நோய்கள் இன்றி வாழ்வதே சுக நிலையாகும்.

எனவே நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகக் கொள்வதற்கு நல்ல சத்துள்ள உணவுகளை நாம் உண்ண வேண்டியிருக்கின்றது. ஆசைக்காக சத்துக் குறைந்த, விலை குறைந்த, ருசிக்காக விலை உயர்ந்த உணவுகளை உண்ண வேண்டியதில்லை.

எமது உடலில் தசையும், எலும்பும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. நரம்பு இயக்கங்களின் கட்டுப்பாடு தசையில் தங்கியிருக்கின்றது. எனவே எமக்கு தசையும் நரம்பும் ஒத்திசைவது மிகவும் முக்கியமானது. மேற்குலகத்தவர் தசைகளை உபயோகிக்காமல் கருவிகளை உபயோகிக்கின்றனர். எமது உடல் திணிவில் 40% தசையும் 10% வீதம் எலும்புமாகும். நாம் இன்று நாகரீக உலகில் வாழ்கின்றோம். தசைகளை உபயோகிக்காமல் விடுவோமாயின் நோய் எம்மை இலகுவில் தாக்க ஏதுக்கள் உண்டு. எனவே தசைகள் நலம் பெற அப்பியாசம் மிக வேண்டற்பாலதாகும். தாம் காலையில் எழும்பியதும் உடற்பயிற்சியில் ஈடுபடும் மேற்கு நாட்டவர், பின் தமது கருமங்களுக்கு வாகனங்களில் செல்கின்றனர். தசைகளுக்கு சுருக்கி, விரிக்க யோகாசனம் இன்றியமையாததாகும். இதுவும் ஒருவகையான சிறந்த அப்பியாசமாகும். தசைகள் நீண்ட கலங்களாகும். மூளையில் இருந்து வரும் முண்ணான் நரம்புகள் எமக்கு ஆணைகளைப் பிறப்பிக்கின்றன.

மூளையில் சரியான இயக்கம் நலம் பெற வளருகின்ற பிள்ளைகள் கட்டாயமாக பல்வேறு விளையாட்டுக்கள், செயல்பாடுகளில் ஈடுபடவேண்டும். விளையாடும் போது தட்டுத் தடுமாறி பல விடயங்களை கற்கின்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. இதனால் மூளையில் சரியான இயக்கமும், சமநிலையும் அபிவிருத்தியடைகின்றன.

"Use it or loose it" எனவே தசையை நன்கு பாவனைப் படுத்த வேண்டும். இன்றேல் அவற்றை இழக்க வேண்டும். அவயங்களை பாவிக்க வேண்டும். இன்றேல் அத்தசைகள் செயலிழக்கப்படுகின்றன. நாம் முதலில் உடற்பயிற்சிகளைச் செய்வதனால் நோவாக இருக்கும். பின்னர் தொடர்ச்சியாகச் செய்வதினால் தசை பலமடையும். பின்னர் அத் தொடர்பை விடுவோமாயின் பழையபடி தசை நலம் குறைய ஆரம்பிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது மூட்டுகள் தொழிற்படுவதால் அவை வேகமாகத் தாக்கப்படுகின்றன. உதாரணமாக வயது சென்ற காலத்தில் மூட்டுக்கள் பழுதடைவதால் பலர் கஷ்டப் படுகின்றனர். மூட்டுக்கள் நன்கு வளர்ச்சியடைவதற்கு பாரமேற்றி அப்பியாசித்தால் மூட்டுக்கள் பலமடைய மிகவும் உதவுகின்றது. ஒருவர் 100m ஓடவேண்டுமானால் அவருக்கு அதிக விசை அழுத்தம் ஏற்படுகிறது. அவருக்கு அதற்கான ஆத்தம் செய் அப்பியாசம் தேவைப்படுகிறது. கசியிழையம் அதற்குரிய உணவுப் பொருளை பெற வேண்டியுள்ளது. பிள்ளைகள் வளர்ச்சி அடைவதற்கு அப்பியாசம் மிக முக்கியமான தாகின்றது. இதற்கு புரதமும் உடற்பயிற்சியும் மிகவும் அவசியமாகின்றது. எலும்பு நீள்வதற்கு இது மிக முக்கிய மானதாகும். எனவே எலும்பு வளர்ச்சிக்கு சத்துணவோடு பயிற்சியும் மிக முக்கியமானதாகும். பாரமேற்றி பயிற்சியளிக்கா விட்டால் எலும்பு பலமடைய மாட்டாது. பெரும்பாலும், பெண்களுக்கு 40 - 45 வயதில் Benapose என்ற நோய் மாதவிடாய் நிற்கும் காலத்தில் ஏற்படுகின்றது. ஏற்கனவே இவர்கள் அப்பியாசம் செய்தவர்களாக இருந்தால் இந் நோய் ஏற்பட வாய்பிருக்காது. இது மூட்டுகளில் ஏற்படும் ஒரு நோயாகும்.

பக்ரீறியா பல்லைக் கெடுத்து விடுகின்றது. பல்லின் கல்சிய இழப்பினால் பல வித பல் நோய்கள் ஏற்படுகிறது. அமிலம் கல்சியத்தை கரைத்து விடுகிறது. எனவே புளுக் கொடியல், வறுத்த புளியங் கொட்டை, உழுந்து போன்றன பற்களுக்கு சிறந்த அப்பியாசம் ஆகும்.

நரம்புகளுக்கு வரும் கணத்தாக்கங்களும் நல்ல தசைக்குரிய சக்தியும் எமக்கு மிக முக்கியமாகும். எனவே குருதியைப் பற்றியும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டும். இவை எந் நேரமும் மூளைக்குச் செலுத்தப் பட்டுக் கொண்டிருக்க வேண்டும். தசைகள் அப்பியாசப் படுத்தப்பட்ட குருதி எந்த நேரமும் மூளைக்குச் செலுத்தப்பட வேண்டியதொன்றாகும். அகஞ் சுரக்கும் சுரப்பிகள், சுவாச உறுப்புக்கள் குருதிக் கலன்கள் தன்னியக்க அபிவிருத்தி பெறுவதுடன் பல அனுகூலகங்களையும் பெறுகின்றன. எமது உடல் 3 மாடிக் கட்டிடம் போன்றதாகும். மூளை அதாவது தலை, உடல், கால் என்பனவாகும். எனவே இருதயம் குருதியைப் பம்பி போன்று மூன்று மாடிக் கட்டிடத்திற்கு அனுப்பிக் கொண்டிருக்கின்றது. அப்பியாசம் செய்யும் போது சகல தொகுதிகளும் ஒன்று சேர்ந்து இசைவாக்க படுகின்றது. நீர் போல வியர்வை வெளிவிடப்படுகின்றது. குருதியின் கனவளவு கூட குருதி அமுக்கம் ஏற்படுகின்றது.

விளையாடுவதற்கு முன் சாப்பிடக் கூடாது. மூளைக்கு ஒரே அளவு குருதி செலுத்தப்பட வேண்டும். தன்னியக்க நரம்பு, தசைகள் சுருங்கும் போது தசைக் குருதியை பாய்ச்சி விடுகின்றது. இதயம் பம்பிபோன்று குருதியைப் பாய்ச்சுகின்றது. அது போன்றே தசையும் ஒரு பம்பி. யோகாசனம் செய்யும் போது தசையை மடக்கி வைத்திருக்கும்போது குருதி விநியோகம் நின்று விடுகின்றது. சிறுகுடல் வெறுமனே இருக்கும் வேளையில் அப்பியாசம் செய்யப்படல் வேண்டும். யோகாசனம் செய்யும் போது குருதி அமுக்கம் குறைய வாய்ப்புண்டு. எமது Heart Rate 75% மாகும். இதயம் சுருங்கும்போது குருதித்தசை சுருங்குகின்றது. இதயம் சுருங்கி விரிய 3 நொடி தேவைப்படும். சுருங்க 3 நொடியும் இழக்குவதற்கு 5 நொடியும் செலவிடப்படுகின்றது. (60/70)

இன்று குருதி நோய்கள் எல்லாவற்றிலும் முன்னிலையில் நிற்கின்ற Angina சொற்ப நேரம் வேலைசெய்யும் போது ஏற்பட்டுவிடுகின்றது. இந்நோய் கொழுப்பு பொருள் படிவதால் ஏற்படும் ஒரு நோயாகும். இதனால் குருதி சரியாக உடலுக்குச் செல்வதில்லை. தினசரி அப்பியாசம் செய்வதனால் இந்நோய் குறைவடையும். மனத்துன்பம் புகைத்தல் போன்றவையே இதன் காரணியாகும். இவை வராமல் தடுப்பதாகக் கொள்வதே எமக்கு நன்மை தருவதாகும். அப்பியாசம் இதற்கு நல்ல மருந்தாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டங்களில் ஈடுபடும்போது 2, 3, மணித்தியாலங்களுக்கு முன் உணவு உண்ண வேண்டும். காலையில் உணவு உண்ணாது விட்டால் இழந்த தசைகளை திரும்பப் பெற முடியாது. உத்தியோகம் பார்ப்பவர்களும் உடலில் கொழுப்பு படிய வாய்ப்பு பெற்று தமது அழகை குறைத்துக் கொள்கின்றனர். கடுமையான உழைப்பாளிக்கு அளவுக்கு மிஞ்சிய தசை இருப்பதில்லை. இடை நடு அதாவது சமவிகித உடல் விரும்பத்தக்கது. சலரோகம் போன்ற நோய்களுக்கு யோகாசனம் மிகவும் சிறந்தது.

உளவியல் ரீதியான விஞ்ஞான ஆராய்ச்சியின் படி உடம்பு தகுதியானதென உணர்ந்தாலே சுகநிலை என்று கொள்ளலாம். anxiety போன்றவற்றால் பாதிப்படையாது இருத்தல் அவசியமாகும். எப்பொழுதும் சுயநம்பிக்கை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

ஒரு மாணவன் நன்கு படிப்பதற்கு அப்பியாசம் மிக முக்கியமாகும் என்பதை நாம் வலியுறுத்த வேண்டியதாகும். நாம் அப்பியாசம் செய்வதனால் நாடித் துடிப்பு அதிகரிக்கும் 70 - 80 இருந்து 20% அதிகரிக்கும். சைக்கிள் ஓடுதல். நின்ற இடத்தில் ஓடுதல், நீந்துதல், விறகு வெட்டுதல், கொத்துதல், நீர் பாய்ச்சுதல் போன்ற விறு விறுப்பான செயல்பாடுகளும் சுவாச இருதய மாற்றங்களை கொண்டுள்ளதாகும்.

எனவே நாளாந்தம் இடம்பெறும் மனஇறுக்கம் தசை நலக்குறைவு என்பவற்றை அகற்றி புத்துணர்வு பெறுதல் அவசியமாகும். இரவு பகலாக படித்தல், கடினமான வேலை போன்றன ஆளுமை வளர்ச்சியைப் பாதிக்கும். அத்துடன் எதிர்கால வாழ்க்கையையும் பாதிக்கும். ஒருவர் குறைந்தது, அரை மணித்தியாலமாவது உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

அன்றாட வாழ்வில் இழந்த மனோ வலிமையை பெறுவதற்கு மேற்குலகத்தினர் பின்வரும் ஏழு சுகாதார பழக்கத்தைப் பின்பற்றுகின்றனர்.

1. ஒழுங்கான உடற்பயிற்சி
2. ஒழுங்கான உணவு
3. தினமும் காலை உணவு
4. எப்பொழுதும் அளவான நிறையைப் பேணுதல்
5. புகைத்தலைத் தவிர்த்தல்
6. மதுப்பழக்கமிருப்பின் அளவான பாவனை
7. 7 8 மணித்தியாலயம் ஆழ்ந்த நித்திரை

அப்பியாசம் அல்லது வேலை செய்வதினால் மூச்சு வாங்கும் தன்மையும் இதயத் துடிப்பு ஏற்படின் இவையும் அப்பியாசம் ஆகும். போதிய உணவு உண்டபின், துலா மிதித்தல் விறகு கொத்துதல் போன்றவையும் அப்பியாசங்களாகக் கருதப்படலாம். நித்திரையில் படித்தவற்றை ஒழுங்கு படுத்த உதவும் உடற்பயிற்சியினால் நோய் எதிர்ப்பை பெறும் இசைவாக்கம் பெறுகின்றார்கள். ஒருவரின் உள நெருக்கடியைக் குறைத்துக் கொள்ள முடிகிறது. எனவே உடற்பயிற்சி சுகவாழ்வுக்கு இன்றியமையாததாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூரமான என் நண்பிக்கு

சாடட்சரம் கீர்த்தினி
2ம் வருடம்
உடற்கல்விப் பிரிவு

நண்பியே!
உன் நட்பு இன்றி
வெடித்து சிதறி கிடக்கிறதடி
என் இதய சுவடுகள்
உனை கண்டு
யுகங்கள் பல சென்றதினால்
என் தின குறிப்பு ஏட்டின்
ஒவ்வொரு பக்கமும்
வெறுமை ஆகவே உள்ளது
நீர்!
தூரமான போது
உடைக்கப்பட்ட - என்
இதய அறை சுவடுகள்
பிரிவு எனும் துன்பத்தை - ஊட்டி
எனை தூரம் ஆக்கி விட்டது.
நண்பியே!
உனை தவிர்த்து
என் பிரிவுக்கு எவ்வாறு
உரு கொடுப்பேன்
நண்பியே!
நீரும் நானும் இருப்பது
பார்க்க முடியாத
தொலை தூரம்தான் - எனினும்
எமது நட்பு அனுபவங்கள்
பிரதிபலித்து கொண்டு இருக்கும்
பிம்பங்களை ஏமாற்றுவது எப்படி
நண்பியே!
நீர் தூரமாகியது - உன்
வாழ்க்கையினாலே தான்
ஆனால்
எனது நட்பு எப்போதும்
உனை நாடியே வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# සිතනු මැන මොහොතක්!

නාලිකා නිශාන්ති ඩයස්.
2 වසර

සිහල සොයුරනේ.........
දමිළ සොයුරනේ.........
එකම ධජයකට
බිම් අහලකට
ඇයිද? රුදු සටනක්......
දමිළ ලේ යයි කියා
සහල ලේ යයි කියා
නැතේ කිසිඳු වෙනසක්......
සමගියේ නාමයෙන්
එසවූ රුදුරු අවි
හෙලා පහතට මොහොතක්......
එකම සොයුරන් ලෙසින්
එක්සත්ව එක්සිත්ව
නංවමු ලක් මැණියන්......
එවිට.
සුවහසක් ඔබ දැන්
ලක් මැණියන් දෑ
සිපගනියි
සෙනෙහසින්...........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பாடல்

# பாலர் எமது வகுப்பறை

வி. செல்வரூபி
2ம் வருடம்
ஆரம்ப நெறி

நாங்கள் படிக்கும் வகுப்பறை
நல்ல தொரு வகுப்பறை
பாலர் நாமும் விரும்பியே
பாடம் படிக்கும் வகுப்பறை

சின்னச் சின்ன மேசைகள்
சிறிய நல்ல கதிரைகள்
வண்ணமாக அடுக்கியே
வைத்தி ருக்கும் வகுப்பறை

பேனா பென்சில் புத்தகம்
பெரிய கரும் பலகையும்
தண்ணீர்ப் போத்தல் சாப்பாடும்
தாங்கி யுள்ள வகுப்பறை

சின்ன உருவம் செய்திட
சிறந்த படங்கள் வரைந்திட
எண்ணம் போல விளையாட
ஏற்ற பொருட்கள் இருந்திடும்

சுற்றி வரப் படங்களும்
சுவரில் காட்சி அளித்திடும்
கற்று நாங்கள் மகிழ்ந்திட
கண்ணுக் கழகு தந்திடும்

பாடம் சொல்லும் ரீச்சரும்
படிக்கும் சிறிய பாலரும்
கூடி ஒன்றாய் இருந்திடும்
குதூகலமான வகுப்பறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# දැයට පිපුණු මල්

කථිකාචාර්යය.
පූජ්‍ය කල්පේ ආනන්ද මූර්ති හිමි.
බී. ඒ. අධ්‍යාපන ඩිප්ලෝමා.

ශිල්ප හදරා
අකුරු කියා දෙන්නට
ගුරු ගෙදරට ආ ගමනේ
අපා, දෙපා, මැද සිව්පා හටනකි
ජය පැරදුම නොපෙනන ඉම අද්දර
වන්නි ඉමේ තල්වැට අයිනේ
හෙළන සුසුම් හඬ
ඇසුණා දෝංකාර වී
දෙපළුව වුණා ඒ හඬ ගිණි කඳ මැද්දේ
දෙපා සතෙකු වී උපත ලැබුවත්
ලයේ රැඳුණු උණුසුම තෙමුණා
මම, ඔබ, අපි ගැන
දැනුනා අනුකම්පා හද රිදුණා
දැයේ පිපුණු පල් දැත් ඔසවමින්
සොයුරු ප්‍රේමය දෝර ගලලා
සිහල දමිළ මුස්ලිම් සොහොයුරු අපි
එකම පවුලේ දරු කැලක් වෙලා..........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

With Best Compliments

from

V

MARKANDU

&

SONS

136, Bazaar Street,

Vavuniya.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிக்குரியவர்கள்

- ஆசியுரை, வாழ்த்துரை வழங்கிய பெருந்தகைகள்,
- ஆக்கங்கள் தந்துதவிய விரிவுரையாளர்கள் பயிற்சியாளர்கள்,
- விளம்பரங்கள், நிதியுதவிகள் தந்துதவிய வர்த்தகப் பெருமக்கள், நிறுவனத்தார்கள்,
- விளம்பரங்கள் சேகரிக்க உதவிய பயிலுனர்கள், எமது நிறுவன ஊழியர், ஆகியோர்,
- விழாவினை ஏற்பாடு செய்து சிறப்புற நிகழ்த்த உதவிய விரிவுரையாளர்கள், பயிலுனர்கள், கலை நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய கலைஞர்கள்,
- இச் சஞ்சிகையை அழகுற அமைத்துத்தந்த ஸ்ரீ கணேச அச்சகத்தினர்,
- விழாவிற்கு வருகை தந்த பிரதமவிருந்தினர், சிறப்பு விருந்தினர்கள்,
- எல்லா வகையிலும் எந்நேரமும் எமக்கு உதவிவரும் எமது பீடாதிபதி திரு. செ. அழகரெத்தினம் அவர்கள்,
- அட்டைப்படம் அழகுற அமைப்பதற்கு உதவிய எமது விரிவுரையாளர் திரு. எஸ். சின்னத்துரை அவர்கள்,
- அச்சிடுதலை ஒப்பு நோக்கிய திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் அவர்கள்

## அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றிகள்.

**மலர் பொறுப்புக் குழுவினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments from*

# ISANKA STORES

## AMBALAN GODELLA

**2nd MILE POST,**
**HOROWPOTHANA ROAD,**
**VAVUNIYA.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org